பக்கங்கள்: முப்பத்துஇண்டு+6

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 29 ஞாயிற்றுக்கிழமை (14.08.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 261



03 நாலும் தெரியாத பேர் வழிகள் செய்கிற கூத்து



17 சண்டித்தனத்துக்கு விழுந்த சாட்டையடி



19 வளமான குரல் கொண்டவர்



29 அனைத்தும் இழந்தது இந்தியா

பஸில் ஒன்றையும் கோத்தபாய மற்றொன்றையும் தெரிவித்து மக்களைக் குழப்பிவரும் நிலையில்

# ஜனாதிபதி யார் பக்கம்?

## தெளிவுபடுத்தக் கோருகிறது கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 14

இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு, தமிழர்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளும் விடயத்தில் இந்த அரசு தமிழ் மக்களையும் உலகையும் ஏமாற்றுகின்றது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அதிகாரமிக்க சகோதரரான கோத்தபாய தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு தேவை இல்லை என்கிறார். மற்றொரு சகோதரரான பஸில் ராஜபக்ஷவோ, பேச்சு மூலம் தீர்வு எட்டப்படும் என்கிறார். இவர்களில் எவரின் பக்கம் தான் இருக்கிறார் என்பதை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு, குறிப்பாகத் தமிழ் மக்களுக்குத் தெளிவு படுத்த வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன்.

இந்தியாவின் 'ஹெட்லைன்ஸ் ருடே' தொலைக்காட்சிக்கு அண்மையில் பேட்டி அளித்திருந்த பாதுகாப்புச் செயலர் கோத்தபாய, ''புலிகள் அழிக்கப்பட்டு விட்டார்கள் என்பதால் இனி தமிழர்களுடன் அதிகாரப் பகிர்வுகள் எதுவும் தேவையில்லை'' என்று தெரிவித்திருந்தார்.

தற்போது நடைமுறையில் இருக்கும் ஒற்றையாட்சி அரசமைப்பு முறை மாற்றப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தி வரும் நிலை

பக் 31

## என் மகனைக் காப்பாற்றுங்கள்; பேரறிவாளனின் தாய் உருக்கம்

சென்னை, ஒக. 14


20 ஆண்டுகளாகச் சிறையில் வாடிய தனது மகனை தூக்குத் தண்டனையில் இருந்து காப்பாற்றுமாறு, ராஜீவ்காந்தி கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோர், தமது தண்டனையை குறைக்குமாறு கோரி இந்திய ஜனாதிபதியிடம் சமர்ப்பித்திருந்த கருணைமனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு

பக் 31

தமிழன் வினைகள் அறும்



நல்லூர்க் கந்தனின் மஞ்சரதப் பவனி நேற்று இடம்பெற்றது. கிட்டத்தட்ட பூர்த்தி நிலையை எட்டிவிட்ட, ஆலயத்தின் தெற்கு வாசல் இராஜ கோபுரத்தைத் தாண்டி மஞ்சத்தில் உலாவரும் கந்தப் பெருமானின் திருக்கோலம் காண பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் திரண்டிருந்தனர். (86)

## இந்தியா மட்டும் இலங்கையில் போர்க்குற்றம் புரியவில்லையா?

### கொழும்பு குற்றவாளி எனில் டில்லியும் குற்றவாளிதான் என்கிறார் கோமின் தயாசிறி

கொழும்பு, ஒக். 14

போர்க் குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறவேண்டும் என்று இலங்கை அரசு மீது இன்று தாக்குதல் தொடுத்துள்ளவர்கள் இந்திய அமைதிப்படையினால் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் குறித்து ஏன் வாய் திறப்பதில்லை?

இவ்வாறு சிங்களத் தேசியவாதியும் சட்டநிபுண

பக் 31

## தமிழர் பற்றி தவறாகச் சொன்ன அமெ. தூதர் கேட்டார் மன்னிப்பு

சென்னை, ஒக. 14

இந்தியாவுக்கான அமெரிக்கத் துணைத்தூதுவர் நிகழ்ச்சி ஒன்றில் வைத்து ''தமிழர்கள் கறுப்பானவர்கள்; அழுக்கானவர்கள்'' என்று அர்த்தம் வரக் கூடியவகையில் தெரிவித்த கருத்துக்கு அமெரிக்கத் தூதரகம் வருத்தம் வெளியிட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள தனியார் பல்கலைக்கழகங்களில் ஒன்றான எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய அமெரிக்கத் துணைத் தூதுவர் மொறீன் சாவோ தெரிவித்த கருத்துக்களே சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளன.

20 ஆண்டுகளுக்கு முன்னர்தான் கல்வி கற்றுக் கொண்டிருந்த போது கலாசாரம் மற்றும் மொழி பற்றி அறிந்து கொள்ள இந்தியாவுக்கு வந்ததாக கூறிய சாவோ, அதன்

பக் 31

## யாழ். பழைய பூங்காவை ஆக்கிரமிக்க துடிக்கின்றன அரச திணைக்களங்கள்

யாழ்ப்பாணம், ஒக. 14

யாழ். பழைய பூங்கா வளாகத்தை ஆக்கிரமித்து அங்கு கட்டடங்களை அமைப்பதில் அரச திணைக்களங்கள் ஆர்வமுடன் செயற்பட்டு வருகின்றன.

பழைய பூங்காவுக்கு என வரையறுக்கப்பட்ட நிலம் 20 ஏக்கர் மட்டுமே. ஆனால், அரச திணைக்களங்களிடம் இருந்து 90 ஏக்கர் நிலத்துக்கான கேள்விகள் வந்து குவிந்துள்ளன என்று அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் உள்ள வரலாற்றுப் புகழ்மிக்க இடங்களில் ஒன்றான பழைய பூங்காவையும் அங்கு நிற்கும் நூற்றாண்டு

பக் 31

## மன்னாரிலும் கிறீஸ் பூத அச்சம்

மன்னார், ஒக. 14

நாட்டின் பல பாகங்களையும் கலக்கி வரும் கிறீஸ் பூதங்கள் மன்னார் மாவட்டத்துக்குள்ளும் புகுந்துவிட்டதாகக் கிளம்பிய வதந்தியால் மன்னாரில் நேற்று மக்கள் மத்தியில் பதற்றமும் அச்சமும் நிலவின.

பக் 31

## ஜனாதிபதி நாடு திரும்பினார்

தனது நான்கு நாள் சீனப் பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று நாடு திரும்பினார் என்று அரசு அறிவித்துள்ளது. ஜனாதிபதியின் இந்தப் பயணம் உத்தி

பக் 31

ஐரோப்பிய நாடுகளுக்கு மிகக் குறைந்த கட்டணத்தில் பயணக் காப்புறுதிகள் & பயணச் சீட்டுகள் பெற்றுக் கொள்ள...
0773629799
0777380557
AiR MARK Travels & Tours
IATA




நவீன் செரமிக்
Naveen Ceramic
#212, பலாலி வீதி, யாழ்ப்பாணம் ☎ 021 222 0033 / 021 222 0044
#5, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம் ☎ 021 222 4777 / 021 222 4888
Metro Engineering (Pvt) Ltd

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com

# அனுமதியற்ற தங்கு விடுதிகளை முதல்வர் அகற்றாது இருப்பது ஏன்?

## சட்ட நடவடிக்கைக்கு தயாராகிறார் ஆளும் தரப்பு உறுப்பினர் நிசாந்தன்

யாழ்ப்பாணம், ஓக.14

அனுமதியின்றி சட்ட விரோதமாக இயங்கி வரும் தனியார் தங்குமிட விடுதிகளுக்கு எதிராக யாழ்.மாநகர சபை முதல்வர் இன்னும் சட்ட நடவடிக்கை எடுக்காதது ஏன்? என்று சபையின் ஆளும் தரப்பு உறுப்பினரான எஸ்.நிசாந்தன் கேள்வி எழுப்பி உள்ளார்.

குடிமனைகளுக்கு மத்தியில் இருக்கும் இத்தகைய சட்ட விரோத தங்குமிட விடுதிகளால் அயலிலுள்ள குடியிருப்பாளர்களின் கிணற்று நீரில் மல நீர் கலந்து மாசடைந்து வருகிறது. ஆனால் இது பற்றிய எந்த அக்கறையும் இன்றி இருக்கிறார் முதல்வர் - என்றார் நிசாந்தன்.

யாழ்.மாநகரசபைக்கு உட்பட்ட பகுதியில் குறிப்பாக பலாலி வீதி, நாவலர்வீதி, மானிப்பாய் வீதி, முஸ்லீம் கல்லூரி வீதி, ஆஸ்பத்திரி வீதி ஆகிய வீதிகளை அண்டிய பகுதிகளில் யாழ்.மாநகரசபையின் அனுமதியின்றி பல தனியார் தங்குமிட விடுதிகள் இயங்கி வருகின்றன. நாளாந்தம் புதிய விடுதிகளும் ஆரம்பிக்கப்படுகின்றன.

''இந்த விடுதிகளால் அயற்பகுதி மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது. அது மட்டுமன்றி அயற்பகுதி வீடுகளின் கிணற்று நீரிலும் கழிவு நீர் கலக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. கிணற்று நீரானது ஒரு விதமான மணத்தோடு நிறமும் மாறி வருகிறது என்று மக்கள் என்னிடம் முறையிடுகிறார்கள்'' என்று நிசாந்தன் தெரிவித்தார்.

அனுமதியின்றிச் சட்ட விரோதமாக இயங்கும் இந்த விடுதிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சபைக்கும் சபை முதல்வருக்கும் முறைப்பாடுகள் செய்யப்பட்டும் இதுவரை முதல்வர் நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டும் நிசாந்தன், சபை உறுப்பினர்கள் இந்த விடயம் தொடர்பாக பலமுறை சபை முதல்வரின் கவனத்துக்கு கொண்டு வந்திருந்தும் எவ்வித பயனும் இல்லை'' என்று விசனம் தெரிவித்தார்.

''இன்னும் இரண்டு வார காலத்துக்குள் தனியார் விடுதி உரிமையாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் இந்த தனியார் விடுதிகளை நடத்த அனுமதித்த சபை முதல்வருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவும் தயங்கமாட்டேன்'' என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(உ-14)

## விழிப்புணர்வு வீதி நாடகம்

சர்வோதய நீதிச்சேவை இயக்கத்தின் ஏற்பாட்டில் கிராம மட்டப் பெண்களுக்கான சட்ட ரீதியான விழிப்புணர்வு செயற்றிட்டத்தின் கீழ் விழிப்புணர்வூட்டும் வீதி நாடகம் ஒன்று வண்ணை சிவன் சனசமூக நிலையத்தில் இன்று ஞாயிறு பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.


கிராம மக்கள் தமது முக்கிய ஆவணங்களைப் பெறுவது, அவற்றின் முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்வாக இந்த நாடகம் அமைகின்றது.

பிறப்பு இறப்புச் சான்றிதழ்கள், திருமணப் பதிவுச் சான்று, இலவச சட்ட ஆலோசனைகள் என்பனவும் நிகழ்வை தொடர்ந்து மக்களுக்கு வழங்கப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஒ-10)

## முன்னாள் போராளிகள் 150 பேர் விடுவிப்பு

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் 150 பேர் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை பெற்றோரிடமும், உறவினர்களிடமும் ஒப்படைக்கும் நிகழ்வு, புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுசந்த ரணசிங்க தலைமையில் வவுனியா கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.




யாழ்., கிளி, முல்லை மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படுவதுடன் வவுனியா, மன்னாரில் தெளிவான கால நிலை காணப்படும்.

## கலை விழாவும் பரிசளிப்பும்

நவாலி, ஓக. 14

நவாலி முருகானந்தா சன சமூக நிலையத்தின் மணிவிழா ஆண்டின், கலை விழாவும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை நிலையத் தலைவர் செ.மகேந்திரன் தலைமையில் சனசமூக நிலைய மண்டபத்தில் மாலை 6 மணிக்கு நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண கல்வி அமைச்சரின் ஆலோசகர் சு.டிவகலாலாவும், சிறப்பு விருந்தினர்களாக வலி.தென்மேற்குப் பிரதேச சபை சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.பகீரதனும், வலி.தெற்குப் பிரதேச சன சமூக நிலையங்களின் சமாசத் தலைவர் என்.எக்ஸ்.சர்வானந்தாவும் கலந்து கொள்வர். (ஒ-10-100)

# வடக்கு உள்ளூராட்சிச் சபைகளின் தலைவர், துணைத் தலைவர் விவரம்

யாழ்ப்பாணம், ஓக.14

அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் வெற்றி பெற்றவர்களின் பெயர் விவரங்கள் அடங்கிய விசேட வர்த்தமானி அறிவித்தல் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப் பிரியவினால் அந்தந்த உள்ளூராட்சி சபைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சபைகளுக்குத் தெரிவான தவிசாளர்கள், துணைத் தவிசாளர்கள், உறுப்பினர்கள் ஆகியோரின் பெயர் ஜூலை 30 ஆம் திகதி 1716/32 இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவான தவிசாளர்கள், துணைத் தவிசாளர்களின் விவரம் வருமாறு:

*வல்வெட்டித்துறை நகரசபை
நடராசா அனந்தராஜ் (தவிசாளர்), கனகலிங்கம் சிவாஜிலிங்கம்(துணைத் தவிசாளர்)

*பருத்தித்துறை நகர சபை
சபாநாயகம் இரவீந்திரன் (தவிசாளர்), சிதம்பரப்பிள்ளை பத்மநாதன் (துணைத் தவிசாளர்).

*சாவகச்சேரி நகரசபை
இறப்பியேல் தேவசகாயம் பிள்ளை(தவிசாளர்), குமாரசாமி சதாசிவமூர்த்தி (துணைத் தவிசாளர்).

*காரைநகர் பிரதேச சபை
வேலாயுதம் ஆனைமுகன் (தவிசாளர்), சந்திரசேகரம் துர்கேஸ்வரன் (துணைத் தவிசாளர்)

*ஊர்காவற்றுறை பிரதேச சபை
மருதையினார் ஜெயகாந்தன் (தவிசாளர்), பரமலிங்கம் அருள்கரன் (துணைத் தவிசாளர்).

*நெடுந்தீவு பிரதேச சபை
டானியல் ரெக்சியான் (தவிசாளர்), சுப்பிரமணியம் கோபாலசிங்கம் (துணைத் தவிசாளர்).

*வேலணை பிரதேச சபை
சின்னையா சிவராசா (தவிசாளர்), சின்னத்தம்பி கார்த்திகேசன் (துணைத் தவிசாளர்).

*வலிகாமம் மேற்கு பிரதேச சபை
ஐங்கரன் நாகரஞ்சினி (தவிசாளர்), நவரத்தினம் சிவரஞ்சன் (துணைத் தவிசாளர்).

*வலிகாமம் வடக்கு பிரதேச சபை
சோமசுந்தரம் சுகிர்தன் (தவிசாளர்), சண்முகலிங்கம் சஜீவன் (துணைத்தவிசாளர்).

*வலிகாமம் தெற்கு-மேற்கு பிரதேச சபை
ஜெபநேசன் அந்தோனி பிள்ளை(தவிசாளர்), சண்முகம் சிவகுமாரன் (துணைத் தவிசாளர்)

*வலிகாமம் தெற்கு பிரதேச சபை
தியாராசா பிரகாஷ் (தவிசாளர்), இராசையா பரமேஸ்வரலிங்கம்(துணைத் தவிசாளர்).

*வலிகாமம் கிழக்கு
அன்னலிங்கம் உதயகுமார் (தவிசாளர்), கந்தையா தர்மலிங்கம் (துணைத் தவிசாளர்).

*வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை
பொன்னையா தியாகேசு (தவிசாளர்), ஐயாத்தம்பி சாந்தசொரூபன் (துணைத்தவிசாளர்).

*பருத்தித்துறை பிரதேச சபை
பூபாலசிங்கம் சஞ்ஜீவன் (தவிசாளர்), மாணிக்கம் லோகசிங்கம் (துணைத் தவிசாளர்).

*சாவகச்சேரி பிரதேச சபை
சிற்றம்பலம் துரைராசா (தவிசாளர்), கணபதிப்பிள்ளை யோகராசா (துணைத்தவிசாளர்).

*நல்லூர் பிரதேச சபை
பரமலிங்கம் வசந்தகுமார் (தவிசாளர்), ரவிதாஸ் கோமதி (துணைத்தவிசாளர்).

*பச்சிலைப்பள்ளி பிரதேச சபை
பர்ணாந்து டொமினிக் அன்ரன் (தவிசாளர்), பத்மதாசன் றெஜிதாசன் (துணைத்தவிசாளர்).

*கரைச்சிப் பிரதேச சபை
வைத்திலிங்கம் குகராசா (தவிசாளர்), வடிவேல் நகுலேஸ்வரன் (துணைத் தவிசாளர்).

*பூநகரி பிரதேச சபை
பொன்னம்பலம் சிறிஸ்கந்தராசா (தவிசாளர்), தங்கராசா தங்கேஸ்வரன் (துணைத் தவிசாளர்).

*துணுக்காய் பிரதேச சபை
வீரகத்தி இராசரத்தினம் (தவிசாளர்), சபாரத்தினம் செல்வரத்தினம் (துணைத் தவிசாளர்). (த-207)

# நிகழ்வுகள்

### நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக.14

அராலியூர் பிரம்மஸ்ரீ சிவசாமிக் குருக்கள் பரமேஸ்வர சர்மாவின் பத்தாவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு ''கீர்த்தனாஞ்சலி'' நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கந்தரோடை அருளானந்தப்பிள்ளையார் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சர்வானந்தமய பீட அமைப்பாளர் பிரம்மஸ்ரீ ப.சிவானந்த சர்மா தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

### கருத்தரங்கு

இலங்கை மத்திய வங்கியின் வடமாகாண அலுவலகத்தின் ஏற்பாட்டில் தடை செய்யப்பட்ட பிரமிட் திட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பொது நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. ஆர்வமுள்ள அனைவரும் இதில் கலந்து கொள்ள முடியும். (ம-313)

### கருத்தமர்வு

சிவஸ்ரீ பிரபாகரேஸ்வரக் குருக்கள் அறக்கொடை நிதியத்தின் அனுசரணையில் குருகுலக் கல்வி தொடர்பான கருத்தமர்வு வடமராட்சி அல்லையம்பதி முருகன் ஆலயத் திருமண மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆலயத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ ராம் சபாநாதக் குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஆசியுரையை கோவை கண்ணகை அம்மன் ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ பரம சண்முகராஜக் குருக்களும், சிறப்புரையை வல்வை பரமேஸ்வர மனோகரக் குருக்களும், கருத்துரையை நல்லூர் பிரம்மஸ்ரீ ப.ராஜா கோபாலசர்மாவும் நிகழ்த்துவர்.

அதனைத் தொடர்ந்து தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெறும். இதில் வல்வெட்டித்துறை இலங்கை வங்கிக் கிளை முகாமையாளர் கலந்து கொண்டு மாணவர்களைக் கௌரவிப்பார். (ம-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சார சபை ஊழியர் நேற்று மாலையில் திருத்தப் பணியின் போது மின் தாக்கிப் பலி

## குருநகரில் கம்பத்தில் இருந்து சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக.14

உயர் அழுத்த மின்மார்க்கத்தில் திருத்த வேலைகள் முடிந்த பின்னர் அதனைச் சக மின்மார்கத்துடன் இணைத்து மின்சாரம் வழங்க முற்பட்டபோது மின் தாக்குதலுக்குள்ளாகிய மின்சார சபையின் ஊழியர் மின் கம்பத்திலேயே பரிதாபகரமாக மரணமானார்.

குருநகர் அண்ணா வாசிகசாலைக்கு சமீபமாக நேற்று மாலை 6.45 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் புங்கங்குளம் வீதி, அரியாலையைச் சேர்ந்த நவரட்ணம் புண்ணிய மூர்த்தி (வயது-54) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

ஐந்துமாடி வீட்டுத் திட்டம், சீநோர் பகுதிகளுக்குச் செல்லும் உயர் அழுத்த மின் மார்க்கத்தில் திருத்தவேலைகள் செயவதற்காக குருநகர் அண்ணா வாசிகசாலைக்கு அருகில் நிறுவப்பட்டுள்ள இணைப்பு மின்கம்பத்திலிருந்து அந்தப் பகுதிக்கான மின்சாரம் நேற்றுக் காலை முதல் துண்டிக்கப்பட்டது. திருத்த வேலை முடிந்த பின்னர் நேற்று மாலை மீண்டும் மின் இணைப்பை வழங்கும் பொருட்டு குறித்த மின்கம்பத்தில் ஏறி இணைப்பை வழங்க முற்பட்டபோதே அவர் மின்தாக்குதலுக்குள்ளாகி அந்தக் கணமே மரணமானார்.

அவரது கருகிய உடல் கம்பத்தில் தொங்கியவாறு காணப்பட்டது. பின்னர் அங்கு நின்ற மின்சாரசபை உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட குழுவினர் மின்கம்பத்தில் தொங்கிய நிலையில் இருந்த சடலத்தை கயிறு மூலமாக கீழே இறக்கி யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

யாழ். பொலிஸார் இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். சடலம் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப் பட்டுள்ளது. (ஓ-4-78)

# குறிகாட்டுவான் துறையில் நேற்று படகில் ஏறி காத்திருந்த பயணிகள்

## பல மணிநேரம் 'காய்ந்து தேய்ந்து' வீடு சேர்ந்த அவலம்

யாழ்ப்பாணம், ஒக.14

குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவுக்கு நேற்று மாலை 5 மணிக்கு வழமையாகச் செல்லவிருந்த வடதாரகை -2 படகை கடற்படையினர் இரண்டரை மணித்தியாலங்கள் தாமதத்தின் பின்னரே புறப்பட அனுமதி வழங்கினர்.

இதனால் பிற்பகல் 4 மணியிலிருந்தே குறிகாட்டுவான் துறையில் இருந்த 65 பயணிகளும் காத்திருந்து, காத்திருந்து காலத்தைப் போக்கி அலுத்துவிட்டனர்.

பாடசாலை மாணவர்களும், குழந்தைகளும் நீண்டநேரமாக வரட்சியின் கொடுமையிலும் பசியுடனும் கடலையே வெறித்துப் பார்த்து அலுத்துப்போய் நின்றனர்.

இது தொடர்பாகப் பாதிக்கப்பட்ட பயணி ஒருவர் தெரிவிக்கையில் -

வழமைபோல இன்று (நேற்று) மாலை 5 மணிக்கு படகு புறப்பட ஆயத்தமானது. அப்போது அங்கு கடற்படை உத்தியோகத்தர் படகை எடுக்கவேண்டாம் என்று உத்தரவிட்டார். இதனால் வெறுப்படைந்த நாம் எதற்காக படகு தாமதமாகிறது என்று கேட்டோம். அதற்கு கடற்படையினர் ''கண்டியில் உள்ள ஆடைத் தொழிற்சாலைக்கு பயிற்சிக்காகச் சென்ற 60 பெண் பிள்ளைகள் வருகின்றனர். அவர்களை ஏற்றிச் செல்லவேண்டும் அதற்காக படகு நிறுத்தப்பட்டுள்ளது'' என்றனர்.

நாங்கள் சோர்வு, எரிச்சலுடன் 3 மணித்தியாலம் முதல் 4 மணித்தியாலம் வரை காத்திருந்தோம்.

ஒருவாறு அந்தப்பிள்ளைகள் இரவு 7 மணியளவில் துறையை வந்தடைந்தனர். அவர்கள் வந்ததும் படகில் இருந்த பயணிகள் அனைவரும் இறக்கிவிடப்பட்டனர். பின்னர் பிள்ளைகள் படகில் ஏற்றப்பட்டனர். தொடர்ந்து கண்டிக்குச் சென்றுவந்த அந்தப் பிள்ளைகளுக்கு படகில் வைத்து கடற்படையினர் 'கூட்டம்' ஒன்றை நடத்தினர்.

நேரம் இரவு 7.45 மணியாகிவிட்டது எல்லோரும் படகில் ஏறினோம். அங்கிருந்து புறப்பட்ட நாம் 8.45க்கு கரையை அடைந்தோம்.

படகில் சென்றவர்களில் அனேகமானோர் நெடுந்தீவு மேற்கைச் சேர்ந்தவர்கள். அவர்கள் அங்கு போய்ச் சேர 10 மணியாகிவிடும்.

நெடுந்தீவு பயணிகளின் சோகத்தை - நிலைமையைப் பார்த்தீர்களா? - என்றார் அந்தப் பயணி.

இதேவேளை பயணிகளில் சிலர் படகை 5 மணிக்கு எடுக்குமாறும் வரும் பிள்ளைகளுக்காக இன்னுமொரு தடவை இயக்கி அழைத்து வருமாறும் கேட்டனர். அதற்கு சம்பந்தப்பட்ட கடற்படையினரோ, வீதி அபிவிருத்தி அதிகார சபையினரோ இணங்கவில்லை. -மறுத்து விட்டனர்.

சம்பவம் தொடர்பாக நெடுந்தீவு உதவி அரச அதிபர், நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஈ.பி.டி.பி யாழ்.மாவட்ட இணைப்பாளர் ஆகியோருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டோம். அவர்கள் இது தொடர்பில் எந்த முயற்சியும் எடுத்ததாகத் தெரியவில்லை என்று குமுறினர் நொந்து போன பயணிகள். (ஓ-10)

(படகு சேவை குறித்த மற்றுமொரு செய்தி 5ஆம் பக்கத்தில்)

# யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த சிவபூமி மாணவன் 11 நாள்களின் பின் சாவு

## விபத்தில் சிக்கியதாகக் கூறப்படுவதில் சந்தேகம்

யாழ்ப்பாணம், ஒக. 14

விபத்தொன்றின்போது காலில் காயமடைந்தார் எனத் தெரிவிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பாடசாலை மாணவன் ஒருவர் சிகிச்சை பயனளிக்காது பதினோராவது நாளான நேற்று மரணமானார்.

இந்த விபத்து மரணத்தில் சந்தேகம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் கடந்த 4 ஆம் திகதி இடம்பெற்றது.

தெல்லிப்பழை சிவபூமி பாடசாலையில் பயிலும் நவாலியைச் சேர்ந்த சி.சாள்ஸ் (வயது - 18) என்ற மாணவனே மரணமானார். ஒட்டோ ஒன்றில் சென்று கொண்டிருந்தபோது அவரது கால் ஒன்று கம்பத்துடன் மோதியதனால் விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்ற போதும் அந்த விபத்தில் சந்தேகம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா மரணவிசாரணை மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஓ-4)



# சந்திபடிச் சோமு

## நாலும் தெரியாத பேர்வழியள் செய்யிற கூத்து...

மஞ்சத்திருவிழா சிறப்பா நடத்தது. சனசந்தடியப் பாத்தால் வலு சந்தோஷமா இருந்தது பாருங்கோ. எங்கட விழுதுகள் வெளிநாடுகளில இருந்தும் பிள்ளை குட்டியளோட வந்து நிக்கிறதப் பாத்தா பூரிப்பா கிடக்கு.

என்ர மகள் முறையான ஒருத்தி பிரான்சிலயிருந்து வந்திருக்கிறாள். பெரியப்பா நீங்களும் வாங்கோவன் என்று கேட்டாள். சரி, சாய்மனைக்கட்டில்ல கிடந்து கிடந்து அலுத்துப்போட்டு தெண்டு போட்டு நானும் அதுகளோட கூடப் போனன். வான் பிடிச்சுப் போனனனாங்கள். சின்னன் குஞ்சு குருமானெண்டு கலகலப்புக்குக் குறையில்லை. போதாக்குறைக்கு பல பழைய உறவுகளையும் காணக்கிடச்சுது.

''நான் வயது போனனான். கண்டபடி நடக்கேலாது. இஞ்ச வேம்படியில இருக்கிறன். திரியிற இடமெல்லாம் திரிஞ்சு போட்டு வாங்கோ'' எண்டு சொல்லி அதுகளை அனுப்பிப் போட்டு வேம்படிப் பக்கமா ஒதுங்கினா, அங்க எங்கட கதிரண்ணையும் நடேசரும் கதைப் பல்லக்கில நின்றினம். பிறகென்ன சந்திச் சமாவை நல்லூராண்ட வேம்படியிலயே ஆரம்பிச்சாச்சு.

கதிரண்ணை என்னக் கட்டோன்ன ''என்ன சோமு சந்தியடிய விட்டுட்டு வேம்படியில வந்திருக்கிறாய்... இனி வேம்படிச் சோமெண்டு வருமோ?'' எண்டு ஒரு நக்கல் விட்டார். ''இந்த வேம்படியில இருந்தா எல்லா மனப்பாரமும் இறங்கிடும். குடும்பப் பிரச்சினையில இருந்து கலியாணப் பேச்சு பொம்பள காட்டிறது எண்டு அத்தினைக்கும் அருமருந்தா இருந்த இடமெல்லே? அந்த இடத்தையும் என்ர பேரோட சேக்கிறது எனக்குச் சிறப்புத்தான். ஆனா இந்த பேப்பர்காரப் பெடியன் பேரமாத்த விடமாட்டான்'' எண்டு கதைய முடிச்சுக்கொண்டு மூச்சு விடறதுக்கிடையில, வெளிநாட்டில இருந்து வந்த பேத்தி ஓடிவந்து எனக்கு மேல பாஞ்சாள்.

''என்ன பிள்ளை என்ன நடந்தது?'' எண்டு கேக்க, ''அங்கயொரு கமராக்காரன் ஒரு மனஸ் இல்லாமல் என்னை குளோசப்பில எடுக்கிறதும் பிறகு பின்னுக்கு போறதுமா வீடியோ எடுக்கிறான். அதை பெரிய ரி.வியிலயும் போட்டுக் காட்டியினம். என்னத் துரத்தித் துரத்தி எடுக்கிறான். இஞ்ச இப்படியெல்லாம் டீசன்றில்லாமல் எப்படி நடக்கினம். உவையெல்லாம் மீடியா எண்டு வேற எழுதியிருக்கினம்'' என்று பொரிஞ்சு தள்ளினாள். ''எங்கட நாட்டில இப்படிச் செய்தா கேஸ் போட்டு ஃபைன் அடிச்சுப் போடுவாங்கள்'' எண்டு வேற மிரட்டினாள்.

''கட்சி மீடியாக்களிட்ட உந்த நாகரிகத்தை எல்லாம் எதிர்பாக்க ஏலுமே'' எண்டார் நடேசண்ணை. உந்தப் பொம்பிளப் பிள்ளையளை நல்லூருக்க துரத்தித் துரத்தி எடுக்கிற ரி.விக்காரங்கள்தானே உள்ளூராட்சி தேர்தல் நடக்கேக்க, கம்பஸ் பெடியள் எண்டு வேறயாரயோ வச்சுப் படம்பிடிச்சு காட்டினவங்களாம். அதவிட சண் ரி.வி. தயாரிப்பு எண்டு பொய்யாயும் ஒரு நிகழ்ச்சியத் தயாரிச்சு ஒளிபரப்பினவையாம். அவையளிட்டப் போய் எதிக்ஸ் பற்றிக் கேட்டா அதுகளுக்கு என்ன தெரியும்?'' எண்டார் கதிரண்ணை.

அந்தாள் சொன்னால் விளங்கிச் சொன்ன விசயமாத்தான் இருக்கும் எண்டு போட்டு, நான் சொன்னன், ''மக்களெல்லாம் மாக்களெண்டு நினைச்சுக்கொண்டு மீடியா நடத்திறவங்கள் இப்படியான கேவலம் கெட்ட வேலையளைத்தானே செய்வாங்கள்'' எண்டு. நான் சொல்லிக்கொண்டிருக்க, எங்களக் கண்டிட்டு சனநெரிசலுக்க இடிச்சுத் தள்ளிக் கொண்டு வந்து சேந்தார் கம்பஸ் வாத்தியார்.

''என்ன வாத்தியார் என்ன புதினங்ளெண்டு?'' நாங்கள் எல்லாருமாக் கேக்க, ''ஒண்டுமில்லை நாட்டில எத்தின விதமான கூத்துக்கள் நடக்குது. அதுகளை எண்ணி கவலைப்படுறதா? சிவனேயெண்டு கிடக்கிறதா? ஒண்டுமாப் புரியேல்லை'' எண்டு சலிச்சுக் கொண்டார் வாத்தியார். ''ஏன் என்ன நடந்தது'' எண்டு கேட்டா, அந்தாள் சொல்லிச்சு, ''குமாரசாமி மண்டபத்தில பெரிய மனிசன் சிவத்தம்பிக்கு ஒரு கூட்டம் வைச்சவை. அதுக்கு உந்த பாலர் பாடசாலை ரீச்சர்மாரோட நானும் போனனான். அங்க அந்த மிகப் பெரிய மனிசன் சிவத்தம்பியின்ர நீள அகலம் ஆழம் தெரியாதவன் எல்லாம் மிக மேலோட்டமா அந்தாள மலினப்படுத்திட்டு போறாங்கள். ஆக வெள்ளை வேட்டி பேராசிரியர் மட்டும் சிவத்தம்பி உருவாக்கி விட்டுச் சென்றிருக்கக் கூடிய புதிய தத்துவங்களை அருமையாச் சொன்னார். இதில ஆகக் கவலையானது என்னெண்டால் தமிழ்துறையில இருந்து ஒரு சட்டம்பி, ஜெயமோகன் எண்ட மூன்றாம் தர, இல்லையில்லை நான்காம் தர இலக்கிய வியாபாரி சொன்ன கூற்றிலயிருந்து தொடங்கி சிவத்தம்பிய மலினப்படுத்திட்டுப் போனது தான். துறைசார்ந்தவை இதுகளை கண்டிக்கிறதில்லையோ. ஒழுங்கு படுத்திறவை உதுகளை கவனிக்கக் கூடாதோ? அவைக்கு தாங்கள் மைக் பிடிக்க ஒரு இடம் கிடைச்சா போதும் எண்டு குளறுறதுதான் வேலை. எத்தின நாட்டில எத்தின பேர் சிவத்தம்பியிண்ட பெயரையும் பெருமையையும் சொல்லிச் சொல்லி எழுதுறான். தேம்பி அழுறான். அதுகள் ஒண்டும் தெரியாத இந்தப் பேர்வழிகள் யாரோ ஒருத்தன் காழ்ப்புணர்ச்சியில சொன்னதை தூக்கி வைச்சுக் கொண்டு திரியுதுகள்'' எண்டு கம்பஸ் வாத்தி கொட்டித் தீர்த்துப் போட்டுது.

என்ர படிப்புக்கு அந்ததாள் பேசினது அரவாசி விளங்கேல்லை எண்டாலும், அரைகுறை வாசிப்புப் பேர்வழிகள் விளக்கம் இல்லாமல் குண்டுச்சட்டிக்க சுத்தி உலகம் போற்றுற பெரியவையச் சிறுமைப்படுத்துகள் எண்டது மட்டும் விளங்கிச்சு.

வாத்தியின்ர கதையக் கேட்ட கதிரண்ணை, ''வாத்தியார் நீர் இப்பிடியெல்லாம் கதைச்சனீர் எண்டு தெரிஞ்சா உம்மையும் அடிச்சு நொருக்கி மரத்தில கட்டி தூக்கிப் போடுவாங்கள். போன கிழமை இரண்டு பேர அடிச்சுத் தூக்கியிருக்கிறாங்களாம். இப்படி எத்தின மர்மக் கொலையள் நடந்திட்டுது ஒண்டையும் துப்புத் துலக்கி பிடிக்கேலாம பொலிஸ் இருக்கிற நிலையில, கவனமா வாயத் திறக்க வேணும்'' எண்டு சொல்ல அந்த இடத்தில ஒரே கனத்த மௌனம். பிறகென்ன ஒவ்வொருத்தரும் அவரவர் வீடுகளப் பாக்கக் கிளம்பிட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

வெள்ளவத்தையில் இயங்கும் கட்டடக் கம்பனிக்கு டிரைவர், ஸ்டோர் கீப்பர், Site சுப்பவைசர், Site Manager (ஒரு என் ஜினியராக செயற்படக்கூடியவர், குறைந்தது இரண்டு வருட அனுபவம் தேவை. சம்பளம் 30,000/- 40,000/- வரை)

தொடர்பு:2362899, 0773 263512

## காணி விற்பனைக்கு

தாவடி பத்திரகாளி அம்மன் கோயில் முன்பாக 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு-0779015896

## பதவி வெற்றிடங்கள்

இலங்கையில் முதன் முதலில் ISO 9001 தரச் சான்றிதழை பெற்றுக் கொண்டதும், வாழ்நாள் முழுவதும் மருத்துவமனைப்படுத்தல் காப்பீடு வழங்குவதும், அரசுக்குச் சொந்தமான காப்புறுதிக் கம்பனியைக் கொள்வனவு செய்த ஒரே ஒரு நிறுவனமும், 100 இற்கும் மேற்பட்ட கிளைகளுடன் இலங்கையில் விரைவாக வளர்ச்சியடைந்து வரும் ஒரே ஒரு நிறுவனமும், ஆரம்பம் முதல் இன்றுவரை ஒரே பெயரில் மாற்றமேதுமில்லாமல் இயங்கிக் கொண்டிருக்கும் ஒரே ஒரு நிறுவனமான

**ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தில் பணியாற்ற ஆர்வமுள்ளவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.**

விஸ்தரிக்கப்பட்டுள்ள எமது நிர்வாகக் கட்டமைப்புடன் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி:- 01 :-வியாபார அபிவிருத்தி நிறைவேற்றுனர்.
பதவி:- 02 :- வியாபார அபிவிருத்தி உத்தியோகஸ்தர்.
மேற்படி இரு பதவிகளுக்கும் அடிப்படை ஊதியம் E.P.F/ E.T.F. Incentive என்பன உண்டு.
பதவி:- 03:- விற்பனை அலுவலர் (பிரயாண கொடுப்பனவு மற்றும் கட்டுப்பண சேகரிப்புக்குரிய தரகுப் பணம் வழங்கப்படும்.
பதவி:- 04:- பிரதேச முகவர்கள்/ பிரதிநிதிகள். (ஓய்வுபெற்ற அரச அலுவலர்கள் மற்றும் காப்புறுதிக் கம்பனிகள் தவிர்ந்த ஏனைய நிறுவனங்கள். N.G.O களில் பணியாற்றுபவர்களும் பகுதிநேரமாகப் பணியாற்ற முடியும்
தகைமைகள்:- க.பொ.த.சாதாரண தரம் கட்டாயமாக 6 பாடங்கள் (கணிதம் முக்கியம்) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
முக்கிய குறிப்பு:- SLII (ஆயுட்காப்புறுதி தொழில் நுட்பத் தகைமைப் பரீட்சையில்) சித்தியடைந்திருப்பவர்களுக்கும், ஏற்கனவே காப்புறுதித்துறையில் பணியாற்றியவர்களுக்கும் திறமைக்கேற்ப பல வாய்ப்புக்களுடன் கூடிய சலுகைகள் வழங்கப்படும்.
விண்ணப்ப முடிவுதிகதி:- 25.08.2011
முகவரி:- எ.குமார் (A/PM)
ஜனசக்தி காப்புறுதி நிறுவனம்,
கண்டி வீதி, (கிளிநொச்சி பழைய ஆஸ்பத்திரி முன்பாக),
கிளிநொச்சி. 0778499866.

**"காப்புறுதி என்றால் ஜனசக்தி"**

குறிப்பு:- அந்தந்த மாவட்டங்களில் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதும் நேர்முகத்தேர்வுக்கு பிறிதொரு தினத்தில் அந்தந்த மாவட்டங்களுக்கு அழைக்கப்பட்டு மேற்குறிப்பிட்ட பதவிகளுக்குத் தெரிவு இடம்பெறும். S.M.S (எஸ்.எம்.எஸ்) மூலமாக உங்களது சுயவிவரங்களைப் பதிவு செய்வதாயின் 0778499866 என்ற இலக்கத்துக்கு S.M.S அனுப்பவும்.


## வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஒக.14

யாழ். மாநகர சபை எல்லைக்குள் அமைந்த நாவாந்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்க்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி வழங்கப்பட்டு வருகின்றது.

நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நித்திய ஒளி முன்பள்ளியிலும் முற்பகல் 11 மணிக்கு வசந்தபுரம் குறுக்கு வீதிகளிலும் நாய்களுக்குத் தடுப்பூசி மருந்து வழங்கப்படவுள்ளது. (ம-313)


**A1/B1/B2 IELTS Spoken English** 100% வெற்றி

நிரந்தர வதிவிட விசா மூலம் யு.கே செல்வோருக்கு கட்டாயமான A1 ஆங்கில பயிற்சி நெறிக்கும் பரீட்சைக்கும் அங்கிகரிக்கப்பட்ட பயிற்சி மையம்.
மிக அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்.
இலவச விளக்கத்திற்கு நேரில் வரவும்

City & Guilds Approved Centre

நோலிட்ஜ் யூனிவேர்ஸ்
இல 75,கோவில் வீதி,யாழ்ப்பாணம்.
www.kugroup.info 0777302882

## வாழும் கலைப் பயிற்சி

ஜெய் குருதேவ்

உங்களை உணருங்கள் — அன்பில் மலருங்கள்



The Art of Living

எப்போதும் ஆரோக்கியமாகவும் ஆனந்தமாகவும் வாழ

**ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்**

**மூச்சுப்பயிற்சி - பிராணாயாமா- சுதர்ஷனகிரியா-யோகா**

**பயிற்சியின் பலன்கள்:**

- அழுத்தமற்ற அமைதியான மனம், ஆரோக்கியமான உடல்
- பேரானந்தம், ஆர்வம், உத்வேகம்
- தன்னை உணர்தலும், வாழ்வில் மறுமலர்ச்சியும்
- கவலை, படபடப்பு இவற்றிலிருந்து விடுதலை, சுகமான உறக்கம்
- வீட்டிலும், வேலைத்தளத்திலும் சுமூக உறவு
- மற்றவரிடத்தில் பழகும் விதத்தில் மேம்பாடு
- உடலிலும் மனதிலும் சக்தி அதிகரித்தல்
- படைப்பாற்றல், தெளிவான சிந்தனை
- கல்வியிலும் வேலையிலும் கவனம் அதிகரிக்கும்
- நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிப்பு

காலம் : 15.08.2011 திங்கட்கிழமை
மாலை 5.00 மணிக்கு(அறிமுகவுரை)
பயிற்சிகள் : 16.08.2011 செவ்வாய்க்கிழமை
நேரம் காலை 10 மணிமுதல் 12.30 மணிவரை
பி.ப.2 முதல் 4.30 மணிவரை
மாலை 5 மணிமுதல் 7.30 மணிவரை
இடம் : 132, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு: பயிற்சி பயின்ற அனைவருக்கும் நினைவூட்டல் வகுப்பு இன்று பி.ப. 2 மணிக்கு மேற்குறித்த முகவரியில் நடைபெறும்.

**PH - 077 7740593 / 077 0474757**




## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு: 1946.02.10 — இறப்பு: 2011.07.15

**அமரர் சுப்பிரமணியம் விஸ்வலிங்கம்**

கடந்த 15.07.2011 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்த எங்கள் குடும்ப விளக்கின் மரணச் செய்தி அறிந்து தொலைபேசி மூலமும், நேரடியாகவும் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் நன்றி கூறுவதோடு, இன்று (14.08.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வேம்போலை, இணுவில் கிழக்கு. — குடும்பத்தினர்.


## காணி விற்பனைக்கு

நாவற்குழி, அமிர்தா வீதியில் அமைந்துள்ள பொன்னுக்கோன் தோட்டத்தில் உள்ள 40 பரப்பு (நாற்பது) காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு-0217901535,0777763436

## நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு

45 நாள்கள் நிரம்பிய (தடுப்பூசி ஏற்றிய) பொக்சர் பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு - ஆர்.ரூபன் ,
6 கடுக்காயடி வீதி, நல்லூர்.
0778286584

## மணிவிழா நாயகனை பாராட்டி வாழ்த்துகின்றோம்

**பேராசிரியர் க.தேவராசா**



இன்று [14.08.2011] மணிவிழாக் கொண்டாடும் பேராசிரியர் உயர்திரு தேவராசா அவர்கள் மேலும் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்ந்து கல்விப் பணியுடன் சமூகப் பணியும் ஆற்றிச் சீரும் சிறப்புடன் வாழ இறையருள் வேண்டி பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஜே. செல்வநாயகம் குடும்பத்தினர்
செல்வா சைக்கிள் ஹாட்வெயார் ஸ்ரோர்,
ஆவரங்கால், புத்தூர்.

# Sales Rep

**North / வடமாகாணம்**

- 25-30 வயதுக்கிடைப்பட்டவர்கள்.
- சந்தைப்படுத்தலில் 2-3 வருட தொழில்சார் தகைமை.
- குறைந்தது க.பொ.த சாதாரண பரீட்சையில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.
- தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பேசும் ஆற்றல்.
- சாரதி அனுமதிப்பத்திரம் இருத்தல் வேண்டும்.
- சம்பளம் + விற்பனை தரகு ரூ.50,000 +
- நிறுவன பராமரிப்பு மோட்டார் சைக்கிள் வழங்கப்படும்.
- மருத்துவ வசதி வழங்கப்படும்.

APPLY TO
E-mail : careernorth@tradesmann.com
Fax: 011 5565610
PO Box: 168, Jaffna.

SALES ADMIN OFFICER
Contact: 077 337 0543/ 077 756 2484

THE TRADESMANN SL (PVT) LTD
40, Borupana Ferry Road, Ratmalana.

www.tradesmann.com

*Tradesmann is a diversified business model in Manufacturing, Trading & Distribution sectors since 1956*

TRADESMANN 1956


## மரண அறிவித்தல்



வைத்திய கலாநிதி

**மயில்வாகனம் சுந்தரலிங்கம்**

அவுஸ்திரேலியா

யாழ்ப்பாணம் சுண்டுக்குளியில் வசித்தவரும் தற்போது மெல்பேர்ன் அவுஸ்திரேலியாவை வசிப்பிடமாகக் கொண்டவருமான வைத்திய கலாநிதி மயில்வாகனம் சுந்தரலிங்கம் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் ரட்ணாவின் பாசமிகு கணவரும் ரஞ்சினி (India), ஸ்ரீமணி (USA), நளாயினி (Australia), டினேஷ் குமார் (Austaralia) ஆகியோரின் அன்புத்தந்தையும், தொண்டமான் (India), சொக்கநாதன் (USA), மகேசன் (Australia), தயாகரி (Australia), ஆகியோரின் அன்பு மாமனாரும், திவாகர், ஜெய்கர், ஷாலினி, ஷிவானி, சரண்யா, டினா,டரன் ஆகியோரின் பாசமுள்ள பாட்டனுமாவார் அன்னாரின் இறுதிக்கிரிகைகள்

மெலபேர்ன் அவுஸ்திரேலியாவில் 14/8/2011, ஞாயிற்றுக்கிழமை 1.45 மணிக்கு நடைபெறும்

தொடர்பு டினேஷ், நளாயினி
61-3-98163454

## முதலாம் ஆண்டு நினைவலை

மனம் மகிழ:19.03.1949
மனம் நெகிழ: 14.08.2010



**நேசையா மேரி திரவியம்**

ஆழ்கடலில் தேடி எடுத்த திரவியமே...
ஏன் அம்மா எம்மை விட்டுப் பிரிந்தீர்
அன்பின் திருவுருவமாய் பாசத்தின் உறைவிடமாய் -வாழ்ந்து
எமக்கெல்லாம் அன்பு வார்த்தை ஊட்டினீர்களே
ஓடிப்போனதம்மா ஒருவருடம்
உங்களை மறந்ததேயில்லை ஒரு நிமிடம்
ஆறாது தவிக்குது எங்கள் உள்ளம்
அழுது வெறுமையானது எங்கள் இல்லம்

**உங்கள் ஆத்மா சாந்தியடைய தினம் தினம் பிரார்த்திக்கின்றோம்**

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
கணவர் , பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்,
சகோதரர்கள்.

மூளாய் லேன்,
இல.3, குருசோ வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மற்றொரு சமூகவியல் ஆபத்து; தடுப்பதற்கு ஒன்றிணைய வேண்டும்

யாழ்ப்பாண மாவட்டத்தில், கடந்த ஐந்து மாதங்களில் பதினெட்டு வயதுக்கு உட்பட்ட இளவயதுப் பெண்கள், எழுபத்தைந்து பேர், முறையற்ற விதத்தில் கர்ப்பம் அடைந்துள்ளனர். இவர்களில் அதிகமானோர் மாணவிகளே. அதேவேளை, திருமண வயது வந்த பெண்கள் 43 பேரும் கல்யாணம் ஆகாமலே கர்ப்பவதிகளாகி உள்ளனர்.

குடாநாட்டில் புதிதுபுதிதாக முளைத்து வரும் கலாசார சீர்கேடுகளில், சமூகப்பெறுமானங்களின் பிறழ்வுகளில் ஒன்றாக, மாணவிகள் கர்ப்பம் அடைவது பெரும் அதிர்ச்சியும் கவலையும் தருவதாகும்.

இளைஞர்கள் மதுபோதைக்கு அடிமையாவதும், அடிதடிகளில் ஈடுபடுவதும், பெற்றோர்களை, பெரியோர்களை மதிக்காமல் அடாவடித் தனங்களில் ஈடுபடுதல், கோஷ்டிச் சண்டைகளில் காலத்தை வீணாக்குவது என்ற ஒவ்வாத செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவது ஏற்கனவே யாழ்ப்பாண சமு தாயத்தை பெரும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது; அபகீர்த்தியை உண்டாக்கியுள்ளது.

பெரியோர் சொற்கேட்டுத் தம்மைத் திருத்திக்கொண்டு நல்வழி நடக்கும் நற்பண்பு இன்றைய இளைஞர்களிடம் அறவே அற்றுப்போய் விட்டது. தோளுக்கு மிஞ்சி வளர்ந்தால் தோழன் என்ற முந்திய நிலைப்பாடும் இப்போது இல்லை.

நவீன தொடர்பு சாதனங்கள் ஊடாகக் கிடைக்கும் 'பேஸ் புக்' போன்ற மறுதலையான, எதிர்மறையான செயற்பாடுகளில் சிக்குண்டு எமது இளைஞர் சமுதாயம் நெறிகெட்டு பாழும் குழியை நோக்கி மின்னல் வேகத்தில் விரைந்தோடுகிறது.

இவ்வாறு பல வழிகளாலும் எமது வருங்காலச் சந்ததிகள் - பிரசைகள் - குறிப்பாக இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் சீரழிகிறார்கள் என்ற கவலை, பெற்றோர்களையும் சமூக நலன்விரும்பிகளையும் மனநோவுக் குள் ஆளாக்கி இருக்கும் இவ்வேளையில் -

பாடசாலை செல்லும் மாணவிகள் அதிக எண்ணிக்கையில் கர்ப் பிணிகள் ஆகியுள்ளனர் என்ற தகவல் குடாநாட்டில் பல தரப் பினரிடமும் பேரதிர்ச்சியையும் ஒரு வகையில் ஆத்திரத்தையும் தோற்று வித்திருக்கிறது. குடாநாட்டின் வெறுக்கத்தக்க சமூகச் சீர்கேடுகளில் மிகக் கேவலமானது என்று முத்திரையிட வேண்டிய இந்த நிலைக்கு, யார் காரணம் என்பது கண்டறியப்பட வேண்டும். இதில் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மட்டுமன்றி உளவியலாளர்கள், துறைசார் வல்லாளர்கள், வளவாளர்கள் என்று பல தரப்பினரதும் கூட்டு முயற்சியும் அதற்கான மனமொன்றிய உழைப்பும் சேவையும் தேவை.

பாடசாலை மாணவிகள் கர்ப்பவதிகள் ஆவதற்கு பிரதான காரணிகள் பெற்றோர்களும் ஆசிரியர்களுமே என்று கூறுவதால், தம்மீது பழி சுமத்துவதாக அவர்கள் கொள்ளக்கூடாது. இந்தப் பேராபத்து சமூக மேம்பாட்டை மேலும் அரித்து, அழித்து விடாமல் தடுப்பதில் தமக்கு முதன்மையான பங்குண்டு என்பதனை அந்த இரு தரப்புகளும் மனதாரவும் மானசீகமாகவும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

பாடசாலை செல்லும் மாணவிகள், மாணவருக்குப் பாலியல் கல்வி போதிக்கப்படுவதில்லை. இளமையில் பாலியல் செயற்பாடுகளால் உண்டாகக் கூடிய பாதிப்புகளையும் வாழ்க்கைச் சீரழிவுகளையும் பெற்றோரும் பயிற்றுவிப்பதில்லை; விளங்க வைப்பதுமில்லை. அவற்றை எடுத்துரைப்பது நாகரிகம் அற்றது என்று கூசுவதாலேயே மிகப் பாரதூரமான, தனிப்பட்ட, சமூகப் பாதிப்புகளுக்கு ஆளாகும் நிலைதோன்றி உள்ளது.

மாணவ, மாணவியர் தமது நண்பர்களின் மூலமும், இணையத் தளங்கள் மூலமும், எஸ்.எம்.எஸ். மூலமும் பாலியல் தொடர்பான தவறான தகவல்களைப் பெறுகின்றனர். அவற்றை அவர்கள் நடை முறையில் அணுக அல்லது செயற்பட முனைவதாலேயே பாரதூரமான விளைவுகள் ஏற்படுகின்றன என்று துறைசார் வட்டாரங்கள் சுட்டிக்காட்டி உள்ளன. ஆகையால், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்களுக்கு இது குறித்த செயற்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளம் தலைக்குமேல் உயர்ந்து, ஒரேடியாக இளம் சமுதாயத்தை மிகக் குறிப்பாக மாணவ சமூதாயத்தை மூழ்கடித்து விடாமல் தடுப்பு நடவடிக்கைகளைத் தாமதம் இன்றி மேற்கொள்ள வேண்டும்; அவரசகால நடவடிக்கையாக.

இதேவேளை -

★ சிறுவர்கள் எதிர்ப்பார்க்கின்ற அன்பும் அரவணைப்பும் பெற்றோர்களிடம் இருந்து உரிய வகையில் கிடைப்பதில்லை. அந்த அன்பைத் தேடி சிறுவர்கள் - மாணவர்கள் - தவறான வழியில் செல்கின்றனர். மாணவிகள் கர்ப்பம் தரிப்பதற்கு அதுவும் காரணமாகிறது.

★ இப்போதெல்லாம் பெற்றோர்களுக்கும் சிறுவர்களுக்கும் இடையிலான இடைவெளி அதிகரித்துள்ளது. பெற்றோர்களிடம் இருந்து தமக்குக் கிடைக்க வேண்டிய அன்பை - அவர்கள் எதிர்பார்க்கும் அன்பை- பெற முடியாமல் சிறுவர்கள் தவிக்கிறார்கள். அந்த அன்பு வேறு ஒருவர் மூலம் தவறாகக் கிடைப்பதாலேயே இத்தகைய நிலைமை உண்டாகிறது-

இந்த யதார்த்தமான நிலைப்பாட்டை விளக்கமாகவும் சுருக்கமாகவும் தெரிவித்திருக்கிறார் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவி அனோமா திஸநாயக்கா.

உளவியலும், கல்வியியலும், சமூகவியலும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதான இந்தப் பிரச்சினையின் கதாபாத்திரங்கள் பெற்றோர் - பிள்ளைகள் (மாணவர்கள்) - ஆசிரியர்கள் என்ற முத்தரப்பினரும் ஆவர்.

முதலில் பெற்றோரும் அடுத்து ஆசிரியர்களும் பிள்ளைகளின் - மாணவர்களின் - நலனை முன்னிறுத்தி அவசரமாக, அதிவேகமாகச் செயலில் இறங்க வேண்டியவேளை இது. ஆசிரியர்களும் பெற்றோர்களே. அதனால் அவர்களும் பெற்றோர்கள் என்ற நிலைக்கு மாறி, குடாநாட்டின் எதிர்காலப் பிரசை களான மாணவ, மாணவியர் நற்பிரசைகளாக வாழ்வதற்கு உழைக்க வேண் டும். முளையில் கிள்ளாவிடில் இப்பிரச்சினை எமது வருங்காலச் சமூகத்தை அதளபாதாளத்தில் வீழ்த்திவிடும்.

நற்பண்பு கொண்ட வருங்கால சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதில் ஏனைய சகல தரப்பினருக்கும் பங்குண்டு. எமக்கென்று சிறப்பான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதில் சமூக மேம்பாட்டில் அக்கறையுடை யோரின் உதவிக் கரங்களும் நீளவேண்டும். இல்லையேல் எங்கள் வாழ்வியலையும், வளங்களையும்,கலாசாரங்களையும், பண்பாடுகளையும் அழிப்பதற்குக் காத்திருக்கும் தரப்புகளுக்கு கைகொடுத்த பாவத்தைப் புரிந்தவர்களாவோம்.

# அதிகாரிகளின் அசமந்தப் போக்கால் நெடுந்தீவு போக்குவரத்தில் திணறல்

## என்று தீருமோ இந்த மக்களின் அவலம்?

யாழ்ப்பாணம், ஓக. 14

நெடுந்தீவுப் படகுச்சேவை நடைமுறைப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்ட நேர அட்டவணைகளுக்குத் தொடர்பில்லாதவாறு தற்போதைய சேவைகள் இடம்பெறுவதாகப் பொதுமக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். நெடுந்தீவில் இருந்து காலை 6.45 மணிக்கும் அதன் பின்னர் காலை 7 மணிக்கு பயணிகள் படகு குறிகாட்டுவானுக்குச் செல்லும் எனவும் குறிகாட்டுவானிலிருந்து காலை 8.30 மணிக்கு நெடுந்தீவுக்கான படகு புறப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

குறிகாட்டுவானில் இருந்து காலை 8.30 மணிக்குப் புறப்படும் என அறிவிக்கப்பட்ட சேவை தற்போது இடம்பெறுவதேயில்லை. படகு முற்பகல் 10 மணிக்கே குறிகாட்டுவானில் இருந்து புறப்படுகின்றது. இது பகல் 11 மணிக்குப் பின்னரே நெடுந்தீவை சென்றடைகிறது. இதனால் அரச உத்தி யோகத்தர்கள், ஆசிரியர்கள் உரிய நேரத்தில் தமது கடமைக்குச் செல்லமுடியாதுள்ளனர். நெடுந்தீவு மாணவர்களின் கல்வியும் பெரும் பாதிப்படை கின்றது.

நெடுந்தீவு - குறிகாட்டுவானிடையே காலை நேரச் சேவையை நடத்தும் 'குமுதினி' படகுள் கடல் நீர் உட்புகுவதால் அது சேவையை இடைநிறுத்தி உள்ளது. ''குமுதினிக்குள் கடல் நீர் புகுந்து விடுகிறது. ஆனால் அது எந்தப் பகுதியால் புகுகிறது என கண்டுபிடிக்க முடியவில்லை.'' அதனால் சேவை நிறுத்தப்பட்டுள்ளது என்று படகுடன் தொடர்புடைய அதிகாரிகள் வறட்டுக் காரணம் கூறுகின்றனர் என்று விசனித்தார் நெடுந்தீவில் இருந்து யாழ்ப்பாணத்துக்குப் பணிக்கு வரும் ஒருவர்.

பல்வேறு சிரமங்களின் மத்தியில் சேவையை சீராக்க முயற்சிகள் எடுக்கப்பட்ட போதும் நெடுந்தீவுப் படகுச் சேவைகளில் தடங்கல்கள் ஏற்படக் காரணம் என்ன என்பதை கண்டு பிடிக்க முடியாத நிலையில் அதிகாரிகள் திறனற்று உள்ளனரா? அல்லது யார் எப்படிப் போனால் என்ன? என்ற அதிகாரிகளின் அசமந்தப் போக்கா இது என்பது புரியாமல் தத்தளித்துக்கொண்டிருக்கிறார்கள் நெடுந்தீவு மக்கள்.

''வடதாரகை வந்ததென்ன வடக்கின் வசந்தம் வந்தென்ன. இதுதான் எங்கள் நிலை'' என்று விசனிக்கிறார்கள் மக்கள். "அரசுக்கு வாக்களித்தாலும் தமிழனுக்கு வாக்களித்தாலும் விடிவு கிடையாது என்பதற்கு இது ஓர் உதாரணம்'' என்றார் முதியவர் ஒருவர்.

இதற்கிடையே நெடுந்தீவு படகு சேவைக்கும் யாழ். நகருக்கான பஸ் சேவைக்கும் இடையிலான நேர வித்தியாசம் காரணமாகவும் பிரச்சினைகளை எதிர்நோக்குவதாக நெடுந்தீவுப் பயணிகள் கூறுகின்றனர். நெடுந்தீவில் இருந்து காலையில் புறப்படும் வடதாரகைப் படகில் பயணிப்போர் குறிகாட்டுவான் இறங்கு துறையில் ஒரு மணிநேரம் பஸ்ஸுக்காக காத்திருக்கவேண்டி ஏற்படுகி றது என்கிறார்கள் பயணிகள். (உ-7-325)

# அனைத்து நிர்வாக மாவட்ட ரீதியாக பொலிஸ் படையணி முகாம்கள்

## பாதுகாப்பு அமைச்சின் விசேட உத்தரவு

கொழும்பு, ஓக. 14

இலங்கையின் அனைத்து நிர்வாக மாவட்டங்களிலும் விசேட பொலிஸ் படைப் பிரிவு முகாம்கள் நிறுவுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாதுகாப்பு அமைச்சின் விசேட உத்தரவு ஒன்றின் கீழ் மாவட்டம் ஒன்றுக்கு ஒரு முகாம் என்றவாறு இவை நிறுவப்படவுள்ளன.

தேவை ஏற்படின் ஒரு சில மாவட்டங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட முகாம்களை நிறுவுவதற்கும் எதிர்பார்க்கப்படுவதாக பொலிஸ் விசேட படையணி தலைமையக கட்டளை அதிகாரி ஆர்.டபிள்யூ.எம்.டீ. ரணவக்க தெரிவித்துள்ளார்.

யுத்தத்துக்குக் காத்திரமான பங்களிப்பு வழங்கியிருந்த பொலிஸ் படையணி, யுத்தத்துக்குப் பின்னரும் நாட்டில் சமாதானம் மற்றும் சட்டத்தைப் பேணிக்காக்க அர்ப்பணிப்புடன் செயற்படும். அது தொடர்பாக நாம் அனைத்து மாவட்டங்களும் உள்ளடங்கும் விதத்தில் செயற்படுவோம்.

பாதாள உலகை முடக்கும் செயற்பாடுகளை விசேட பொலிஸ் படைப்பிரிவு கைவிட்டுள்ளதாக மக்கள் மத்தியில் மத்தியில் கருத்துக்கள் நிலவுகின்றன.

அது தவறான கருத்தாகும். நாம் எப்போதும் மிகத் தெளிவாகவே உள்ளோம். கொழும்பில் முஸ்லிம் பாதாள உலகம் சம்பந்தமாகவும் நாம் கடும் அவதானம் செலுத்திச் செயற்பட்டு வருகிறோம்.

1983 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இப் படையணியில் ஆரம்பத்தில் 60 பேர் மாத்திரமே இருந்தனர். தற்போது இப்படையணி 800 பேரைக் கொண்டதாக வளர்ச்சி கண்டுள்ளது.

1983 கறுப்பு ஜூலையில் வெள்ளவத்தைப் பிரதேசத்தை நிர்வகிக்க எமது படையணி அர்ப்பணிப்புடன் செயற்பட்டது.

யுத்த காலத்தில் எமது படையணியில் 462 பேர் உயிரிழந்துள்ளனர். சிற்றூழியர்கள் 6 பேர் உயிரிழந்துள்ளனர். 712 பேர் காயமடைந்தனர். 116 பேரால் மீளவும் பணியாற்ற இயலாது போனதால் அவர்களுக்கு ஓய்வு வழங்கப்பட்டது. - என்று மேலும் ரணவக்க தெரிவித்தார். (ம-22)

# யாழ்.பல்கலை. பேரவை உறுப்பினர் விவரம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 14

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் யாழ்.பல்கலைக்கழகப் பேரவைக்கு 13 புதிய உறுப்பினர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்.

அவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராரசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை, வைத்தியர் எஸ்.சிவானந்தராஜா, வைத்திய நிபுணர் எஸ்.ரவிராஜ், சட்டத்தரணி பி.ரங்கன், சட்டத்தரணி க.கேசவன், அருட்திரு. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், கூட்டுறவாளர் எஸ்.தேவேந்திரன், ஓய்வு பெற்ற அதிபர் எம்.பாலசுப்பிரமணியம், எந்திரி இராமதாஸன், முன்னாள் அதிபர் எம்.சிறீபதி, உயர் தொழில் நுட்பக் கல்லூரி முன்னாள் அதிபர் ரி.ராஜரட்ணம், செல்வி சுசீலாதேவி சாரங்க பாணி, பட்டயக் கணக்காளர் இ.அன்னலிங்கம்.

மூன்று வருடங்களை பதவிக் காலமாகக் கொண்ட இந்தப் பேரவை உறுப்பினர்களின் முதலாவது முன்னோடிக் கூட்டம் கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்றது. (உ-14)

# நலிவுற்ற குடும்பங்களுக்கு கோப்பாயில் நிதியுதவி

நாவற்குழி, ஓக. 14

யுனிசெவ் செயற்றிட்டத்தின் கீழ் கோப்பாய் பிரதேசத்தில் நலிவுற்ற இரு குடும்பங்களுக்கு வீட்டு வசதிகளை விரிவு படுத்த கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

வட மாகாண சமூக சேவைகள் திணைக்களம் ஊடாக தலா 15 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளதாகக் கூறப்பட்டது.

பாடசாலைக் கல்வி பயிலும் பிள்ளைகள் உள்ள மாற்று வலுவுள்ள குடும்பங்களுக்கு இந்த நிதி வழங்கப்படவுள்ளது.

மாற்றுவலுவுள்ளோர் வீட்டினுள் முச் சக்கரவண்டி, சக்கர நாற்காலி மூலமாக இலகுவாக சென்று வருவதற்கு ஏற்ற வகையில் வீடமைப்புகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் கூறப்பட்டது. (ம-121)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
14 ஒகஸ்ட் 2011 ஞாயிற்றுக்கிழமை

## வீடு பராமரிப்புக்கு

இடம்பெயர்ந்து பாதிக்கப்பட்டும் வசதியற்றும், சிறு சுயதொழில் செய்ய விரும்புபவர்களுக்கு, அளவெட்டியில் வருமானமுள்ள சிறிய வீடு குறுகிய காலத்துக்கு மட்டும் கொடுக்கப்படும். (சம்பந்தப்பட்டவர்கள் மட்டும்)

தொடர்பு: 0754516058

## வீடு வாடகைக்கு

கண்டி வீதி, மாம்பழம் சந்திக்கு மிக அருகில் சகல வசதிகளுடன் விசாலமான வீடு ஒன்று வாடகைக்கு உண்டு. அரச/அரசசார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 6909284

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1975 இல் பிறந்த உதயத்துச் செவ்வாய் பாவம்-16 விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியருக்கு தொழில் செய்யும் மணமகள் தேவை.

தொடர்பு:0779773626,0776510837

## Financial Sponsor For Student Visa any Country

VTL Management (PVT) Ltd
Colombo - 3

தொடர்புகளுக்கு:- 072 9994777, 0117902938.

## விற்பனைக்கு

2000ஆம் ஆண்டு மொடல் JKxxxx எனும் இலக்கமுடைய ISUZU (Cooler 4.6 Digital) கன்ரர் விற்பனைக்குண்டு.

தொடர்பு- 0775446363, 0779184388

## ஆண் விடுதிக்கு பராமரிப்பாளர் தேவை

மானிப்பாய் யாழ்ப்பாணத்தில் உள்ள எமது சிறுவர் இல்லத்துக்கு ஆண் பராமரிப்பாளர் மற்றும் தோட்ட உதவியாளர்கள் தேவை. உங்கள் சுயவிவரக் கோவையை பின்வரும் விலாசத்திற்கு உடன் அனுப்பி வைக்கவும். வயதெல்லை 35 க்கு மேற்பட்டோர். கிறிஸ்தவர்கள் விரும்பத்தக்கது.

Hanna's Relief Swedish Mission,
19/1,Beach Road,Mount Lavinia.
e-mail-elimcvh@gmail.com
Tel:0112724110

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கி இருந்து பணிபுரிய பணிப்பெண் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு:0777260974

## காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, கோயில் வீதியில் 3½ பரப்புக் காணி பங்குக் கிணற்றுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:0777111400

## பசு மாடு விற்பனைக்கு

ஆறு மாதங்கள் நிரம்பிய சினையுள்ள ஜேசி இனப் பசுமாடு விற்பனைக்குண்டு. (2ஆம் ஈத்து) 15 போத்தல் கறக்கக் கூடியது.

தொடர்பு: 0774581237

## வாடகைக்கு

கிளிநொச்சி A9 வீதியில் கொமர்ஷல் வங்கி அருகில் 3600 சதுர அடி வெற்று நிலப்பரப்பு வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு:- 0758057591

## வீடு வாடகைக்கு

வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலய சந்திக்கு அருகாமையிலுள்ள சகல வசதிகளும் கொண்ட தனி வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:0718994240

உங்கள் வியாபார, கல்வி நிறுவனங்கள் குறுகிய காலத்தில் கம்பனிப் பதிவாளர் நாயகம் காரியாலயத்தில் தனியார் கம்பனியாகப் பதிவு செய்து தரப்படும்.

VTL மெனேஜ்மென்ட், கொழும்பு-3
0729994777, 0117902938

## கட்டட நிர்மாணத்துறை பணியாள்களுக்கான வெற்றிடங்கள்

யாழ்., கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் கட்டட நிர்மாணப் பணி ஸ்தலங்களுக்கும், கிளை அலுவலகத்துக்கும் கீழ் குறிப்பிடப்படும் பணியாள்கள் உடனடியாகப் பணிக்கு அமர்த்தப்படவுள்ளனர். தகுதியுடையோர் தகுந்த ஆவணங்களுடன் கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு நேரில் சமுகமளிக்கவும். இல்லையேல் தபால் மூலம் விண்ணப்பிக்கவும்.

| | |
|---|---|
| **Site Engineer** | : B.Sc (Civil Engineering) with minimum Two years Experience or Equivalent. |
| **Quantity Surveyor** | : B.Sc, NDT, NDES with minimum Three years Experience in the relevant field. |
| **Assist. Quantity Surveyor** | : NCT (Q.S) with Two years Experience |
| **Technical Officer** | : NDT (Civil Engineering )with Two years Experience or NCT (Civil Engineering) with Five years Experience or Equivalent. |
| **Building Supervisor** | : NCT (Civil Engineering) with Two years Experience or Equivalent. |
| **Store Keeper** | : Minimum Five years Experience with adequate qualification. |
| **Security Guard** | : Minimum Five years Experience with adequate qualification. |
| **JCB Operator** | : Minimum Five years Experience with adequate qualification. |

நேரில் சமுகமளிக்க வேண்டிய நாள்கள்

**ஞாயிறு 14.08.2011, புதன் 17.08.2011, அல்லது ஞாயிறு 21.08.2011**

**தொடர்புகளுக்கு:**

**கிளைமுகாமையாளர்,
வீ.வீ.இராமநாதன் அன் கொம்பனி
பிறைவேட் லிமிட்டெட்,
இல.3, நல்லூர் குறுக்கு வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.**

அல்லது

**முகாமையாளர்,
வீ.வீ.இராமநாதன் அன் கொம்பனி
பிறைவேட் லிமிட்டெட்,
பொதுவைத்தியசாலை சுற்றுவட்ட வீதி,
வவுனியா**

(6872)

## காணி விற்பனைக்கு உண்டு

514/10 இலக்கம் உடைய காணி யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்னால் விற்பனைக்குண்டு.

தொடர்பு இல: 0777779028

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு: 19.12.1942
உதிர்வு: 17.07.2011



**அமரர் இராமலிங்கம் கார்த்திகேசு (J.P)**

கடந்த 17.07.2011 அன்று சிவபதமடைந்த எமது குடும்ப ஒளிவிளக்கின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் அவ்வேளையில் சகல விதத்திலும் உதவிகள் செய்தும், கண்ணீர் அஞ்சலி, தொலைத்தொடர்புகள் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் எங்கள் குடும்பம் சார்பில் நன்றியைத் தெரிவிப்பதோடு நாளை (15.08.2011) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் - அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

'தளமியன்', இராமலிங்கம் வீதி,
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி, தொ.பே: 021 226 4270

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## உங்கள் வெளிநாட்டுப் பயணத் தேவைகளுக்கு ஹேலீஸ் டிரவல்ஸ்

Hayleys Travels

உங்கள் வசதிக்காக
யாழ்.நகரில் புதிய அலுவலகம்
ஒன்றை திறந்துள்ளோம்.

**வோல்ட் ஆவ் ஹேலீஸ் ஷோ ரூம்
47,14/1 ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்
தொலை பேசி: 021 2221 878**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தன்கேணி சிவன் கோயிலில் ரூ.20 லட்சம் பொருள்கள் திருட்டு

## களஞ்சிய அறையை உடைத்து அனைத்தையும் அள்ளினர்

சங்கானை, ஓக.14

சித்தன்கேணி, சிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை 20 லட்சம் ரூபா பெறுமதியான பித்தளைப் பொருள்கள் திருடப்பட்டுள்ளன. பித்தளையினாலான 25 குத்துவிளக்குகள் திருடப்பட்டுள்ளன என்றும் பித்தளையினாலான பஞ்சாலாத்தி உட்பட ஆலயப் பொருள்கள் பலவும் களவாடப்பட்டுள்ளன என்று ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ வாசுதேவக் குருக்கள் தெரிவித்தார்.

''4, 5 பேர் சேர்ந்தாலும் தூக்க முடியாத அடுக்கு குத்துவிளக்குகள் சுமார் 6 அடி உயரமானவை ஐந்தை எடுத்துச் சென்றிருக்கிறார்கள். ஒவ்வொன்றின் பெறுமதியும் இன்றைய விலையில் 150,000ரூபா வரும். ஏனைய பித்தளைப் பொருள்கள் யாவும் 10 முதல் 13 லட்சம் பெறுமதியானவை'' எனவும் இவ்வாறு திருட்டுப் போன பொருள்களில் 200 வருடங்கள் பழைமை வாய்ந்த வெண்கலப் பெருள்களும் அடங்கும் என்றும் குருக்கள் தெரிவித்தார்.

இரவு 12 மணிக்குப் பின்னர் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

அலவாங்கு மற்றும் இரும்புக் கம்பியால் கதவுகள் உடைக்கப்பட்டு, களஞ்சிய அறையில் வைக்கப்பட்ட சகல பித்தளைப் பொருள்களும் களவாடப்பட்டுள்ளதாகப் பொலிஸார் கூறினர். திருடர்கள் கோயிலின் தெற்குப் புறமுள்ள மதில் மூலம் உள் இறங்கி திருட்டில் ஈடுபட்டுள்ளனர்.

வட்டுக்கோட்டைப் பொலிஸார் ஆலயத்துக்கு நேரில்வந்து விசாரணைகளைமேற்கொண்டனர்.

இதேவேளை சங்கானை தெற்கில் கடந்த 9 ஆம் திகதி பட்டப்பகலில் மாவடி ஆலய வீதியில் உள்ள ஓர் வீட்டில் கைத்தொலைபேசியும் கைப்பையும், அராலி வீதியில் ஓய்வு பெற்ற அதிபரின் வீட்டில் இரண்டு கைத்தொலைபேசிகளும் 49 சீசீ மோட்டார் சைக்கிளும் ஒரு நபரால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. இது பற்றி மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டும் அவர்களால் இதுவரை எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட வில்லை என்று மக்கள் கூறுகின்றனர்.

சங்கானை மாவடி ஞான வைரவர் ஆலயத்தில் சீடீ பிளேயர் ஒன்றை திருட எடுக்கப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டுள் ளது. ஓட்டோ சாரதி ஒருவர் சீடீ பிளேயரை ஆலயத்தின் அறையில் இருந்து எடுத்து வரும் போது தற்செயலாக அங்கு சென்ற அயல்வீட்டுக்காரரைக் கண்டவுடன் சி.டீ.பிளேயரைக் கைவிட்டு ஓட்டோவில் தப்பிச் சென்றுவிட்டார். இவை யாவும் பட்டப்பகலில் நடைபெற்ற சம்பவங்களாகும்.

வலிமேற்கில் குறிப்பாக சங்கானைப் பகுதியில், வீடுகளில் ஆள்கள் இல்லாதபோது இவ்வாறான சம்பவங்கள் அதிகரித்துள்ளதால் வீட்டில் ஒருவராவது தங்கி நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகப் பொது மக்கள் விசனப்படுகின்றனர்.

திருட்டுக்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்காதிருக்கும் பொலிஸார் மீதும் அவர்கள் ஆத்திரமுற்றுள்ளனர். (உ)

# வறுமையைத் தணிக்க உதவி

யாழ்ப்பாணம், ஓக.14

மிகவும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள 5 குடும்பங்களுக்குத் தியாகி அறக்கொடை நிறுவனம் மாதாந்த நிதி உதவித் தொகை வழங்கி வருகிறது என்று நவாலி வடக்கு முதியோர் சங்கத் தலைவர் டாக்டர் சோ.சுந்தரராஜன் தெரிவித்தார்.

''வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட நவாலி வடக்குப் பகுதியில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட 20 பேருக்கு உதவுமாறு விடுத்த கோரிக்கையை அடுத்து முதற்கட்டமாக வங்கி மூலமாக 5 குடும்பங்களுக்கு மாதாந்த நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது'' என்றார் அவர். (உ-302)

# நகரில் நேரம் காட்டா மணிக்கூட்டுக் கோபுரம்

## பராமரிக்க மாநகர சபைக்கு நேரமில்லை

வண்ணை, ஓக.14

யாழ்.குடாநாட்டில் அமைந்துள்ள ஒரே ஒரு மணிக்கூட்டுக் கோபுரத்தில் பொருத்தப்பட்டுள்ள நான்கு பக்க கடிகாரங்களும் பழுதடைந்து மாதங்கள் பல கடந்துள்ளன.

1995ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அரச கட்டுப்பாட்டுக்கு யாழ்.நகரமும் குடாப் பகுதியும் வந்திருந்ததையடுத்து பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸால் கடிகாரங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டதை அடுத்து மணிக்கூண்டுக் கோபுரம் புனரமைக்கப்பட்டது.

அந்தக் கடிகாரங்கள் சரியான பராமரிப்பின்றிப் பழுதடைந்தன. பின்னர் வேறு கடிகாரங்கள் மாற்றப்பட்டன. ஆனால் இப்போது அவையும் பழுதடைந்துள்ளன.

போர்ப் பூமியில் இருக்கும் மணிகூட்டுக் கோபுரமாக இன்றும் இது காட்சி அளிப்பதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த விடயத்தில் யாழ்.மாநகர சபை ஏனோ தானோ என்றிருப்பதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (உ-160)

## காலத்தின் பதிவுகள்...




காக்கப்பட வேண்டியவை: யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த, புலம்பெயர் இளம் இயக்குநரான சோமீதரனால் நெறியாள்கை செய்யப்பட்ட 'முல்லைத்தீவு சாகா' என்ற ஆவணத் திரைப்படம் இந்தியாவில் விருது பெற்றுள்ளது. வன்னி இறுதி யுத்தம் குறித்த இந்த ஆவணப்படம் 46 நிமிடங்கள் கொண்டது. கேரளாவின் திருச்சூரில் நடைபெற்ற திரைப்பட விழாவில் திரையிடப்பட்ட இந்தப்படம் விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது. கேரள முதலமைச்சர் சோமீதரனுக்கு இவ்விருதை வழங்கினார். யாழ்.பொது நூலக எரிப்பை மையமாக வைத்து 'எரியும் நினைவுகள்' என்ற ஆவணப் படத்தையும் இவர் முன்னர் தயாரித்திருந்தார். (த-38)

# கைதடி மானிப்பாய் வீதி எப்போது புனரமைக்கப்படும்?

கைதடி - மானிப்பாய் வீதிக்கு காப்பெற் போடுவதற்கு கைதடிச் சந்திப் பகுதியில் கடந்த உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட பணிகள் இதுவரை தொடரப்படவில்லை.

இந்த வீதி சிறந்த முறையில் செப்பனிடப்பட்டால் கண்டி வீதியின் ஊடாக யாழ். நகரப் பிரதேசப் போக்குவரத்துக்கு மாற்றுப்பாதை அமையும்.

அதேவேளை இந்த வீதியில் கோப்பாய் பக்கமாக அமைக்கப்பட்ட பாலத்தின் இரு கரையும் கிரவல் இடப்பட்டுள்ளது. கடந்த ஒரு வருடமாக இந்த நிலைமையே காணப்படுகிறது.

இந்த நிலையில் இந்த வீதியால் பயணிப்போரது வாகனங்கள் காற்றுப் போகும் நிலைமை ஏற்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ம-121)

# கசிப்பு வைத்திருந்த பெண்ணுக்கு அபராதம்

தென்மராட்சி, ஓக 14

கசிப்பு வைத்திருந்த பெண் ஒருவருக்கு சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளையினால் 20 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. கடுமையாக எச்சரிக்கப்பட்ட அந்தப் பெண் அபராதத்தைச் செலுத்தத் தவறின் மூன்று மாத சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தார் நீதிவான்.

சாவகச்சேரி மதுவரி நிலையப் பொறுப்பதிகாரியினால் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட மிருசுவில் தவசிகுளத்தைச் சேர்ந்த ஸ்டாலின் ஜெயமதி என்பவருக்கே இந்தத் தண்டனை வழங்கப்பட்டது.

வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது குறித்த பெண் குற்றத்தை ஒப்புக் கொண்டார். (உ-207)

# கறுப்பு உடையில் கள்வர்கள் கச்சாய் மக்கள் அச்சத்தில்

தென்மராட்சி, ஓக. 14

சாவகச்சேரி, கச்சாய் வீதி, ஓராம் கட்டைப் பகுதியில் இரவு வேளையில் கறுப்பு உடை அணிந்து நடமாடும் திருட்டுக் கும்பலால் தாம் கடும் அச்சமடைந்துள்ளனர் என்று அந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

கடந்த வாரம் அந்தப் பகுதியில் உள்ள வீடொன்றில் உள்நுழைந்த திருடர்கள் 75 ஆயிரம் ரூபா பணத்துடன் மாயமாகி உள்ளனர். மறுநாள் மேலும் ஒரு வீட்டினுள் உட்புகுந்த வேளையில் வீட்டுப் பெண் விழித்துக் கொண்டு கூக்குரல் இட்டதால் திருடர்கள் தப்பியோடிவிட்டனர்.

அன்றைய தினமே மற்றொரு வீடொன்றில் அவர்கள் புகுந்துள்ளனர். அந்த வீட்டுப் பெண் கதவுக்கு தடுப்புக்குப் பயன்படுத்தும் பலகையினால் (பார்) திருடனின் தலையில் தாக்கியபோது பெண்ணை தள்ளி வீழ்த்திவிட்டு திருடன் தப்பியோடிவிட்டான் என்று தெரிவிக்கப்பட்டது.

திருடர்களின் நடமாட்டம் தொடர்பாக அல்லாரை இராணுவ முகாம் மற்றும் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவித்தனர். (உ-207)

# கீரிமலை தீர்த்தக் கடலை சுத்தப்படுத்தக் கோரிக்கை

கீரிமலை ஆலயத்துக்கு அருகிலுள்ள கடற்பகுதியை மக்கள் நீராடத்தக்க வகையில் மாற்றியமைத்து இந்தக் கடற்பகுதியில் காணப்படும் கற்பாறைகள் மற்றும் முருகைக் கற்கள் என்பவற்றை அகற்றுவதற்கும் இங்கு அமைக்கப்பட்டுள்ள தடுப்பு அரணை புனரமைப்பதற்கும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகும் என்று மீன் பிடித் துறை மற்றும் கடல்வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ணவிடம் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் அமைச்சர் ராஜித சேனாரட்ணவுக்கு மனு ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

''ஆடி அமாவாசை அன்று கீரிமலைக் கடற்பகுதியில் நீராடிய பலர் கற்பாறைகள் மற்றும் முருகைக்கல் என்பவற்றால் காலில் கீறப்பட்டுக் காயமடைந்தனர். எனவே கீரிமலைக் கடற்பரப்பை மக்களுக்குப் பாதிப்பின்றி நீராடத்தக்க வகையில் மாற்றி அமைக்க வேண்டும்'' என்று அந்த மனுவில் நாடாளுமன்ற உறுப்பினர் கோரியுள்ளார்.

இந்து கலாசார அமைச்சால் அமைக்கப்பட்ட தடுப்பு அணை சேதமடைந்திருப்பதால் அதனைப் புனரமைக்க 50 மில்லியன் ரூபாவை ஒதுக்குமாறு [illegible] ள்ளார்.

# வேலணை இராசையா வீதி புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஓக.14

வேலணை இராசையா வீதி புனரமைப்புப் பணிகள் 'நெல்சிப்' வேலைத்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சோழாவத்தை சனசமூக நிலையத்தின் அனுசரணையுடன் அந்தப் பகுதியில் உள்ள பொது மக்களின் பங்களிப்புடன் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், வீதியில் காணப்படும் பற்றைகள் வெட்டித் துப்புரவு செய்யப்படுவதாகவும் விரைவில் வீதி மக்கள் பாவனைக்கு விடப்படும் எனவும் வேலணைப் பிரதேச சபை செயலாளர் கே.தவராஜா தெரிவித்தார். (த-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NIBM
BUILDING COMPETENCIES

தேசிய வியாபார முகாமை நிறுவனம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC)
அங்கீகாரம் பெற்ற அரச நிறுவனம் உங்களுக்கும் வாய்ப்புகளை வழங்குகிறது.

மொழிக் கற்கை நெறிகள்

- IELTS preparatory Course
- English for Communication
- Certificate Course in English Language
- Advanced Certificate Course in English Language
- Certificate Course in Sinhala Language

Special Discount




தொடர்புகளுக்கு:
077 071 6974
021 222 0360
021 222 0361
021 222 0362

Call Now

இல. 40 கல்லூரி வீதி
(யாழ். இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக) யாழ்ப்பாணம்.

## பாம்பு தீண்டியது

தென்மராட்சி,ஒக.14

குவிக்கப்பட்டிருந்த குப்பையை வாகனத்தில் ஏற்றும் பணியில் ஈடுபட்டிருந்தவர் குப்பைக்குள்ளிருந்த பாம்பினால் கடியுண்டார்.

இந்தச் சம்பவம் நாவற்குழி சந்திக்கு அருகில் இடம்பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த சுவாம்பிள்ளை சகாயநாதன் (வயது-56) என்பவரே பாம்பினால் கடியுண்டவராவார்.(ம-207)

வாகனம் விற்பனைக்கு



Suzuki Escudo 2010/05 - 24 x G மொடல், Intellget. Key, Muttifunction, 8000 Km, Seut Heater, Cruise Contrd HID Scoop 17" Orginal Allow Wheel ஜீப் வண்டி உடன் விற்பனைக்கு தொடர்பு 0729994777, 0711371320

புதிய வகுப்புக்கள் விரைவில் ஆரம்பம்

IDM
Affiliated Campus
Jaffna Branch

* DIP ICT
* e-citizen
* HND
* ADCN
* Ms Office
* Multimedia
* MCP,
* MCTS,
* CCNA,
* MCP.

* Programming (C,C++,Java(J2SE,J2EE).PHP,ASP.NET)
# 216 Navalar Road, Jaffna, Sri Lanka
T: 021 222 9901 | info@idmjaffna.com | www.idmjaffna.com

## சேவைநலன் பாராட்டு



Helga Rockstedt
Pflegedienst
Haupt Str - ll D
53604 Baa Honeff

HELGA ROCKSTEDT
ASHVINY JOGANANDAN



தங்களின் சேவை மேலும் மேலும்
தொடர வேண்டும் என வேண்டுகின்றேம்.

wir wunschen Ihnen alles gute Fuer Die Zukuntt

MFG: Thiagaraj Parvathy
Thiagaraj yoganandan
Nithiananthan -Nekethan.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 06 . 08 . 1939
மறைவு 26 . 07 . 2010

### அமரர் சிவகுரு சண்முகலிங்கம்

அன்பின் ஆருயிரே! எங்கள் குடும்பத்தின்
குல விளக்கே! எங்கே சென்றீர்கள்
நாள்கள், மாதங்கள் பல கடந்து விட்டன
அப்பா எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் கனவலைகள், நினைவலைகள்,
நிழல்கள் எங்களைச் சூழ்ந்திருக்குமப்பா
அப்பா உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

பிரிவால் துயருறும் :
ஆசை மனைவி
பிள்ளைகள்
பேரப்பிள்ளைகள்.

96, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.
021 2222491

## 17 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 23 . 04 . 1965
மறைவு 05 . 07 . 1994

### அமரர் சண்முகலிங்கம் சுதாகரன்

நினைவில் நிஜமாகி
நிஜத்திலே நிழலாகி
மனதிலே நிலைத்தோரே
நித்தமுங்கள் முகம் தேடி
நினைவுகளை சுமக்கின்றோம்
பல ஜென்மம் ஆனாலும்
பாசமென்றும் மாறிடாது

96, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.
021 2222491

பிரிவால் துயருறும் :
அண்ணா, அண்ணி,
அக்கா, அத்தான்,
தம்பிமார், மச்சான்மார்,
பெறாமக்கள், மருமக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போட்டிப் பரீட்சைகளில் தமிழர்கள் ஏன் பின் தங்குகிறார்கள்?

"இலங்கை நிர்வாக சேவைக்குத் தெரிவான 145 சிங்கள அதிகாரிகள் யாழ்ப்பாணத்தில் ஒருமாத காலப் பயிற்சியை நிறைவு செய்துவிட்டுச் சென்றனர்''.

''வட மாகாண சபை பட்டதாரி உத்தியோகத்தர் தெரிவுப் பரீட்சையில் 70 வீதமானோர் இரு பாடங்களிலும் ஆகக் குறைந்த 40 புள்ளிகளைக் கூடப் பெற்றுக் கொள்ளவில்லை''.

இந்தச் செய்திகளை நீங்களும் பார்வையிட்டிருப்பீர்கள். தமிழ்பேசும் பட்டதாரிகள் போட்டிப் பரீட்சைகளில் மிகவும் மந்தத் திறனைக் கொண்டிருப்பதே மேற்சொன்ன இரு செய்திகளுக்குமான காரணம் எனலாம்.

பல்கலைக்கழகத்தில் உள்வாரியாக, வெளிவாரியாகப் பலவிதமான கற்கைநெறிகளை நிறைவு செய்தே மாணவர்கள் பட்டங்களைப் பெறுகின்றனர்.

ஆனாலும், அவர்களின் வினைத்திறன் மட்டம் இவ்வளவு தூரம் குறைந்திருப்பதற்கு என்ன காரணம்?

பட்டம் பெற்ற அனைவருக்கும் வேலை வழங்கும் அரச கொள்கை 5 வருடங்களுக்கு முன்புவரை கடைப்பிடிக்கப் பட்டது. பலவித காரணங்களால் இந்தக் கொள்கையை அரசு கைவிட்டுவிட்டது போலத் தான் தெரிகின்றது.

இதனால் பட்டம் பெறுகின்ற பாடப்பரப்பில் தனித் தனியாகப் போட்டிப் பரீட்சை நடத்தப்படுவதில்லை. அரச பதவிக்குரிய திறன்களை அளவிடும் பாடப்பரப்புக்களில் மட்டுமே பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. இதனால் பட்டதாரிகள் நியமனத்துக்காகப் போட்டிபோடும் நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளது.

பொதுஅறிவு, பொது உளச்சார்பு, மொழித்திறன், முகாமைத்துவ உளச்சார்பு, கிரகித்தல் போன்ற பாடங்களில் சிலவற்றில் பரீட்சை நடத்தப்பட்டு அரச சேவைக்கு ஆள்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

பரீட்சைக்குத் தோற்றியோரில் மிகக் குறைந்த வீதமானோரே பதவிக்குத் தெரிவு செய்யப்படுகின்றனர் என்ற நிலையில் போட்டி மிகக் கடுமையானது.

இலங்கை நிர்வாக சேவை, இலங்கை கல்வி நிர்வாகசேவை, இலங்கை வெளிநாட்டுச் சேவை, இலங்கை கணக்காளர்சேவை, இலங்கை விஞ்ஞான சேவை போன்ற அகில இலங்கை சேவைகளில் தமிழ்ப் பரீட்சார்த்திகள் தெரிவு செய்யப்படுவதில்லை. அல்லது மிக மிகக் குறைந்த எண்ணிக்கையிலே தெரிவு செய்யப்படுகின்றமையைக் காண முடிகின்றது. இதற்கு இன ஒடுக்கல் முக்கிய காரணமாக இருக்கின்ற போதும் எமது தரப்பில் மேலும் சில காரணிகளும் இருக்கின்றன என்று கல்வியியலாளர்கள் கூறுகின்றனர். அவற்றை இங்கு பார்க்கலாம்.

### பரீட்சை வினாத்தாள்

பரீட்சைக்கான வினாத்தாளின் கட்டமைப்பானது காலத்துக்குக் காலம் மாற்றப்படுகின்றது.

வினாத்தாளின் அமைப்பு இந்தமுறை இப்படித்தான் வருமென்பதை சிங்களப் பரீட்சார்த்திகள் ஏதோ விதத்தில் மோந்து பிடிக்கின்றனர் எனக் கூறப்படுகின்றது.

கருத்தரங்குகள் மூலம் அதற்கேற்ற தீவிர தயார்ப்படுத்தலில் சிங்களப் பரீட்சார்த்திகள் இறங்கி, உயர் புள்ளிகளைத் தட்டிச் செல்கின்றனர்.

தமிழ்ப் பரீட்சார்த்திகளுக்கு இந்த வாய்ப்பு இல்லாததால் போட்டியில் பின்தங்க நேரிடுகிறது.

அத்துடன், தயார்ப்படுத்தலில் தமிழ்ப் பரீட்சார்த்திகள் அனேகமானோர் அதிக அக்கறை காட்டுவதும் கிடையாது.

### புள்ளி வழங்கல்

பரீட்சை ஒன்றில் 10 வினாக்கள் கேட்கப்படுகின்றன எனவும் அவை ஒவ்வொன்றுக்கும் சரியான விடைக்கு 10 புள்ளிகள் வழங்கப்பட வேண்டும் எனக் கொண்டால், சிங்கள மொழியில் விடைத்தாள் திருத்துபவர்கள் எழுதும் விடை சரியாக இருந்தால் 10 புள்ளிகளையும் அப்படியே போடுவார்கள். அதே விடயத்துக்குத் தமிழ் பரீட்சகரோ ஒன்பது அல்லது எட்டுப் புள்ளிகள்தான் வழங்குவார்களாம். உளப்பாங்கு அப்படி.

இது பரீட்சை தொடர்பாக நீண்டகால அனுபவமுடைய வளவாளர் ஒருவர் கவலையுடன் கூறிய கருத்து. இதனால் சிங்கள மாணவர்கள் 100 புள்ளிகளுக்குப் போட்டியிட, தமிழ் மாணவர்கள் 90 அல்லது 80 புள்ளிகளுடன் போட்டியிட வேண்டியுள்ளது.

இது தேசிய ரீதியிலான போட்டியிடலில் எமது மாணவரைப் பின்தங்கச் செய்கின்றது.

### பரீட்சைக்குத் தயார்ப்படுத்தல்

தேசிய ரீதியான போட்டிப் பரீட்சை ஒன்றுக்கு விண்ணப்பம் கோரப்பட்டதும் சிங்கள மாணவர்கள் அது தொடர்பாக நடத்தப்படும் செயலமர்வுகள், கருத்தரங்குகளுக்குக் கட்டணம் செலுத்திக் கிரமமாகச் செல்லுகின்றனர்.

பரீட்சை நடைபெறும் திகதி வரையில் இடைவிடாது கற்றலில் ஈடுபடுகின்றனர். இது அவர்களின் வெற்றிக்குரிய வாய்ப்பை அதிகரிக்கச் செய்கின்றது.

தமிழ்ப் பிரதேசங்களை எடுத்துக் கொண்டால் இந்தநிலையில்லை. போட்டிப் பரீட்சைகள் தொடர்பான ஆற்றலுள்ள சிறந்த வளவாளர்கள் பலர் இங்குள்ளனர்.

இவர்கள் ஆரம்பிக்கும் வகுப்புக்களுக்குப் பரீட்சார்த்திகள் மிகக் குறைந்த எண்ணிக்கையில்தான் செல்கின்றனர். செல்பவர்களும் ஒவ்வொரு இடமாகச் சென்று நுனிப்புல் மேய்வதில் தான் ஈடுபடுகின்றனர்.

ஒரே இடத்தில் முழுமையான நம்பிக்கையுடன் கற்கும் மனோபாவம் பலரிடமில்லை. இதனால் கற்கை தொடர்பான பூரணமான அறிவும் கிடைக்காது.

மிகப் பெருமளவானோர் பரீட்சை அனுமதி அட்டை கிடைத்ததும்தான் வகுப்புகளுக்கு ஆலாய்ப் பறப்பார்கள். புத்தகங்களை வாங்கி அவசரக் கோலத்தில் மூளைக்குள் திணிப்பார்கள்.

இந்தக் காரணங்களால் தமிழ்ப் பரீட்சார்த்திகளின் பெறுபேறு மிகத் தாழ்ந்த மட்டத்திலிருக்கும்.

### வினாத்தாள் பற்றிய அறிவின்மை

போட்டிப் பரீட்சை தொடர்பான வர்த்தமானி அறிவித்தலில் என்னென்ன வினாத்தாள்கள், அவற்றில் எந்தவிதமான கேள்விகள் அமையும் எனக் கூறப்பட்டிருக்கும்.

இதனை நன்றாக வாசித்து விளங்கிக் கொள்ளாததால் பரீட்சையில் கோட்டை விடுபவர்களும் பலர் உள்ளனர்.

**மருதன்**

பொது அறிவுக்கும் பொது உளச்சார்புக்கும் உள்ள வித்தியாசம் எத்தகையது எனத் தெரியாத பரீட்சார்த்திகள் இன்று வரையும் இருப்பது கவலைக்குரியது.

போட்டிப் பரீட்சைகளில் ஏன் நாம் பின்தங்கி உள்ளோம் என மேலேயுள்ள காரணங்கள் மூலம் அறிய முடிகின்றது.

எமது பலவீனங்களுக்கு நியாயப்படுத்தல்களைச் சொல்வதை விடுத்து எம்மை நாமே சுயவிமர்சனம் செய்து சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

பரீட்சைகளில் எம்மைப் பலவீனமாக்கும் முயற்சிகள் சில வேளை இடம்பெறலாம்.

ஆனாலும், நாம் பலமடைய வேண்டிய வழிவகைகளில் ஈடுபடுவோம். தேசியப் பரீட்சைகளில் வெற்றிகொள்வோம்.

சிங்கள மொழிமூலம் கற்கும் மாணவர்களுடன் சிறந்த தொடர்பாடலை வைத்துக் கொள்வதும் எம் வெற்றிக்கு வழிவகுக்கும்.



# நல்லூர் கந்தன் மஹோற்சவம் (பதினோராம் திருவிழா)



**எம் குறை தீர்ப்பாய்..!**


*எழிலான நல்லையம்பதியிலே*
*அருளோங்க வீற்றிருக்கும்*
*ஆறுமுக வடிவேலா*
*அச்சம் நிறைந்த*
*அவல வாழ்வு யாவும் நீங்கி*
*எமக்கு ஆறுதல் கிடைத்திட*
*மயிலேறி வந்திடையா*
*குறை தீர்க்க வேண்டுகின்றோம்*
*ஊரெங்கும் உன் மணியோசை*
*ஒலித்திட*
*உள்ளமெல்லாம் மகிழ்ச்சி*
*வெள்ளம் அலைபாய - உன்*
*அடி பணிந்து வேண்டுகின்றோம்*
*அள்ளியன் பினைச் செலுத்தியே*
*நின் பாதமதில்*
*அடைக்கலம் தந்து காத்திடுவாய்*

செ.ரவிசாந், குப்பிளான்.

**நல்லைக் கந்தன் ஓர் ஒளிவிளக்கு**

ஆதியும் அந்தமும் இல்லா - அற்புத விளக்கு
அருளே உருவான - ஞான விளக்கு
அடியவர்களைக் காக்கும் - அகல் விளக்கு
இடர்களைக் களையும் - இன்பவிளக்கு
குடும்பத்தவர்களைக் காக்கும் - குலவிளக்கு
தஞ்சம் என சார்வார்க்கு - அபயவிளக்கு
முக்தி தரும் - மோட்ச விளக்கு
நல்லைக் கந்தன் ஓர் - ஒளி விளக்கு

சொக்கலிங்கம் தர்மகுலசிங்கம், நாயன்மார்கட்டு



**நல்லூர் முருகப் பெருமான்**

முத்துக் கொரு வித்துக் குருபரன்
செக்கச் செய சக்திச் சரவணப்
புத்திக் கொரு புத்ரன் என ஆகி

ஜெகமெச்சத் துணைப்ரி
தக்கத் துணையனாய் - தவத்
தனித் திரு நல்லூர் - இன்

முத்துக் குருவரன் - அழகு
மெத்தக் கவர்பவன் - உறு
சக்தி கொடுப் பதியாகி

அப்பன் புனைபெயர்
ஆதி சிவனென உச்சியிற்
கங்கை உடையோனின்

மகன் முகமாறு தரித்துலவாகில்
தனித்துவப் பொருள் கூறும்
திரு நல்லூர்ப் பதி உறை பெருமானே

சுபாஷினி பிரணவன், அச்சுவேலி.

விழாச் சிறப்புற பிரார்த்திப்போர்:

Midea Electro Mart

No: 1-1, 1-H, Stanley Road, Jaffna.
T.P: 021 222 4566, Fax:021 222 1646.

No: 04, New Market, Chavakachcheri.
T.P: 021 227 0268, Fax:021 227 0129

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
14 ஒகஸ்ட் 2011 ஞாயிற்றுக்கிழமை

# முகாமைத்துவ கற்கைநெறி வணிகபீடாதிபதி

# பேராசிரியர் க.தேவராஜா அவர்களின் மணிவிழா வாழ்த்து

## அருளாசிச் செய்தி

பேராசிரியர் க.தேவராஜா இன்று மணி விழாக் காண்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். எளிமையான தோற்றம், இனிமையான பேச்சு, எடுத்த செயலை செவ்வனே ஆற்றுகின்ற செயற்றிறன், எல்லோரையும் மகிழ்விக்கின்ற மனப்பாங்கு, அனைவரையும் தன் வசப்படுத்திய பெருமை பேராசிரியரைச் சாரும்.

பல்கலைக்கழக மாணவர்களது பண்பையும், ஒழுக்கத்தையும் பேண வேண்டும் எனச் செயற்பட்டவர். நெருக்கடி காலகட்டங்களில் யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தைச் சோர்வடைய விடாமல் பேணிக் கொள்கின்றதிறன் அனைவரையும் மகிழ்ச்சி அடையச் செய்தது. குடும்பத்துக்கு நல்ல தலை வனாக எல்லோரிடமும் இனிமையாய், அன்பாய் பழகும் பேராசிரியர் க.தேவராஜா அவர்கள் இன்று மணி விழாவைக் கண்டு குடும்பத்துடன் சீரும் சிறப்புடன் வாழ்வதோடு மேலும் பல உயர்வு பெற்றுப் பல விழாக் கண்டு பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

ஆதீன முதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்



## வாழ்த்துச் செய்தி

முத்தமிழ் ஓங்கி வளர்ந்த புனித பூமியான இணுவில் கிராமத்துக்குப் பெருமை சேர்ப்பதற்கென தோன்றிய பேராசிரியர் க. தேவராஜாவின் மணிவிழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

"கற்கக் கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்னும் வாக்குக்கு அமைய மேலோங்கிய அறிவு, ஞானம் பெற்ற அவர் தன்னுடைய மாணவர்களை நன்னிலைக்கு உயர்த்தியது மட்டுமல்லாது தான் கற்ற கல்விக்கேற்ப அறம், அன்பு, பண்பு கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்னும் அனைத்துக் குணங்களையும் கொண்டு தன் கல்வித் தொழிலுடன் சமூகத் தொண்டும் புரிகிறார். இவருக்கு "தேவகலசம்" எனும் பெயரில் நூல் வெளியிடுவது மிகவும் பொருத்தமானதே.

கனிவான பேச்சும், உயர்வான எண்ணமும், தன்னடக்கமான பெருமையும், தனக்கேற்ற மிடுக்கான தோற்றமும் தவமும் தவமுடையார்க்கு என்பதற்கேற்ப சகல நற்பண்புகளையும் தன்னகத்தே கொண்டு வாழும் வணிக பீடாதிபதி க.தேவராஜாவும் அவரது குடும்பமும் சீரும் சிறப்பும் பெற்று வாழ்வாங்கு வாழ வாழ்த்துவதுடன் அவரது பணி பல்லாண்டு காலம் தொடர வாழ்த்துகின்றேன்.

திருமதி. எஸ்.மஞ்சுளாதேவி, பிரதேச செயலர், உடுவில்.

## ஆசிச்செய்தி

தற்பொழுது பேராசிரியராக எல்லோராலும் போற்றப்படுகின்ற தேவராஜாவை எனக்கு சிறுவயது முதற் கொண்டே நன்றாகத் தெரியும். இவர் மிகவும் நல்ல மனி தர். பண்பானவர், பணிவானவர், இனிமையாகப் பழகுவார், எல்லோராலும் விரும்பப்படுபவர், மக்கள் தொண்டன், இயல்பாவே சேவை செய்யும் மனம் உடையவர், அறவழி நின்று வாழ்பவர், அயராத உழைப்பாளி, ஆன்மிகவாதி. பரராஜசேகரனிடத்தே அளவற்ற அன்பு கொண்டவர். தினமும் காலையில் எங்கள் குல தெய்வம் ஸ்ரீ பரராஜசேகரனை வணங்கியே பிற கருமங்களைத் தொடங்குபவர். இவரை தினமும் உதயபூசையின்போது எங்கள் கோயில் முன்றலில் காணலாம்.

பேராசிரியர் தேவராஜா மேன்மேலும் இந்தச் சமூகத்துக்கு தொண்டாற்றி, பேரும், புகழும் பெற்று சீரும்சிறப்புடனும் வாழ எல்லாம் வல்ல பரராஜசேகரப் பிள்ளையார் அருள் புரிய வேண்டி வாழ்த்தி, ஆசி வழங்குகின்றேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

பிரம்மஸ்ரீ வை.சோமஸ்கந்த குருக்கள்,
பிரதம குரு, இணுவில் அருள்மிகு ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோயில்

## வாழ்த்துச் செய்தி

ஈர நெஞ்சுடைய இனிய மனிதன். எவ்வித ஏற்றத்தாழ்வுமின்றி எவரையும் அரவணைக்கும் பண்புடையவர். எவரது வீட்டு நன்மை தீமையிலும் பங்காளியாக நின்று பணி செய்யும் சேவையாளன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வணிக முகாமைத்துவத்துறையில் பீடாதிபதியாக பணியாற்றும் பேராசான் என எத்தனையோ பெருமைகளால் சிறப்பிக்கும் தகுதி பெற்ற பேராசிரியர் க.தேவராஜாவின் மணி விழாக் குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகிறேன்.

மணிவிழா மேலும் பெருவிழாவாக நடைபெற எங்கள் குல தெய்வமாகிய பரராஜசேகரப்பிள்ளை யாரைப் பிரார்த்தித்து மணி விழாக்காணும் பேராசிரியர் பல்லாண்டு நிறைவாக வாழ வாழ்த்தி அமைகிறேன்.

ஆறு. திருமுருகன்,
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.
தலைவர், சிவபூமி அறக்கட்டளை.

## துணைவேந்தருக்கு வாழ்த்து

யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தில் 33 ஆண்டுகளாகக் கடமையாற்றும் பேராசிரியர் தேவராஜாவின் மணி விழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். கலைப்பீடத்தில் கணக்கியல்துறை விரிவுரையாளராக இணைந்த பேராசிரியர் தேவராஜா அவர்கள் துறைத் தலைவராகவும் கடமையாற்றியதுடன் முகாமைத்துவ வணிக பீடத்தின் பீடாதிபதியாகவும் கடமையாற்றியுள்ளார்.

பேராசிரியர் தேவரா்ஜா அனைவருடனும் அன்பாகவும் கருணையுடனும் பழகும் தன்மையுள்ளவர். அவரின் இனிய போக்கு அனை வரையும் கவர்ந்ததுடன் அவருடைய ஊர்மக்களால் அவரது 50 ஆவது வயதிலும் , இன்று 60 ஆவது வயதிலும் விழாக்களை எடுக்க உந்துதலாக அமைந்தது. பேராசிரியர் பலகாலம் நோய் நொடியின்றி வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

பேராசிரியர் வசந்தி அரசரத்தினம்
துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

பெயர்: பேராசிரியர்
கந்தையா தேவராஜா
முகவரி: கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்
பிறப்பு: 10.03.1951
ஆரம்பக் கல்வி: யா/தாவடி இந்து
தமிழ்க் கலவன் பாடசாலை
இரண்டாந்தரக் கல்வி: யா/கொக்குவில்
இந்துக் கல்லூரி
முதற்பட்டம்: ஸ்ரீ ஜெயவர்த்தனபுரம்
பல்கலைக்கழகம்
முதுமாணிப் பட்டம்: யாழ்ப்பாணம்
பல்கலைக்கழகம்
வாண்மைப் பட்டம்: இலங்கைக்
கணக்கியல் தொழில்
சட்ட நிறுவனம்
தொழில் விவரம்: யாழ்ப்பாணம்
பல்கலைக்கழகம்
- விரிவுரையாளர்- 1978
- சிரேஷ்ட விரிவுரையாளர்- 1990
- வணிகத்துறைத் தலைவர்-1994
- முகாமைத்துவக் கற்கைகள்
வணிகபீடாதிபதி 2005

சமூக சேவை
சமாதான நீதிவான்
தலைவர்- நிழல் நிறுவனம்
மாவட்டத் தலைவர்-
சர்வதேச லயன்ஸ் கழகம்
செயலாளர்- பாடசாலை
அபிவிருத்திச் சங்கம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி
உப தலைவர்- பழைய மாணவர் சங்கம்,
தாவடி இந்து தமிழ்க் கலவன்
பாடசாலை
பொருளாளர்-
ஆளுநர் சபை உறுப்பினர்-
தமிழ் அகதிகள் புனர்வாழ்வு
நிறுவனம் (TRRO)
உப தலைவர்- இணுவில்
திருவூர் ஒன்றியம்
போஷகர்- இணுவில் பொது நூலகம்
போஷகர்- திருநெறிய தமிழ்
மாணவர் கழகம்
ஆலோசகர்- ஜசுபி உற்பத்தி நிறுவனம்,
சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்
ஆலோசகர்- உள்ளூராட்சித்
திணைக்களம்.

## மனித நேயத்துக்கு வரைவிலக்கணம்

பேராசிரியர் தேவராஜாவுடன் நெருக்கமாகப் பழகியவர்களுக்கு நன்கு தெரியும் அவரின் மனிதநேயப் பண்புகள். மனித நேயத்துக்கு வரைவிலக்கணமே தேவராஜா என்று கூறினாலும் மிகையாகாது. தனது கௌரவம், அந்தஸ்து என்று கூடப் பாராமல் பிறரின் மனித நேயப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தன்னாலான முயற்சிகளை எடுப்பார்.

உயர்தரத்தில் முதல் முதலில் வர்த்தகப் பாடங்கள் அறிமுகப் படுத்தப்பட்ட வேளையில் அந்த நெறியில் இணைந்து கற்று இன்று பேராசிரியர் என்ற அந்தஸ்துடன் திகழும் தேவாவைப் பாராட்டுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

சகல மக்களதும் குறிப்பாக இணுவில் வாழ் மக்களது அன்புக்கும் மதிப்புக்கும் உரியவர்தான் எமது பேராசிரியர். அவரின் வீட்டில் என்றுமே ஒரு அன்பர்கள் கூட்டம் காணப்படும். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தேவை இருக்கும். குறைந்தது அவருடன் சரளமாகப் பேச வேண்டிய ஒரு தேவையாதல் இருந்திருக்கும்.

இவ்வாறு பலரையும் தன்பால் இழுக்கும் சக்தியும் பலரின் தேவைகளை நிறைவுசெய்ய வேண்டுமென்ற உள்ளமும், பிறரின் துயரைப் போக்கவேண்டுமென்ற நல்மனமும், எம் எல்லோருக்கும் அவர் எமக்குச் சொந்தமென்ற உணர்வைத் தோற்றுவிப்பவரு மான எமது அன்புக்குரிய தேவாவும் அவரது குடும்பமும் நீண்டகாலம் வாழ்ந்து இன்று போல் என்றும் செயற்பட ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்.

அ.பஞ்சலிங்கம்,
ஓய்வுநிலை அதிபர், யாழ்.இந்து - கொக்குவில் இந்து.
தலைவர், தேவா மணி விழாச்சபை.

## அருளாசிச் செய்தி

"அன்புடையார் என்றும் உரியர் பிறர்க்கு
அன்பிலார் எல்லாம் தமக்குரியவர்" என்பது வள்ளுவன் வாக்கு.

இந்தப் பொய்யா மொழிக்கு இலக்கணமாக இப்பூவுலகின் கண் வாழும் மனிதர்கள் எத்தனை பேர் என்பது தான் வினா? இந்த வகையில்தான் தேவாவின் உள்ளத்தின் உண்மையான அன்புநிலை தெரிய வருகிறது. ஊருக்கு ஓர் உத்தமன், உண்மையின் காவலன், ஏழை மக்களின் பங்காளன், சிறியவர்களில் இருந்து பெரியவர்கள் வரை நெருங்கி அன்பாகப் பழகும் தன்மை, எந்த வகையான உதவிகளையும் தன்னால் முடியுமானவரை மறுக்காது செய்யும் பண்பு என்றெல்லாம் அடுக்கிக் கொண்டே போகக் கூடிய அவரது உத்தம குணங்களை அறியாதவர்கள் இல்லை.

கொக்குவில் இந்துவின் மைந்தனாக இருந்து பல்கலைக்கழகத்தில். வர்த்தக முகாமைத்துவப் பட்டம் பெற்று உதவி விரிவுரையாளராகக் கடமையேற்ற காலத்தில் இருந்து இன்றுவரை அவரது பதவி நிலை உயர்ந்துகொண்டே வருகிறது. இது இறைவனின் அருட்கொடை. நல்ல உள்ளம் இறைவனின் அருட்கொடை. நல்ல உள்ளம் இதிலிருந்து புலனாகிறது. பதவி உயர உயர அவரது பணியும் உயர்ந்து செல்வதை எல்லோரும் அறிவர். வர்த்தக பீடாதிபதியாகி முதலாவது பேராசிரியராக யாழ்.பல்கலைக்கழகத்தில் பெருமை சேர் அவர்களையே சாரும். சமூகத்தில் பல்துறை சார்ந்த அமைப்புக்களிலே அவர் ஆற்றிவரும் பணிகளும் அளப் பெரியது. பாடசாலை அபிவிருத்தி அமைப்புகள், லயன்ஸ் அமைப்பு, நிழல் என்று அழைக்கப்படும் பொது அமைப்பு மற்றும் நலன்புரி நிலையங்கள் என்பவற்றுக்கும், அவரது பணி தொடர்கிறது.

பெற்றோரைப் பேணி உறவுகளைப் பேணி சுற்றத்தாரைப் பேணி தன்னை நாடி வந்தவர்களைப் பேணி வாழும் அந்த நல்ல மனிதரின் உள்ளம் ஒரு பெருங்கோயில். அவரது இந்த நல்ல பணிகள் மேலும் வளரவும் அவரது பதவிகள் மேலும் உயரவும் எல்லாம் வல்ல பரராஜசேகரன் பாதத்தை என்றும் வேண்டி நிற்கின்றோம்.

கூடப் பிறக்காத சகோதரனும், நண்பனுமாகிய ஞான.திருக்கேதீஸ்வரன்,
அமைப்பாளர், தேவா மணிவிழாச் சபை.
இரா. அருட்செல்வம், அமைப்பாளர், தேவா மணி விழாச் சபை.

## அருளாசிச் செய்தி

வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல் என்பதற்கு உதாரணமாக வாழ்ந்து யாவரையும் அன்புடன் உபசரித்து அவரவர் தேவைகளைப் பூர்த்தி செய்து அரும்பணி ஆற்றிவருபவர் எமது பேராசிரியர் க. தேவராசா. கல்விமானாக சமய சமூகச் சேவையாளராகத் தொண்டு புரிந்து தற்பெருமை கொள்ளாது சேவைபுரிபவர். தன்னை நாடி வரும் அனைவருக்கும் ஓடிச்சென்று உதவிகள் செய்யும் பெருந்தகையாளன்.

இவரது சேவை மேலும் பல்கிப் பெருக வேண்டும். இதனால் சமூகம், கிராமம், நகரம் மட்டுமன்றி நாடும் சிறப்படையவேண்டும். இவரது சேவை குன்றின் விளக்காக ஒளி தரவேண்டும். நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும் கொண்டு இவர் நீடு வாழ்ந்து யாவருக்கும் சேவையாற்ற எல்லாம் வல்ல எமது ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையாரை வேண்டுதல் செய்கின்றோம்.

வை.ஸ்ரீஸ்கந்தவரோதயன், செயலாளர்.
து.சிவராசா, பொருளாளர். தேவாமணிவிழாச்சபை.

## மணிவிழாச் சிறப்புற வாழ்த்துவோர்:





கஜசங்கவி
பிறிண்டேஸ்,
237, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
உரிமையாளர், ஊழியர்கள்.

செ.மகாலிங்கம் குடும்பத்தினர்,
இணுவில் தெற்கு,
ம.சண்முகலிங்கம் குடும்பத்தினர்,
லண்டன்,
ம.சற்குருநாதன் குடும்பத்தினர்,
சுவிஸ்சர்லாந்து,
நாகதீபன் குடும்பத்தினர், அமெரிக்கா,
ம.நாகதீபன், லண்டன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் உற்பத்திகளை விற்பதற்கான களமாக சங்கங்கள் மாறவேண்டும்

## கூட்டுறவுச் சமாசக் கூட்டத்தில் தீர்மானம்

கிளிநொச்சி, ஓக.14

எதிர்காலத்தில் பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களுக்கும் வடமாகாண கூட்டுறவுச் சங்கச் சமாசத்துக்கும் இடையிலான தொடர்புகள் வலுப்பெறவேண்டும்.

அங்கத்தவர்கள் தங்கள் பங்குப் பணத்தைச் செலுத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் பூரண அங்கத்தவர்களாக இணைந்து கொள்ள வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார்.

வடமாகாண பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் விசேட கூட்டம் கடந்த 10 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே அருந்தவநாதன் தலைமையில் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கொள்வனவு உப சபை ஒன்று வடக்கிலுள்ள ஐந்து மாவட்டப் பிரதிநிதிகளையும் உள்ளடக்கி அமைக்கப்படுவதுடன் கொள்வனவுகளை இந்தச் சபையே மேற்கொள்ள வேண்டும்.

உள்ளூர் உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதற்கான தளமாக பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களைப் பயன்படுத்த வேண்டும்.

உதாரணமாக: சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவுசங்கத்தில் பழரசத் தொழிற்சாலை உள்ளது. செட்டிகுளம் சங்கம் அப்பளத்தையும், பண்டத்தரிப்பு, வவுனியா சங்கங்கள் நல்லெண்ணெயையும் தயார் செய்கின்றன.

ஏனைய சங்கங்களில் நெல் உடைக்கும் தொழிற்சாலைகள் உள்ளன. தரமான உற்பத்திப் பொருள்களைப் பலநோக்குக் கூட்டுறவு சங்கங்கள் கொள்வனவு செய்து விற்பனை செய்தல் வேண்டும்.

வடமாகாண பலநோக்குக் கூட்டுறவுச் சங்கச் சமாசம் மாதந்தோறும் மத்திய வங்கியின் கடன் உதவியுடன் கொழும்பிலிருந்து கொள்வன செய்யும் பொருள்கள் நேரடியாகவே சங்கங்களுக்கு விநியோகிக்க வேண்டும்.

இந்தக் கூட்டத்தில் வடமாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய 47 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் கூட்டுறவு உதவி ஆணையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-311)

# சீரற்ற மின் விநியோகம்

மன்னார், ஓக.14

மன்னாரில் இரவு பகல் வேறுபாடின்றித் திடீர் திடீரென மின்சாரம் தடைப்படுவதால் மக்களின் இயல்பு வாழ்க்கையில் பெரும் இடையூறு தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நாடு பூராகவும் க.பொ.த.உ்யர்தரப் பரீட்சைகள் நடைபெற்று வருகின்றன. மன்னாரில் சீரான முறையில் மின்சாரம் வழங்கப்படாமையால் மாணவர்கள் பரீட்சைக்குத் தயார் செய்ய முடியாத நிலையில் அவலப்பட்டு வருகின்றனர்.

மேலும் முஸ்லிம் மக்கள் தற்போது நோன்பைக் கடைப்பிடித்து வருகின்றனர். சீரற்ற மின்சாரம் இவர்களுக்கும் பெரும் இடையூறாக அமைந்துள்ளது.

மன்னாரில் தொடர்ந்தும் மின்சாரம் சீரற்றுள்ள போதிலும் உரிய அதிகாரிகள் மெத்தனமாக இருந்து வருகின்றமை பொதுமக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

(க-601)

# கிளிநொச்சியில் வறிய மக்களின் சுயதொழில்களுக்கு உதவிகள்

கிளிநொச்சி,ஓக.14

கிளிநொச்சி மாவட்டத்தில் வறிய மக்களின் சுயதொழிலுக்கு உதவ கன்டிகாவ் இன்ரநேஷனல் எனும் அமைப்பு முன்வந்துள்ளது.

பச்சிலைப்பள்ளி - பளை தவிர்ந்த கரைச்சி, பூநகரி, கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுகளில் இவ் வருடத்தில் இதுவரை 27 பயனாளிகளுக்குத் தலா 57 ஆயிரம் ரூபா பெறுமதியான சுயதொழில் உதவிகளை இந்த அமைப்பு வழங்கியுள்ளது.

செப்ரெம்பர் மாத நிறைவுக்குள் இவ்வெண்ணிக்கை 100 ஆக அதிகரிக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்த நிதியின் மூலம் கணினிப் பயிற்சி நிலையம், புகைப்பட நிலையம், கதிரை வாடகைக்கு விடும் நிலையம், கோழித் தீவனக் கடை, பலசரக்குக் கடை, வெல்டிங் தொழிற்சாலை போன்ற சுயதொழில்களை இவர்கள் ஆற்றுகின்றனர்.

பலர் இந்த நிறுவனத்தின் பங்களிப்புக்கு மேலதிகமாக தமது சேமிப்பு, கடன்களைப் பயன்படுத்தியும் சுயதொழிலைச் செய்கின்றனர்.

சுயதொழிலைச் செய்வதற்கு போதுமான நிதியை இந்த நிறுவனம் தருவதாகப் பயனாளிகள் கூறுகின்றனர்.

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் இந் நிதியைப் பெற்றுக் கொடுத்துள்ளார். மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி த.கிருபாகரன் அவர்களின் ஒருங்கிணைப்பில் பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த சமூக சேவை அதிகாரிகள் இச் சுயதொழில் திட்டத்தின் பயனாளிகள் தெரிவிலும், சுயதொழில் முன்னேற்றத்திலும் அர்ப்பணிப்புடன் பங்காற்றி வருகின்றனர்.

சூழலுக்கேற்ற, இலாப மீட்டக் கூடிய சுயதொழில் தெரிவுகள் இடம் பெற்றதால் இவை வெற்றிகரமாக நடைபெறுகின்றன.

(க-121)

## விருந்தினர் வருகை...



வணிகத்துக்கு உயர்வு: அண்மையில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வணிக விழாவில் கலந்து கொண்ட விருந்தினர்கள் வரவேற்கப்படுகின்றனர். (405)

# வெடிபொருள்கள் மீட்பு

கிளிநொச்சி,ஓக.14

கிளிநொச்சி, முரசுமோட்டை, ஊரியான் பகுதியில் கிணற்றுக்குள் இருந்து வெடிபொருள்கள் சில மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் கிளைமோர் 14, 60 மி.மீ குண்டுகள் 13, டெட்டினேற்றர்கள் 200, எம்.டி.எம்.ஜி- ட்ரம் 01 ஆகியன அடங்கும்.

கிளிநொச்சி விசேட பொலிஸ் பிரிவினருக்குக் கிடைத்த தகவல் ஒன்றினை அடுத்து அங்கு விரைந்த அவர்கள் இவற்றைக் காணியொன்றில் கைவிடப்பட்ட நிலையில் இருந்த கிணற்றுக்குள்ளிருந்து மீட்டனர். மேலும் இந்த வெடிபொருள்கள் செயலிழக்கச் செய்யும் பொருட்டுப் பொலிஸாரால் எடுத்துச் செல்லப்பட்டன. (க-6)

# இருநாள் செயலமர்வு

முல்லைத்தீவு, ஓக.14

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் மனநல மேம்பாடு குறித்து தொண்டர்களைப் பயிற்றுவிப்பதற்கான இருநாள் செயலமர்வு அண்மையில் நடைபெற்றுள்ளது.

மாவட்டத்தின் அனைத்துப் பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 31 தொண்டர்கள் இதில் கலந்து கொண்டனர். இந்தச் செயலமர்வு ஆக்கபூர்வமாக நடைபெறுவதற்கு உளவளத்துணையினர் பெரிய பங்களிப்பை வழங்கினார்கள்.

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் மாகாண விசேட நிதித் திட்டத்தின் கீழ் இந்தச் செயலமர்வுக்கான நிதியை வழங்கியுள்ளது. கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி த.கிருபாகரன் இந்தச் செயலமர்வின் ஒருங்கிணைப்பாளராகக் கடமையாற்றினார்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் மனநல மேம்பாட்டுக்கான திட்டங்களுக்கு இத் தொண்டர்கள் உதவவுள்ளனர்.

(க-121)

# சமூக சேவைகள் நிலையம் திருநகரில்

கிளிநொச்சி,ஓக.14

கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் நிலையம் அமைப்பதற்கான காணி திருநகரில் பெறப்பட்டுள்ளது.

கால் ஏக்கர் நிலப் பரப்பை உடைய இந்த அரச காணியில் மாவட்ட அலுவலகத்தை அமைப்பதற்கான நிதியைப் பெற்றுக் கொடுக்கும் பணியில் வடமாகாண சமூக சேவைகள் பணிப்பாளர் ஈடுபட்டுள்ளார்.

மாகாண விசேட நிதித் திட்டத்தின் கீழ் இதற்கான நிதி கிடைக்கப் பெற்றால் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு விடும். மாவட்டத்தில் பிரதேச செயலகப் பிரிவுகளில் இயங்கும் சமூக சேவைப் பணிகளை ஒருங்கிணைக்கும் பணியில் இந்த அலுவலகம் ஈடுபடும்.

(க-121)

# ஊழியர்களுக்கு சைக்கிள்கள்

முல்லைத்தீவு,ஓக.14

முல்லைத்தீவு பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்குத் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரம்பரிய கைத்தொழில் அமைச்சினால் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்தே இவை வழங்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவு தெற்கிலுள்ள சங்கப் பணியாளர்கள் 22 பேருக்கும், முல்லைத்தீவு வடக்குச் சங்கப் பணியாளர்கள் 22 பேருக்கும் இவை வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட ஈ.பி.டி.பி. அமைப்பாளர் அ. ஜெயராஜ் (கிருபன்) பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு துவிச்சக்கர வண்டிகளை வழங்கினார். (க-555)

# இந்திய மீனவரின் சடலம் ஒப்படைப்பு

## கடல் வழியாக உறவினர்களிடம்

மன்னார், ஓக.14

கடந்த இரண்டாம் திகதி மன்னார் கடற்கரையில் கரையொதுங்கிய சடலம் அடையாளம் காணப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் சவுத்பார் கடற்கரையில் கடந்த இரண்டாம் திகதி சேதமடைந்த நிலையில் சடலமொன்று கரையொதுங்கியிருந்தது. பின்னர் அடையாளம் காட்டப் படுவதற்காக மன்னார் வைத்தியசாலையின் பிரேத அறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவராலயத்துக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது. அவர்கள் எடுத்த நடவடிக்கையின் பயனாகப் பிரேதத்தின் புகைப்படத்தைப் பார்த்த இறந்தவரின் உறவினர்கள் பிரேதத்தை அடையாளம் கண்டுள்ளனர்.

இதன் பிரகாரம் நாகர்கோயில் மேல் மூட்டத்தைச் சேர்ந்த 54 வயதான வி.அந்தோனி என்பவரின் சடலம் கரையொதுங்கியமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பின்னர் இது தொடர்பாக இறந்தவரின் உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

பின்னர் யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரக அதிகாரி வினோத் சர்மா கடற்படையினரின் உதவியுடன் நேற்று முன்தினம் சடலத்தை இறந்தவரின் உறவினர்களிடம் ஒப்படைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டார்.

இறந்தவரின் இரண்டு புதல்வர்களும், மருமகனும் சடலத்தைப் பொறுப்பேற்றனர். இது தொடர்பாக அவர்கள் கூறுகையில்:-

இறந்தவரான அந்தோனி கடந்த மாதம் 20 ஆம் திகதி சிறிய நாட்டுப் படகு ஒன்றில் மீன்பிடிக்கச் சென்றதாகவும் பின்னர் கரைக்குத் திரும்பவில்லையெனவும், ஆனால் அவர் சென்ற படகு கரையொதுங்கிக்கிடந்ததாகவும் தெரிவித்தனர்.

இறந்த இந்திய மீனவரொருவரின் சடலம் கடல்மார்க்கமாக ஒப்படைக்கப்பட்டுள்ளமை இதுவே முதல்தடவையென்றும் கூறப்படுகின்றது. (க-601)

# காட்சிப் படுத்தப்பட்டன

வவுனியா,ஓக.14

வவுனியா விவசாயப் பண்ணையில் நடைபெற்ற விவசாயக் கண்காட்சியில் சமுர்த்திப் பயனாளிகளின் உற்பத்திப் பொருள்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

சமுர்த்தித் திட்டத்தின் கீழ் கடன் பெற்றவர்களால் விளைவிக்கப்பட்ட விவசாயப் பொருள்கள் தான் இவ்வாறு காட்சிக்கு வைக்கப்பட்டன.

சோளம், உழுந்து, பயறு, கௌபி, பப்பாசி, கடலை, கச்சான் போன்ற தானிய வகைகளுடன், நெல்லும் காட்சிப்படுத்தப்பட்டது. இவை கண்காட்சியைப் பார்வையிட்ட அனைவரையும் கவர்ந்தது. (க-121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF JAFFNA

## BID NOTICE

The Chairman, University Procurement Committee, University of Jaffna will receive sealed bids from the qualified contractors for the following works.

**A) University of Jaffna, Thirunelvely, Jaffna**

| No. | Works Detail | Security deposit (Rs.) | Non-refundable deposit (Rs.) | Approximate direct cost of the work (Rs. in Million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|
| 1 | Electrical Repairs / Improvements at Viththiananthan Library, University of Jaffna | 6,000.00 | 500.00 | 0.6 | C10 (Buildings) |
| 2 | Rehabilitation / Addition Improvements / Painting External Exam Unit, University of Jaffna | 16,000.00 | 500.00 | 1.6 | C9 (Buildings) |
| 3 | Urgent Improvements to Board | 11,000.00 | 500.00 | 1.1 | C9 |
| 4 | Repairs to part of Damaged Building at Dept. of Siddha Medicine, University of Jaffna | 7,000.00 | 500.00 | 0.7 | C10 (Buildings) |

**B) Vavuniya Campus, Pampaimadu, Vavuniya**

| No. | Works Detail | Security deposit (Rs.) | Non-refundable deposit (Rs.) | Approximate direct cost of the work (Rs. in Million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|
| 1 | Security Barbed Wire Fencing for Vavuniya Campus, University of Jaffna at Pampaimadu | 85,000.00 | 500.00 | 8.5 | C7 (Buildings) |

Bid forms may be obtained from the ***Deputy Registrar / Capital Works & Planning Unit University of Jaffna*** upon producing valid registration book and receipt for the cash payment for the above bid fee at the Shroff's Counter, University of Jaffna till ***26.08.2011***.

Perfected bid should be sealed and marked with the job and the name of the work on the top left hand corner of the envelop and sent by registered post to reach the Registrar, University of Jaffna, P.Box 57, Thirunelvely, Jaffna or could be deposited in the bid box kept at Registrar's Office, University of Jaffna.

Bids will be accepted till ***2.30 p.m on 08.09.2011*** and open immediately thereafter.

Bidders or their accredited representatives could be present at the time of opening of bids.

Bid forms may be inspected by the Bidders free of charge at the Capital Works & Planning Unit of this University during office hours, if necessary.

**P.O Box 57, Thirunelvely, Jaffna.**
**11.08.2011**

**Registrar**
**University of Jaffna.**

---

**LAUGFS eco ශ්‍රී**
emission testing

With the expansion of the Vehicle Emission Testing Service to the Northern Province we need qualified & talented individuals to fulfill the below mentioned vacancies for upcoming Centres in **Jaffna, Killinochchi, Mullaitivu, Vavunia & Mannar** Districts.

### 01. Junior Centre Managers/ Supervisors (Male)

- Experience in people handling for minimum of 03 years.
- Computer knowledge (Office package & E-mail).
- Knowledge in motor vehicle is a must.
- Age between 30 – 45 years.

### 02. Emission Testing Technicians (Male)

- Motor Mechanic Course from a reputed Institute.
- Basic Computer Knowledge.
- Valid Heavy Vehicle Driving License would be an added advantage.
- Age below 28 years.

### 03. Visual Inspectors (Male)

- Minimum of six months computer course from a reputed Institution.
- G.C.E. (O/L).
- Knowledge in motor vehicles is a must.
- Valid Heavy Driving License would be an added advantage.
- Age below 28 years.

### 04. Data Entry Operators (Male/ Female)

- Minimum of six months computer course from a reputed Institution.
- G.C.E. (O/L).
- Previous work experience in similar capacity would be an added advantage.
- Age below 28 years.

Ability to communicate in Sinhala or English would be an added advantage for the above positions other than Tamil.

Send us your applications within 14 days of this advertisement citing two non-related referees & clearly stating the post applied on the top left corner of envelop to:-

**Laugfs Eco Sri (Pvt) Ltd.**
**No.17, Sunethradevi Mw, Kohuwala, Nugegoda.**
**Tel: 0117770795, Fax: 0112827510**
**E-mail: sampathk@laugfs.lk**

---

# ஆம் 31 நாள் நினைவஞ்சலி



# டாக்டர் P.V. தம்பித்துரை

எம்மோடு
21.04.1946

எம் நினைவோடு
16.07.2011

அன்புக்கு அகல் விளக்காய்
பாசத்தின் பதியாய்
வையகத்தில் வைத்தியனாய்
குடும்பத்தின் காவலனாய்
எந்நாளும் எம்மை
அன்புடன் அரவணைத்தீர்கள்...
முப்பத்தொரு நாள்கள் என்ன
ஏழேழு பிறவியும்
எம்மை விட்டகலா
உங்கள் பசுமையான நினைவு

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்

16.07.2011 சனிக்கிழமை அன்று எம்மை விட்டுப்பிரிந்த எமது குடும்ப விளக்கு **Dr.P.V.** தம்பித்துரை அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (15.08.2011) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடரந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்)

பங்களா வீதி,
மீசாலை மேற்கு.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது குறை களைவோம்

இலக்கியக் காட்சி – ௧௧

**நாம்** செய்யும் தவறுகளை ஏற்றுக்கொண்டு திருத்தும் பண்பு எம்மிடம் ஏனோ குறைவாகவே இருக்கிறது. நடைபெறுகின்ற தவறுகளுக்கெல்லாம் அடுத்தவரைக் குறைசொல்லியே பழகிவிட்டது எமது மனம். எமது தவறுகளை உணர்ந்து கொண்டு அவற்றைத் திருத்தாமலேயே மற்றவன் செய்கின்ற குற்றத்தை எமது தவறுகளுக்கு ஆதாரமாக்கி நியாயம் கற்பிக்கவும் செய்கின்றோம். அடுத்தவன் கண்ணில் உள்ள தூசியைப் பெரிதுபடுத்தி நம் கண்ணில் இருக்கும் உத்தரத்தை மறைக்கப் பார்க்கின்றோம் என்கிறது வேதாகமம்.

*''ஏதிலார் குற்றம் போல் தம் குற்றம் காண்கிற் பின்*
*தீதுண்டோ மன்னும் உயிர்க்கு''* என்கிறது பொய்யா மொழிப்புலவன் புகன்ற திருக்குறள். மற்றவர்களில் குற்றம் கண்டு அவற்றை விமர்சித்து ஊர்முழுக்கப் பரப்பித் திரிவது போன்ற எண்ணம் தோன்றும் போது உன்னிடத்தில் இருக்கின்ற குற்றத்தை உணர்ந்து அது பற்றி ஊருரைக்கக் கூறின் ஏற்படக்கூடிய உணர்வு பற்றிச் சிந்தித்துப் பார் என்கிறது திருகுறள்.

குறை கூறுதலாகிய கீழ்நிலைப் பண்பின் பால் வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள கதை இது. இயேசு பெருமான் முன்னே விபச்சாரியான பெண்ணை நிறுத்தி அவளின் குற்றங்களைப் பட்டியலிட்டபோது இயேசு பெருமான் உங்களில் குற்றமில்லாதவன் முதலில் அவள் மீது கல்லை எறியட்டும் என்றார். ஆனால் அவ்விடத்தில் நின்ற எவருக்குமே அவள் மீது கல் எறியும் துணிவு பிறக்கவில்லை. இதன் மூலம் குற்றமிழைக்காதவன் எவருமில்லை புலனாகிறது. எனவே மற்றவர் மீதில் குற்றம் சொல்வதைத் தவிர்த்து விடுங்கள் என்ற தத்துவத்தையே இயேசு பிரான் விளக்கியுள்ளார்.

அடுத்தவனைக் குறை கூறிப் பயனென்ன என்கிறது இராமாயணம். தசரத மகாராஜா தனது விருப்புக்குரிய மூத்த மகன் இராமனிடம் அடுத்து இந்த நாட்டுக்கு அரசனாக நான் உனக்கே பட்டாபிஷேகம் செய்ய விரும்புகிறேன் என்கிறான். ஆனால் கைகேயியின் விருப்பமே வேறானதால் இராமன் காட்டுக்கு ஏக வேண்டியதாகின்றபோது இலட்சுமணன் ஆத்திர மடைகின்றான். கைகேயியின் மீதும் பரதன் மீதும் அவன் குற்றம் கண்டு ஏசுகின்றான். அதற்கு இராமன் கூறுகின்ற வார்த்தைகளைக் கம்பர் இங்கு அழகாகத் தருகிறார்.

*''நதியின் பிழையன்று நறும்புனல் இன்மை அற்றே*
*பதியின் பிழையன்று பயந்து நமைப் புரந்தாள்*
*மதியின் பிழையன்று மகன் பிழையற்று மைந்த*
*விதியின் பிழை நீ இதற்கு என் கொள் வெகுண்டது''*
என்றான்.

நதியிலே நீர் வற்றிப் போதல் நதியினது தவறல்ல. அதுபோல் தசரதராகிய எமது தந்தையோ, கைகேயியாகிய எமது தாயோ அல்லது எமது சகோதரனாகிய பரதனோ இந்தச் செயல் விளையக் காரணர் அல்லர். எல்லாம் அந்த விதியின் பிழை என்பதைக் கம்பரின் கவிகள் விளக்குகின்றன.

எல்லாமே விதியின் செயல் என்ற பொது மறைக்குள் புகுந்து கொண்டால் எந்தப் பிரச்சினையும் இல்லை என்பதாகக் கம்பர் கூறுவதிலும் ஒரு மன அமைதி கிடைக்கத்தான் செய்கிறது. மற்றவர்களைக் குறை சொல்லத் தோன்றும் பொது மௌனமாக இருங்கள் என்கிறது நாலடியார்.

*''பிறன் மறையின் கண்செவிடாய்த் திறனறிந்து*
*ஏதிலார் இல்கண் குருடனாய்த் தீய*
*புறங்கூற்றின் மூங்கையாய் நிற்பானேல் யாதும்*
*அறங் கூற வேண்டா அவற்கு''*

அடுத்தவனின் இரகசியம் எமது காதுக்கு எட்டும் போது அதுபற்றி கருத்திற் கொள்ளாது செவிடாய், குருடனாய் இரு என்கிறது நாலடியார். இவ்வாறே பாரதியார் ''தூற்றுதல் ஒழி'';''புறஞ்சொல்லலாகாது பாப்பா'' என்கிறார். இவ்வாறு நாம் மற்றவர் குற்றங்களையெல்லாம் கண்டு கருத்திற் கொண்டாலும் அவர்கள் இழைத்த குற்றம் போல் நாமும் குற்றம் இழைத்தோமா இழைக்கின்றோமா? இழைப்போமா? என்று முக்காலத்தும் சிந்தித்துக் குறை குற்றம் தவிர்ப்போம். ★

**தர்மினி பார்த்திபன்**

# மயானத்து மலர்கள்

சிறுகதை



**அ**ன்றைய நாள் இருளின் போர்வை முல்லைக் கடற்கரை மேல் மூடிக்கொண்டது. எங்கும் சில வண்டுகள் ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தன. மொத்தத்தில் முல்லைப் பிரதேசமே இருளுக்குள் மயங்கி உறக்கத்தில் ஆழ்ந்து கொண்டிருந்தது.

'' சுந்தரி... சுந்தரி, நான் கடலுக்கு போக வேணும் பந்தத்தை எடுத்தா'' என்று தன் மனைவிக்கு கட்டளை இட்டு விட்டுத் தீப்பெட்டியெடுத்து பற்றவைத்து சுருட்டின் மீது காட்ட அது தீயைக் கௌவிக் கொண்டது. சுருட்டின் புகையை வெளிவிட்டவாறே சிந்தனையில் ஆழ்ந்தான் சுந்தரலிங்கம். ''நேற்றும் பாதுகாப்பு நடவடிக்கையால் மீன் பிடிக்க இயலாமல் போய்விட்டது; இண்டைக்காவது விடியக்காலையில் போனாத்தான் சரி . நாலு சீவன்களிட வயித்த நிரப்பவேணுமே'' என்று பெருமூச்சு விட்டபடி எழுந்து அடுக்களைப்பக்கம் சென்றார் .

அங்கே மனைவி அடுப்போடு போராடிக் கொண்டிருந்தாள் ''பந்தத்த கெதியா எடுமன்'' என்றவாறு தலைப்பாகையைச் சுற்றிக்கொண்டார். ''பாத்துப்போங்கோ இன்னமும் அமைதியும் சமாதானமும் வாறதாத் தெரியேல்ல. எப்பதான் இந்த அவலம் தீருமோ; நாம இஞ்ச நெருப்பிலே விழுந்த விட்டில்பூச்சிகளாகத் தவிச்சிட்டு இருக்கோம்.

எங்கட அரசியல்வாதிகள் ஏதோ பேசிக்கிட்டுத்தான் இருக்கினம். மிச்சம் ஒண்டையும் காணயில்ல. வெளிநாடு போறதெண்டாலும் அங்கையும் எங்கட மனிசர் நாயாய் கேவலப்படுகினமாம். என்னதான் விடிவு வருமோ. ஆண்டவா நீ தான் மனிசர் எல்லாத்தையும் காப்பாத் தோணும்'' என்றவாறு மனைவி கொடுத்த பந்தத்தை எடுத்துக்கொண்டு கடலை நோக்கிச் சென்றார் சுந்தரலிங்கம்.

ஆம். சுந்தரலிங்கம் ஒரு மீன் பிடிக்கும் தொழிலாளி. தினம் தினம் கடலன்னையின் அணைக்கத்துடிக்கும் அலைக்கரங்களோடு போராடும் மீனவன். கிடைக்கும் சொற்ப வருமானத்தால் மனைவி, இரு பிள்ளைகளின் வயிற்றை நிரப்பப் பாடுபடுவான்.

சுந்தரலிங்கம் ஒரு நாளேனும் கடற்பரப்பில் தடம்பதிக்காது விட்டால் அவன் குடும்பம் சோற்றில் கை வைக்கமுடியாது. யாழ்ப்பாணத்திலுள்ள பொருள்களின் விலைவாசி அவ்வாறிருந்தது. இந்த நிலையில் தொழில் செய்யா விட்டால் நாள் முழுவதும் அவர்கள் பட்டினிகிடந்து பரிதவிக்க வேண்டி யதுதான்.

இதனால்தான் சுந்தரலிங்கம் என்ன நிலைவந்தாலும் கூடக் கடல் செல்வதை நிறுத்தமாட்டான். இன்றும் அவ்வாறுதான் மீன் பிடித்துச் செல்கின்றான். முற்றத்தில் காலடி எடுத்து வைத்ததுமே குளிர்காற்று முகத்தில் மோதிச் சென்றது. செண்பகப் பூக்களின் வாசம் நாசிக்குள்புகுந்து புத்துணர்வை ஊட்டியது.

தொலைவில் எங்கோ ஒரு மூலையில் மாடு ஒன்று 'உம்மே-ஏ' என்று கத்தும் சத்தம் இடைவிடாது கேட்டுக் கொண்டிருந்தது. ''குறுக்கு வழியால் போனா அவசராமாய் போய்ச் சேர்ந்திடலாம்'' என்று எண்ணியவனாய் ஒற்றையடிப் பாதை வழியே சென்றான். அந்த ஒற்றையடிப் பாதையிலே எந்த ஒரு மனித நடமாட்டமும் காணப்படவில்லை. பந்தத்தை உயர்த்திப் பிடித்தவாறே சென்று கொண்டிருந்த சுந்தரலிங்கம் காலில் கல்லொன்று தட்டுப்பட இடறி விழப்போனவன் சட்டென்று சுதாகரித்துக் கொண்டான். ''கால் இடறினால் அப சகுனமே மனப்பட்சி சொல்லிற்று. சகுனமாவது அப சகுனமாவது வாறது வரட்டும்'' என்றெண்ணிய வாறு நடையைத் துரிதப்படுத்தினான். கடற்கரையை அடைந்தான்.

படகை நகர்த்தி கடலில் இறங்கினான். இரவு கடந்தது. பொழுது புலர்ந்தது. கடற்கரையிலே வழமையைவிடக் கூட்டம் அதிகம். எல்லார் முகங்களிலும் சோகம் வழிந்து கொண்டிருந்தது. ''ஐயோ... எங்களவிட்டுட்டுப் போயிட்டீங்களா... நான் என்ன செய்வேன்... யாரிட்டசொல்லுவேன். யாரிட்டயுமே சொல்லாம போயிட்டீங்களே.. இந்தக் குழந்தைகளின்ர மொகத்தை யாரும் கொஞ்சம் கண்ணைத் திறந்து பாருங்களேன்...'' தனது கணவன் சுந்தரலிங்கம் இறந்ததற்கான



காரணங்களை யர் யாரோ கூறித் துடித்தார்கள். சுந்தரியோ அந்த இழப்பின் கொடுமையைத் தாங்கும் மனமின்றித் துடித்தாள். ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வரப்போவதில்லை.

அவனை அழித்தவர்களுக்கும் மரணம் நிச்சயம்! அவளின் அமைதி குலைந்தது; காலம் விரைந்தது. சுந்தரலிங்கம் மறைந்து ஒரு வருடம்தானாய்க் கழிந்து போய் விட்டது. இந்த ஒரு வருடத்தினுள்ளும் எத்தனை எத்தனை மாற்றங்கள்... மூத்தவள் சுவலட்சுமி பருவ மங்கையாய் பரிணாமம் பெற்றி ருந்தாள். இளையவன் கண்ணன் இளங்கன்றாய் வளர்ந்து வந்தான்.

இத்தனைக்கும் சுந்தரி மட்டும் முன்பிருந்த ''சுந்தரங்கள்'' யாவையும் இழந்து முதுமைக்கோலம் பூண்டிருந்தாள். என்னதான் சிறிய வயதாயிருந்தாலும் கடுமையான ஓய் வொழிச்சலற்ற உழைப்பும் எதிர் காலத்தை நினைத்து வருந்துவதால் ஏற்பட்ட களைப்பும் எல்லாவற்றுக்கும் மேலாகத் தன் துணைவனை இழந்த பரிதவிப்பும் அவளை முதுமைக் கோலத்துக்கு ஆளாக்கியது. இவ்வளவுக்கும் யுத்தம் தன்பாட்டில் உக்கிர மடைந்து கொண்டிருந்தது.

**நா.கிருஸ்ணாளினி,**
**ஊர்காவற்றுறை.**

எந்தத் திக்கிலும் ஷெல் வீச்சுக்கள், கொலைகள், கற்பழிப்புகள் பற்றிய பேச்சுக்களாகவே இருந்தன. எங்கும் ஷெல்கள் பறந்து கொண்டிருந்தன.


இடையிடையே மரண ஓலங்கள் வான் முட்ட எழுந்தன. குழியினுள் குந்தியிருந்தவாறே தம் வீட்டுப் படலையைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

இருவரும் இடை யிடையே தம் தலையையும் தாழ்த்திக் கொண்டனர். இல்லாவிட்டால் சீறி வரும் ''ஷெல்'' தலையைத் தகர்த்துவிடும்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய சூழலில் மக்களின் வாழ்க்கை சீரழிந்து போவதற்குக் காரணம் யாது?



நிதர்சனா
கொக்குவில்

வன்னி நிலப் பரப்பின் பண்பாட்டு கலாசார சீரழிவு பற்றி, பல தரப்பாலும் பேசப் படும் அளவுக்கு வன்னி மக்களின் வாழ்க்கை சீரழிந்து வருகின்றது என்று கூறினால் அது மிகையாகாது. குறிப் பாகப் பெண்களின் கடந்தகால வாழ்வு முறைமை, யுத்தத்தின் பின்னரான இன்றைய சூழலில் அதிர்வுகளை ஏற்படுத்தி வருகின் றது. வீட்டுக்கு வீடு எங் கும் கடந்தகால ஒழுக் கம் சார்ந்த வாழ்க்கை முறைமை தகர்ந்து போகின்றது. இதுவும் கூடப் பெண்ணின் சுய தெரிவல்ல, சூழல் சார்ந்த பொது நிர்ப்பந்தம் என்றே கூறப்படுகின்றது.

இன்றைய சூழலில் வன்னிப் பெண் பற்றிய கண்ணோட்டம், ஆணாதிக்க சமூக அமைப்பில் அலங் கோலமாக மாறிவருகின்றது. பொதுவாகவே பண்பாட்டுக் கலாசாரச் சிதைவின் மொத்த வெளிப்பாட்டின் ஒரு அம்சமாகத்தான், வன்னியில் பெண்கள் மீதான அத்துமீறல்கள் அரங்கேறுகின்றன.

சுதந்திரமற்ற பொதுச்சூழலும், நபர்களுக்கு இடையிலான கண்காணிப்பும் ஒரு இறுக்கமற்ற சூழலை உருவாக்கி இயல்பான சூழலை மறுக்கின்றது. இதன் விளைவு சமூகத்தின் பொதுச் சிதைவாக மாறுவதோடு ஆண் பெண்களுக்கிடையிலான பரஸ்பரம் சந்தேகங்கள், குடும்பச் சிதைவுகள், நம்பிக்கையீனங்கள் என்பவற்றுக்கு வழி சமைக்கின்றது.

யுத்தத்தின் பின் ஆண் துணையை இழந்த பெண்களின் எண்ணிக்கை அதிகரித்ததனாலும், காணாமல் போனவர்களின் மனைவிமார், சிறையில் கணவனை விட்டுத்தவிக்கும் பெண்கள், இதைச் சுற்றிப் பெண்கள் சந்திக்கின்ற இயல்பான இயற்கையான நெருக்கடிகள், அத்துமீறும் போது மற்றொரு குடும்பத்தையும் சிதைத்து விடுகின்றது.

பெண்ணின் சுமைகள் பல மடங்காக்கப்பட்டுள்ளதால் பாலியல் ரீதியாக வரைமுறையற்ற சமூகத்தின் தெரிவுக்குரிய வகையில், பெண்கள் தனிமைப்படுத்தப்பட்டு இருக்கின்றனர். அதனால் பெண்கள் உழைக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றாள்.

இதன்போது பெண்கள் சந்திக்கும் இயற்கையான நெருக்கடிகளால் அவர்களால் சுயமாக வாழமுடியாதுள்ளது.இதற்காகப் பெண் காணும் தீர்வுகள், பெண் சந்திக்கவுள்ள மற்றொரு பொது நெருக் கடியின் ஆரம்பம் தான். நாளை இந்தச் சமூகத்தில் வாழும் பெண்கள் பற்றிய ஒழுக்கம், தனிமைப்படுத்தப்பட்ட சமூகமாக மாற்றிவிடுகின்றது.

# புதுமைப் பெண்கள்



நம்மில்
பல பெண்கள்
இன்று...
குந்திகளாகி விட்டார்கள்!

குந்தியாவது பத்திரமாய்
பேழையில் விட்டாள்
இங்கே.....
உரப்பையில்
குழந்தை....!

இருந்து பார்
நாளை...
தெருவோரக் குழந்தைகள்
சங்கம் ஒன்று
உருவாகும்....!

நல்லவேளை.....
பாரதி இன்று இல்லை!
புதுமைப் பெண்களின்
புதுமைகள் காண.....!

சு.அகிலா
கஸ்தூரியார் வீதி.

# பெண்ணுக்குப் பெருமை சேர்ப்பது ஒப்பனையல்ல முக மலர்ச்சியே



-கோபி
வட்டூர்.

ஒவ்வொரு பெண்ணும் தன்னை அழகாகவும் ஆரோக்கிய மாகவும் வைத் திருப்பது அவ சியம்.

ஆனால் இவற்றை விட மிகமிக அவசியமாகும். யாவரும்போற் றத் தக்க வகை யில் உள்ள வர்களாக வாழ் வது. இன்று சில பெண்கள் சிலர் அணியும் உடைகள் பார்ப்பவர்களுக்கு சலிப்பை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கின்றன. தம்மை சினிமா கதாநாயகியாக நினைத்துக்கொண்டு ஆடை அணிவது கவலைக்குரிய விடயமே. ஒவ்வொரு பெண்ணும் தனது உடல் கட்டமைப்புக்கு ஏற்ப ஆடை அணிவதை விடுத்து மற்றவர்களைப் போலவே தானும் உடை அணிந்தால் அழகாக இருக்கும் என நினைத்து அன்னநடை நடக்கப்போய் தன்நடை கெட்ட கதையாக மாறிவிடுகிறார்கள்.

பார்ப்பவர்கள் வியந்து போற்றும் அளவுக்கு ஒரு பெண்ணின் குணநடை அமைய வேண்டுமே தவிர பார்ப்பவர்கள் அசிங்கப்படும் அளவுக்கு அலங்கோலமாக உடையணிந்து மற்றவர்களை வேதனைப்படுத்துவதோடு தாமும் அவமானப்பட்டு வாழ்கின்றார்கள். இதைவிடுத்து ஏனையவர்கள் புகழ்ந்து பேசும் பெண்ணாக வாழப் பழக வேண்டும்.

பெண்களின் அழகு என்பது குறிப்பாக உடை அணிவதில் மட்டுமல்ல முக அழகையும், நடை உடை பாவனையையும் வைத்தே கூறப்படுகின்றது.

எனவே அழகு என்னும் பெயர் சொல்லி முக ஒப்பனை செய்வதை விட மனதிலும் குணத்திலும் நல்ல சிந்தனை களையும் வளர்த்து நல்ல நடத்தை களையும் வளர்த்து முகத்தின் மலர்ச் சியை மெருகூட்டுவதே சிறந்த தாகும்.

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
"திலகம்",
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

# பெண்களின் கவனத்துக்கு...



கருணாகரன்

- ★ பெண்களின் கண்ணீர் உலகிலேயே மிக ஆற்றலுள்ள நீர் சக்தி.
- ★ காற்றை விடக் கடும் வேகம் கொண்டது பெண்களின் எண்ணம்.
- ★ பெண் எந்தக் காற்றிலும் அசைந்தாடிக் கொண்டிருக்கும் நாணலைப் போன்றவள்.
- ★ பெண்களுக்குரிய சுதந்திரத்தை வழங்காதவரை ஒரு நாடு சுபீட்சம் அடையாது.
- ★ பெண்ணின் இதயம் அவளுடைய உதடுகளில் இருக்கிறது. ஆனால், அவளுடைய ஆன்மாவோ அவளுடைய கண் களில் இருக்கிறது.
- ★ பெண்கள் பெரிதும் வெறுப்பவை பொய்மை, கோழைத்தனம், கீழ்க்குணம் ஆகிய முக்குணங்களை.
- ★ பெண்களிடம் உள்ள நல்ல பண்பு அவர்களுக்குப் பாராட்டை பெற்றுக் கொடுக்கிறது. ஆனால், அவர்களின் நல்ல நடத்தையே அவர்களைத் தெய்வங்களாக்குகிறது.
- ★ பெண்ணின் ஒழுக்கத்தில் நம்பிக்கை இருத்தலே குடும்ப இன்பத்தின் அடிப்படை.
- ★ எந்த இடத்தில் பெண்கள் மரியாதையாக நடத்தப்படுகின் றனரோ அந்த இடத்தில் தேவதைகள் குடியிருக்கின்றனர்.
- ★ தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்வதே பெண்களுக்கு அழகு.
- ★ பெண்ணாய்ப் பிறப்பதற்கே மாதவம் செய்திருக்க வேண்டும்.
- ★ ஒரு பெண்ணின் உள்ளமாகிய கடலில் இரக்கம், தியாகம், கற்பு, காதல் ஆகிய நன்முத்துக்களைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






எஸ். அகல்யா



க.ரிஷான், சென்.ஜோன்ஸ் கல்லூரி.




உ.சர்மலோசன், தரம்- 2
சென்.ஜோன்ஸ் கல்லூரி.



க.கபில்ராஜ், தரம்- 7, சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.




வி.கௌதமி,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.



ந.கெனுசன், தரம்- 4
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.

# நான் பார்த்த டென்மார்க் பாடசாலை

நான் டென்மார்க் சென்றேன். அங்கே நான் பாடசாலையில் சேர்ந்தேன். அங்கு நான் சேர்ந்ததனால் மிகவும் சந்தோஷப்பட்டேன். அங்கு அனைவரும் விளையாட விளையாட்டுப் பொருள்கள் இருக்கும். அங்கு அனைவரும் விளையாடி சந்தோஷமாக இருப்பார்கள். மிகவும் அற்புதமான பாடசாலை. அங்கு ஒரு பாடங்களும் நடக்காது. நல்ல பாடசாலை.

தே.ஆனந்ராம், தரம்- 1 'சி',
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை.

# இலங்கையில் சுதேச இனத்தவர்கள் வாழ்ந்த முக்கிய இடங்கள்

| நாகர் | இயக்கர் |
|---|---|
| நயினாதீவு | இயக்கச்சி |
| காங்கேசன்துறை | பொம்பரிப்பு |
| வல்லிபுரம் | தாமிரபரணி |
| நாகர்கோயில் | லக்கல |
| நாகதீபம் | விந்தனை |
| மாந்தை | இயக்கர்கல |
| முன்னேஸ்வரம் | கதிர்காமம் |
| களனி | சிறிய இராவணன் தீவு |
| நாகர்முனை | பெரிய இராவணர் தீவு |

இரவீந்திரன் சிந்துஜா
தரம் 11
யா/உடுவில் மகளிர் கல்லூரி.

# வானம் வசப்படும்



மண்ணில் வாழ்ந்து
சலிப்பு உண்டானதால்
இது வரை
வாழ்ந்த அர்த்தம்
புரியாமல் இருக்கிறது
அநியாயம் பெருகி
நிலையற்றுப்போன
இந்த உலகில்
வாழ்ந்த
கதை போதும்
என்றாகியது.
விண்ணில் பறக்கும்
பறவைபோல்
சுதந்திரமாய் சுற்றித்திரிய
ஆசை எனக்கு
சிறகுகள் முளைத்திருந்தால்
அந்த வானமும்
வசப்படும்- என்
வாழ்க்கையும்
சுகம்பெறும்- ஆனால்
அது வரை இம்மண்ணில்
என் நிலை தான் என்ன?

பொ.கோகுலன்
மீசாலை

# ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு



ஒரு காட்டில் காளைமாடு, சேவல், பன்றி, பூனை, செம்மறியாடு ஆகிய ஐந்தும் ஒன்றாக வீடு கட்டி ஒன்றுக் கொன்று ஒற்றுமையாக வாழ்ந்து வந்தன. அப்போது அந்தக் காட்டில் இருந்த நரி சேவலைப் பிடித்துத் தின்ன நீண்ட நாள்களாகத் திட்டமிட்டு வந்தது. அதே காட்டில் ஓர் ஓநாயும் இருந்தது. ஓநாயுக்கு செம்மறி ஆட்டைப் பிடித்துத் தின்னும் ஆசை இருந்தது.

ஒரு நாள் ஓநாயும் நரியும் சந்தித்தன. இருவரும் தமது விருப்பங்களை ஒருவருக்கு ஒருவர் பகிர்ந்து கொண்டன. சமயம் பார்த்து ஓநாயும் நரியும் கரடியொன்றைக் கூட அழைத்துக் கொண்டு காளைமாடு, சேவல், பன்றி, பூனை, செம்மறியாடு போன்றவை வசிக்கும் வீட்டுக்குப் புறப்பட்டன. வீட்டுக்கு அருகில் வந்ததும் நரி, ஓநாயையும் கரடியையும் பார்த்து நான் முதலில் உள்ளே போய் சேவலைப் பிடித்தவுடன் குரல் கொடுப்பேன் நீங்கள் ஒவ்வெருவராக உள்ளே வாருங்கள் என்றது. ஓநாயும் கரடியும் அதற்கு சம்மதித்து வெளியே காத்திருந்தன. நரி உள்ளே சென்றது.

இவற்றை எல்லாம் வீட்டின் மேல்புறத்தில் அமர்ந்திருந்த அவதானித்த சேவல் நண்பர்களிடம் சொல்லி எச்சரித்துவிட்டது. கதவைத் திறந்து கொண்டு நரி உள்ளே போனபோது காளைமாடு வந்து முட்டித்தள்ளியது. நரி நிலை குலைந்து கீழே விழப் பூனையும் சேவலும் நரியைத் தாக்கத் தொடங்கின. வெளியே காத்திருந்த ஓநாய், கரடியைப் பார்த்து உள்ளே போன நரி சேவலைத்தின்று மயங்கிக்கிடக்கிறது போலும் நான் உள்ளே போய் பார்த்துவிட்டு வருகிறேன் என்று கூறிக்கொண்டு உள்ளே போனது.

ஓநாய் உள்ளே நுழைந்ததும் காளை மாடு அதையும் மோதித்தள்ளியது. ஓநாய் கீழே விழுந்தவுடன் பன்றியும் செம்மறியாடும் ஓநாயின் மேல் ஏறித்தாக்கின. வெளியே காத்திருந்த கரடிக்குப் பொறுமை இழந்துவிட்டது. இருவரும் உள்ளே என்ன செய்கிறார்கள் என்று நினைத்தபடி கடகடவென உள்ளே சென்றதுதான் தாமதம் காளைமாடு சற்றுப் பின்னே போய் ஒரே பாச்சலாக வந்து மோதியது. கரடி ஒவெனக் கத்தியபடி தூரத்தில் போய் விழுந்தது.

வீட்டுக்குள் அகப்பட்ட ஓநாயும் நரியும் எப்படியோ வெளியே வந்து தப்பினோம் பிழைத்தோம் என்று ஒரே ஓட்டமாக ஓடித்தப்பின. காளைமாடு, சேவல், பன்றி, பூனை, ,செம்மறியாடு எல்லாம் ஒன்றாக ஒற்றுமையாக இருந்தபடியால் தங்களைக் கொல்லவந்த எதிரிகளை அடித்துத் துரத்தின.

வனிதா

# விடை தெரியுமா? 120

## உங்களுக்கும் பரிசில்கள்

1. வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக பதவி ஏற்றுள்ளவர் யார்?
2. இந்திய வெளிவிவகார செயலாளர் பெயர் என்ன?
3. உலகின் மிகப் பெரிய கழிமுகம் எது?
4. முசுட்டை கொடியின் தாவரவியற் பெயர்?
5. ஆயிரம் வாவிகள் உள்ள நாடு எது?

### விடைகள் 118

1.ஆபிரிக்கா
2.ரோம்
3.ஜப்பான்
4.பிரசிலியா
5.1948 ஆம் ஆண்டு

மிருகங்களின் சரணாலயம் என்ற கேள்விக்குரிய விடை தவறுதலாக தெஹிவளை என்று பிரசுரமாகியதுடன் பரிசுக் குரியவர்களும் தவறுதலாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதற்கான சரியான விடை யால ஆகும்.

### வெற்றி பெற்றவர் விவரம் -119

★ சி.நிறோஜன், தரம் - 6 'பி', யாழ். நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.
★ ரி.புகழேந்தி, யாழ். நீர்வேலி அகத்தியர் இந்துக் கல்லூரி.
★ சூ. பிரியதக்ஷி, தரம்- 7, யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடாலை.
★ சூ. புவித்தா, தரம்- 9 'டி' யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

**விடை தெரியுமா?**
தெரிந்தால் 12.08.2011 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

# சின்ன ஜோக் கடிங்க...



கந்தையா - டே மச்சான் இங்க எங்கேயும் தங்க தங்க வீடு இருக்கா?
சுப்பையா - தங்க வீடு இல்லையடா. கருங்கல் வீடுதான் இருக்கு
கந்தையா - டே மடையா நான் அதைக் கேக்கேல்ல தங்குவதற்கு வீடு இருக்கா எண்டுதானடா கேட்டனான்.

[illegible]
யா/கொ/இ/கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரும் மெய்யும்



முன்பை விட
இந்த நாளில்
சொல்லும்; பொருளும்
சோர்வாகி மெல்ல
மாற்றம் பெற்றதால்
காகங்கள் கூட
உயிருடனிருந்த
மெய்யை யெங்கோ
தொலை தூரத்தில்
தொலைத்துவிட்டதால்
தட்டுத் தடுமாறி
கட்டுப்பாட்டுள்
பட்ட துயரை
மட்டுப்படுத்தி
கா வென்று கரையாமல்
ஆ வென்று கத்தி
ஆறுதல் தேடுகின்றன

க.நாகராசா,
சாவகச்சேரி.

# மறக்கிறேன்

மறந்துவிடத்தான்
நினைக்கிறேன்
உன்னையல்ல....
நீ புறந்தள்ளிச்



சென்ற
என்
பொழுதுகளை.....

பா.பொன்நிலவன்,
மீசாலை.

# சில்லறை நாணயம்




கருவறைக்கும்
கல்லறைக்கும்
நீண்ட இடைவெளி
சில்லறைக்கும்
சம்பந்தமில்லை
சீதனம் கோடிக்கணக்கில்
சில்லறை கோடிப்புறத்தில்
ஐயாயிரம் அச்சடித்தாலும்
ஐஞ்சு ரூபாய்க்கும்
கெஞ்சுகின்ற பஞ்சம்
பெருத்த முதலாளி
நான்கு ரூபாய்க்கு
தீப்பெட்டியும்
இரண்டு ரூபாய்க்கு
இனிப்பும் என
சில்லறைக்கும்
வியாபாரம் செய்கிறார்
பஸ் நடத்துநர்
சில்லறைக்குப் பதிலாக
சில அறையும்
கன்னத்தில் தரலாம்
பிச்சைக்காரனே
சில்லறைக்குப்
பணக்காரன்.
பணக்காரன் பிச்சை
வாங்குகிறான்
சில்லறைகளை
பிச்சைக்காரருக்கென
கோயில் உண்டியல்
சில்லறைகளைப்
பெற்றுத் தருவோர்க்கு
'கமிசன்' நோட்டுக்களாக
சத நாணயங்கள்
நாளைய கண்காட்சியில்
காட்சிக்காக...
எதிர்கால சந்ததியினருக்கு
நாணயங்களே
அதிசயமாகும்
வங்கிகளில்
சில்லறைப் பேச்சுக்கே
இடமில்லை
சில்லறைக்கும்
நாணயம் இல்லாத
இவ்வேளையில்
மக்கள் மட்டும்
எவ்வாறு நாணயம்
உடையவர்களாக...?


எஸ். சுகிர்தா,
சங்கானை.

# உன்னைச் சந்திப்பேன்



முல்லைப் பூவே எந்தன்
முத்தமிழ் உணர்வே உயிருறவே
தொல்லை பலவே வந்தும்
தொலையா மல்நான் இருப்பதுவோ
மெல்லவே ஒரு நாள் வருமுன்
மிதியடி என்னைத் தொட்டிடவே
புல்லாய் இருந்து தாங்கி
புதிதாய் உன்னைச் சந்திப்பேன்

- ஈழநிலா



# மனித உரிமை

வாழ்வதற்கே உரிமைகள்
மறுக்கப்பட்ட தேசமதில்
எமக்கு உரிமை உண்டாம்
சொந்த வாழ்விடங்களில்
வாழவே உரிமை இல்லாத எமக்கும்
மனித உரிமை உண்டாம்
வகை தொகை இன்றி
மனித உயிர்கள் பறிக்கப்பட்ட
தேசமதில் மனித உரிமை உண்டாம்
வட்டு வாகனின் வட்டுவத்த
தம் உறவுகளுக்காக
மனித நேயம் மிக்கவர்களிடம்
உரிமை கேட்டு உரிமை எமக்கும்
உண்டாம்
முட்கம்பி வேலிக்குள் அடங்கி வாழும்
உறவுகள் தமது உரிமைக்காக
குரல் கொடுக்க முடியுமாம்
மறுவாழ்வுக்காக மறிக்கப்பட்டு
புனர்வாழ்வு பெறும் எம் உறவுகளுக்கும்
உரிமை உண்டாம்
வாழ்வதற்கும் இணைவதற்கும்
பிரிவதற்கும் பெற்றுக் கொள்வதற்கும்
போவதற்கும் வருவதற்கும் என
எத்தனையோ தேவைகளுக்கு
மனிதனுக்கு உரிமை உண்டாம்
ஆனால் தமிழனுக்கு அது இல்லை
மனி நேயம் மிக்கவர்களே
ஒரு தடவை மனித உரிமையைக்
காட்டுங்கள் பார்த்துவிட்டு தருகின்றோம்

செ.நாதன்,
மூகமாலை.

# அழகும் அடிமையும்



மலர் அழகு அதன் அனுமதியின்றி
வண்டு வந்து தேன் பருகி செல்கிறது
நிலவு அழகு தேய்ந்து போவது
தவிர்க்க முடியாத தொன்றாகிப் போனது
தீவுகள் அழகு யாராலும்
தீண்டப் படாமல் தனிமையாகின்றன
குயிலின் குரல் அழகு - தன்
குஞ்சுக்குக் கூடு கட்ட
காக்கையிடம் செல்கிறது
மயில் தோகை அழகு
மழை மேகம் கொண்டால்தான்
மனமகிழ முடிகிறது
மான் அழகு
மற்றைய மிருகத்திடம்
மறைந்து பதுங்கி வாழ்கிறது
தாமரை அழகு அதன் மலர்வு
சூரியனின் சுடருக்கு அடிமை
பெண்மை அழகு அது தாய்மையடையும்
பொழுதிலேயே தெரிகிறது.

மேகலா,
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சண்டித்தனத்துக்கு விழுந்த சாட்டையடி

**ஞாயிறு காரம்**

**சந்திரசேகர ஆசாத்**

ஒருவர் மீது ஒரு குற்றம் சுமத்தப்பட்டால் அந்தக் குற்றச்சாட்டின் உண்மை, பொய் அந்தக் குற்றச்சாட்டு எழுந்தமைக்கான காரணம், குற்றம் சுமத்தியவரின் நோக்கம் என்பன ஆழமாகப் பரிசீலிக்கப்பட்டு அதற்குத் தகுந்த பதில் கொடுக்க வேண்டியது ஒரு பொறுப்புள்ள நியாயமான மனிதனின் கடமை. பரந்துபட்ட பொதுமக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் அரசியல்வாதிகளுக்கும் அதிகாரத்தில் உள்ளவர்களுக்கும் இந்த விடயத்தில் இரட்டைப் பொறுப்பு உண்டு.

இலங்கை அரசியலில் இந்தப் பொறுப்பு முற்றாகவே அலட்சியப்படுத்தப்படுவதை நாம் அவதானிக்க முடியும். ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டால் அதற்கான விளக்கங்கள் எதுவுமின்றி அவை மறுதலிக்கப்படுவதும் குற்றம் சுமத்துபவரை அவதூறு செய்பதும் இலங்கையின் இறைமையிலும் சுதந்திரத்திலும் கை வைக்கப்படுவதாகக் கூக்குரலிடுவதும் இலங்கை அரசதரப்பில் தவறாமல் பின்பற்றப்படும் ஒரு மரபாகவே விளங்கி வருகிறது.

### இலங்கை அரசின் நாடகம்

குறிப்பாக இலங்கை இராணுவத்தின் மீது குற்றச்சாட்டுகள் எழும்போது இராணுவப் பேச்சாளரோ அல்லது பாதுகாப்புச் செயலரோ எமது படையினர் ஒழுக்கம் மிகுந்தவர்கள்; அவர்கள் அப்படிச் செய்வதில்லை என ஏக வசனத்தில் பதிலளித்துவிட்டு உலகம் அதை ஏற்க வேண்டும் என எதிர்பார்ப்பதுண்டு. ஆனால் இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக யாராவது கருத்து வெளியிட்டால் உடனடியாகவே இலங்கையின் இறைமையில் தலையிடுவதாகக் குற்றம்சாட்ட ஆரம்பித்துவிடுவதுமுண்டு.

உதாரணமாக இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக வெளியிடப்பட்ட ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை, சனல்-4 ஆவணப்படம் என்பன தொடர்பாக இலங்கை அரசால் கடும் கண்டனங்கள் வெளியிடப்படுகின்றன. அவை பொய்யானவை எனக் கூறப்பட்டு நிராகரிக்கப் படுகின்றன. ஆனால் அவற்றில் சாட்டப்பட்ட குற்றங்கள் தொடர்பாக விசாரிக்கவோ, ஆதாரபூர்வ மான காரணங்களை முன்வைத்து மறுதலிக்கவோ இலங்கை அரசு பிடிவாதமாக மறுத்து வருகிறது. மாறாக ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கை பக்கச் சார்பானது; ஆதாரமற்றது எனவும் சனல்-4 தொலைக்காட்சி விடுதலைப் புலிகளிடம் பணம் வாங்கிக் கொண்டு பொய்த் தகவல்களைக் கொண்ட தயாரிப்பை வெளியிட்டுள்ளது என்றும் அரசு குற்றம் சாட்டி வருகிறது.

இதில் ஒரு தெருச் சண்டித்தனப் பாணியிலான அரசியல் மேலோங்கியிருப்பதை அவதானிக்க முடியும். இத்தகைய ஒரு அரசி யல் போக்குக்குத் தலைமை தாங்குபவராகப் பாதுகாப்புச் செயலரே கோத்தபாயவே இருக்கிறார்.

அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசுக்குமிடையே இடம்பெற்ற பேச்சுகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் முன்வைக்கப்பட்ட மூன்று ஆலோசனைகளுக்கு எழுத்து மூலமான பதிலை அரசு வழங்க மறுத்ததை அடுத்து முடக்க நிலைக்குத் தள்ளப்பட்டது.

### கோத்தபாயவின் கூற்று

அந்தச் சந்தர்ப்பத்தில் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ இந்தியாவிலிருந்து வெளிவரும் 'ஹெட்லைன்ஸ் ருடேக்கு' வழங்கிய பேட்டியின்போது, விடுதலைப் புலிகள் ஒடுக்கப்பட்ட பின்பு இனப் பிரச்சினை தொடர்பாக அரசமைப்பு திருத்தம் அவசியமில்லை எனவும் உதயன் செய்தி ஆசிரியர் குகநாதன் தாக்கப்பட்டது ஒரு சாதாரண சம்பவம் எனவும் தெரிவித்திருந்தார். அதாவது விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் உரிமைக்காகவே போராடினார்கள் என்பதையும் அவர்கள் அழிக்கப்பட்ட பின்பு தமிழ் மக்களின் [illegible] பற்றிக் கவலைப்படப் போவதில்லை என்றும் ஒரு செய்தியை இந்தப் பேட்டியின் மூலம் மறைமுகமாக வெளிப்படுத்தியுள்ளார்.

அதாவது தமிழ் மக்களை இலங்கைப் பிரஜைகளாகவோ உரிமையுள்ள மனிதர்களாகவோ மதிக்காத சண்டித்தனப் பாணியிலான ஓர் அரசியலின் வெளிப்பாடே இது.

அதுமட்டுமல்ல குகநாதன் மீது மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சி ஒரு சாதாரண விடயம் எனக் குறிப்பிடப்பட்டதை எந்த ஒரு நியாயமான மனிதனாலும் ஏற்றுக் கொள்ளமுடியாது.

மனிதாபிமானமற்ற ஒரு சண்டியனைப் பொறுத்தவரையில் கொலை முயற்சிகள், கொலைகள் என்பன சாதாரண விடயம்தான். ஆனால் பாதிக்கப்பட்ட ஒரு மனிதனைப் பொறுத்தவரையில் அது ஒரு உயிர்ப் பிரச்சினை! எதிர்கால வாழ்வு பற்றிய பிரச்சினை! பொதுமக்களைப் பொறுத்தவரை அது ஜனநாயகம் காலில் போட்டு மிதிக்கப்படும் பிரச்சினை.

ஆனால் இந்தக் கருத்தின் மூலம் சுதந்திரமாகச் செயற்படும் ஊடகவியலாளர்கள் மீது கொலை, கொலை முயற்சி என்பன சாதாரணமாக மேற்கொள்ளப்படும் என்ற மிரட்டல் பாதுகாப்புச் செயலரால் விடுக்கப்படுகிறதோ என்ற அச்சம் பலருக்கு ஏற்பட்டுள்ளது.

இப்படியான கருத்துகள், நடைமுறைகள் என்பன தட்டிக் கேட்க ஆளில்லாத ஒரு சண்டியனின் சவால் போலவே அமைகின்றன.

### தமிழகத்தின் நிலைப்பாடு

அத்தகைய சண்டித்தனப் பாணியிலான கருத்தைப் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தமிழக முதல்வர் ஜெயலலிதா தொடர்பிலும் வெளியிட்டுள்ளார். இது தமிழக அரசியலில் பெரும் எதிர்ப்பலையை எழுப்பியதுடன் ஜெயலலிதா தனது ஆணித்தரமான பதில் மூலம் சாட்டையடி கொடுக்க வேண்டிய ஒரு நிலையை உருவாக்கியது:

அண்மையில் தமிழக சட்டசபையில் இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பாகச் சுயாதீனமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனவும் அப்படி இலங்கை அரசு மேற்கொள்ள மறுத்தால் இந்திய மத்திய அரசு ஐ.நா. சபை மூலம் இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் எனவும் ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

இந்தத் தீர்மானம் தமிழக சட்டசபை, மத்திய அரசிடம் ஒரு கோரிக்கையை முன்வைத்த ஒரு தீர்மானம். அதாவது மத்திய அரசும் மாநில அரசும் தொடர்புபட்ட ஒரு விவகாரம். இதில் இந்த இரு மன்றங்களுக்கும் வெளியேயுள்ள எவருக்கும் தலையிட உரிமையில்லை. உடனே வழமையான தமது சண்டித்தனப் பாணியில் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ இந்த விடயத்தில் தலையை நுழைத்து 'ஹெட்லைன்ஸ் ருடே' , ஊடகத்துக்குக் கருத்து வெளியிட்டுள்ளார். அதில் அவர் அரசியல் நோக்கத்திலேயே ஜெயலலிதா இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார் எனவும் இலங்கைத் தமிழர்கள் மீது உண்மையான அக்கறை இருக்குமானால் பாக்கு நீரிணையில் மீன்பிடிக்கும் இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்திருந்தார்.

ராஜதந்திர மரபுகளை மீறி மத்திய அரசின் கீழ் உள்ள ஒரு மாநில சட்டசபையின் தீர்மானத்தை விமர்சித்த அவரது அநாகரிகச் செயல் இந்திய அரசியல் வட்டாரங்களில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியது. இலங்கையின் இனவாத சக்திகளோ பெரும் சாதனை ஒன்றைச் செய்து விட்டதாகப் பெருமைப்பட்டுக் கொண்டன.

இது தமிழகச் சட்டமன்ற உறுப்பினர்களின் கோபத்தைக் கிளறிவிட்டது. அதன் காரணமாக இதற்கெதிராக அங்கு கவன ஈர்ப்புப் பிரேரணை கொண்டு வரப்பட்டது.

### ஜெயலலிதாவின் சட்டசபை உரை

இந்தப் பிரேரணையின் மீது உரையாற்றிய தமிழக முதல்வர் ஜெயலலிதா தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இழிவுபடுத்தும் வகையில் இலங்கையின் பாதுகாப்புச் செயலர் கருத்து வெளியிட்டமை தொடர்பாக இந்திய மத்திய அரசு இலங்கைத் தூதுவரை அழைத்துக் கண்டனங்களைத் தெரிவிக்க வேண்டும் எனவும் சட்ட சபையின் தீர்மானத்தை மத்திய அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். அது மட்டுமன்றி கச்சதீவுப் பகுதியில் இந்திய மீனவர்களுக்கு உள்ள மீன்பிடி உரிமை தொடர்பாக இலங்கை இந்திய அரசுகளுக்கான உடன்பாடு பற்றியும் தெளிவு படுத்தினார்.

வழமையான சண்டித்தனப் பாணியிலான அரசியல் அநாகரிகத்துக்கு விழுந்த சாட்டையடி எனவே இது கருதப்படுகிறது.

ஜெயலலிதா நிகழ்த்திய சட்டசபை உரை மிக்க தெளிவாகவும் ஆணித்தரமாகவும் இதைத் தெளிவு படுத்தியுள்ளது. எனினும் அவர் ராஜதந்திர வழிமுறைகளிலிருந்து எள்ளளவும் தவறாமல் பாதுகாப்புச் செயலரின் உரைக்கு இந்திய மத்திய அரசு கண்டனம் தெரிவிக்க வேண்டும் எனக் கோரியுள்ளார்.

எப்படியிருந்த போதிலும் பாதுகாப்புச் செயலருக்கு மட்டுமன்றி இலங்கையின் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கும் சகல அரசியல் அநாகரிகவாதிகளுக்கும் விழுந்த வலுவான சாட்டையடி இதுவெனவே தமிழ் மக்கள் கருதுகின்றனர். *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
14 ஓகஸ்ட் 2011 ஞாயிற்றுக்கிழமை

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி.........

## 14.08.2011 முதல் 20.08.2011 வரை

தருபவர் - வித்யா

### மேடம்



வீண் அலைச்சல் ஏற்படலாம். வேண்டாத விவகாரங்களில் தலையிட்டு மன உளைச்சல்களுக்கு ஆள்படலாம். சிலர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தள்ளிப் போகலாம். தண்டச் செலவு நேரும். எதிர்பாராத சந்திப்பு நிகழும். வெளியூர் பயணங்கள் செல்லலாம். சில பிரச்சினைகளை நினைத்துக் குழப்பம் அடைவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி காணப்படும். எந்த வேலையையும் தடை, தாமதம் இல்லாமல் உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள். வீடு, மனை வாங்க கடன் பெறலாம். குடும்பத் தேவைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். எந்த விடயத்துக்காகவும் அலட்டிக் கொள்ளாமல் சாதாரணமாக செயற்படுவீர்கள். உடன் பிறப்புக்கள் உதவிகரமாக இருப்பர். தடைப்பட்ட கட்டடப் பணிகளை முடுக்கி விடுவீர்கள். உத்தியோக ரீதியாக எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். மின் சாதனப் பொருள்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். தாயார் வழியில் உதவிகள் கிடைக்கும். தொழில் ரீதியான பணவரவு உண்டு.

### இடபம்



ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். சிரமங்கள் இருந்தாலும், சில வேலைகளை எப்படியும் முடிப்பீர்கள். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். ஆடை, ஆபரணங்கள் வாங்கலாம். அவசரப் பட்டு முடிவுகள் எடுக்க வேண்டாம். எதிர்பார்ப்புகளில் ஏமாற்றங்களைச் சந்திக் கலாம். பயணங்களில் தடை, தாமதம் ஏற்படலாம். வெறுப்பு, விரக்தி உண்டாகும். எந்த விடயத்திலும் உடனுக்குடன் முடிவுகள் எடுக்க முடியாமல் தவிக்கலாம். கொடுத்த பணம் திரும்பி வருவதும் இழுத்தடிக்கும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உற வினர்கள் வழியில் சிரமங்களே அன்றி, ஆதாயம் இல்லை. பெண்கள், பொழுது போக்கு விடயங்கள், ஆடம்பர ஈடுபாடுகள் போன்றவற்றில் நாட்டம் செல்லும். அதனால், சந்தோஷம் பெறலாம். கொடுக்கல் வாங்கல்களில் கவனம் அவசியம். எந்த விடயத்திலும் தைரியம் தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். எந்த வேலையையும் தடைகள், குறுக்கீடு இன்றிச் செய்து முடிப்பீர்கள். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தை வழியில் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகி பாசம் அதிகரிக்கும். குழப்பம், தடுமாற்றம் நேரும்.

### மிதுனம்



புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நீண்ட நாள்களாக உங்களுடன் பேசாத சிலர் பேசலாம். எதிர்பார்த்த அல்லது எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். மலைபோல் வந்த பிரச்சினை ஒன்று பனி போல விலகி விடும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். பழகிய சிலர் மூலம் பணவரவுகளைப் பெறலாம். வெளியூர் பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். ஊக்கம், உற்சாகத்தை குறைக்கலாம். தொழில் துறையில் தேவையான அளவுக்கு முதலீடு செய்வதில் பிரச்சினை, தொழிலாளர்களால் தொல்லை போன்ற பிரச்சினைகளை எதிர்கொள்ளலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வழியில் உதவி கிடைக்கலாம். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரும். வெளிவட்டார தொடர்புகள் விரிவடையும். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். கணவன் மனைவி இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் செயற்பாடுகள் உங்களுக்குப் பெருமை தருவதாக அமையலாம். வருமானம் வரும் வழிகள் அதிகரித்து சேமிப்பு உயரும். வீண் அலைச்சல், தண்டச் செலவு ஏற்படும். மதிப்பு, கௌரவத்திற்கு பாதிப்பு வரலாம்

### கடகம்



குழப்பங்கள், தடுமாற்றங்கள், முடிவெடுக்க முடியாமல் ஒன்றுக்கு மேற்பட்டவர்களிடம் ஆலோசனை கேட்பது போன்றவற்றை எதிர்கொள் ளலாம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லும் சூழ்நிலை உருவாகலாம். பணவரவுகளுக்கு வாய்ப்பு உண்டு. பெரிய மனிதர்கள் சிலரின் சந்திப்பு நிகழும். தொலைபேசி வழியில் சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். எந்த விடயத்திலும் பின்னடைவு இல்லாமல் முன்னேற்றம் காணலாம். மற்றவர்களின் குறுக்கீடு இல்லாமல், உங்களின் விருப்பம் போல நினைத்ததைச் செய்வீர்கள். எதிர்ப்புகள், போட்டிகள் முறியடிப்பீர்கள். கடந்த கால இழப்புகளை ஈடு செய்யும் வாய்ப்பு உருவாகும். விலை உயர்ந்த பொருள் கள் வாங்கலாம். ஆடம்பர விடயங்களில் நாட்டம் செல்லும். பெண்கள், தாயார், சகோதரிகள் வழியில் உதவிகள் கிடைக்கும். தொழில் ரீதியாக நீண்ட தூரப் பயணங் கள், வெளிநாட்டுப் பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். பிள்ளைகள் வழி யிலும் கணிசமான பொருள் செலவுகளைச் சந்திக்கலாம். அரசி யல்வாதிகள், அதிகா ரிகள், தந்தை தொடர்பான வகையில் தொல்லைகளே. நல்ல செய்தி கேட்கலாம்.

### சிங்கம்



ஒஆதாயமில்லாத அலைச்சல் உண்டாகும். நீண்ட தூரப் பயணங்கள் செல்லலாம். புதியவர்கள் சிலரின் உதவி கிடைக்கும். கடன் மிகுதிகள் வசூலாகும். மறதியால் அவதிகளுக்கு ஆளாகலாம். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலை முடிவடையாமல் அவற்றை நீங்களே செய்ய நேரிடலாம். கடன் பிரச் சினைகள் கட்டுக்குள் வரும். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக் கைகள் நிறைவேறும். சகோதரர்கள், பங்காளிகள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வீடு, மனை வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. புதிய மின் உபகரணங்கள் வாங்கலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள், தந்தை, அரசியல்வாதிகள், மருத்துவம், சகோதரிகள், பெண் பிள்ளைகள், வாகனங்களை சீரமைப் பது போன்ற வழிகளில் செலவுகள் உருவாகலாம். ஆடம்பரச் செலவுகளை குறைக்க வேண்டும். புத்திசாலித்தனமான செயற்பாடுகளால் மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பு, ம்ரியாதை மேம்படும். தொழில் ரீதியான ஆதாயங்கள் அதிகரிக்கும். மனைவி, மக்களின் நீண்ட நாள் கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். வீட்டில் வசதி, வாய்ப்புகள் அதிகரிக்கும்.

### கன்னி



எதிர்பார்த்த பணவரவுகள் கைக்குக் கிடைக்கலாம். திட்டமிட்ட காரி யங்களைத் தடங்கலின்றி முடித்துக் கொள்வீர்கள். பெண்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். தொழில் ரீதியான திறமை, சாதுர் யம் வெளிப்படும். உறவினர்கள் வருகையால் சிரமங்கள், செலவுகள் உண்டாகலாம். வழக்கமான பணிகளைச் செய்ய முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். இதுவரை பார்த்திராத சிலரின் உதவி கிடைக்கலாம். பெரிய மனிதர்களின் அனுசரணை கிட்டும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகி, பாசம் அதிகரிக்கும். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். புதிய நண் பர்களின் அறிமுகம் கிடைக்கும். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரலாம். உறவுப் பெண் கள், சகோதரிகள், தாயார் வழியில் சில நன்மைகளை அடையலாம். பழைய வாகனங்களை மாற் றிப் புதிய வாகனங்கள் வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. ஏதாவது ஒரு வேலையாக அலையும் சூழ்நிலை உருவாகும். பொலிஸ் தொடர்பான விடயங்களில் அனுகூலம் உண்டு. கடன் விவகாரங்கள் கட்டுக்குள் வரும். தண்டச் செலவுகள் ஏற்படலாம்.

### துலாம்



வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்கவும், பிள்ளைகளின் விருப் பங்களை நிறைவேற்றவும் கணிசமான தொகையைச் செலவிடலாம். திட்டமிட்ட சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக் கலாம். அடுக்கடுக்காகப் பல வேலைகளைத் திட்டமிட்டுச் செய்வீர்கள். மற்றவர்கள் உங்களைப் பார்த்துப் பொறாமைப்படும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். ஆத்திரப் பட்டு, அவசரப்பட்டு காரியங்களில் இறங்கி விட்டு, அதன்பின் யோசிப்பீர்கள். பிள்ளைகள் ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டு எரிச்சல் உண்டாக்கலாம். சட்ட நீதிமன்ற விவ காரங்கள் போன்றவற்றில் கவனமாக இருக்க வேண்டும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டும் என்ற துடிப்போடு செயற்படுவீர்கள். தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள் தொடர்பான வழிகளில் ஆதாயம் பெறலாம். பல நாள்களாக இழுத்தடித்த அரசு காரியங்கள் அனுகூலமாக முடிவுக்கு வரும். மாமன், மைத்துனர்களால் நன்மை அடையலாம்.

### விருச்சிகம்



திட்டமிட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். சாமர்த்தியமான பேச்சுக் களால் சிலரிடம் காரியம் சாதிப்பீர்கள். மற்றவர்களுக்காக சில விடயங்களில் விட்டுக் கொடுப்பீர்கள். கடன் மிகுதிகள் வசூலாகும். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். சோர்வு, சோம்பல் அதிகரிக்கும். வெளியூர் பயணங்கள் செல்லலாம். உங்களுக்காக மட்டுமின்றி மற்றவர்களுக்காக எடுத்த முயற் சிகளிலும் வெற்றி கிடைக்கும். தொழில், உத்தியோக சூழ்நிலை ஆறுதல் தருவதாக அமையும். எந்த விடயத்திலும் புத்திசாலித்தனமாக செயற்பட்டு மற்றவர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். வீடு, மனை வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. பொன், பொருள் வாங்கவோ, அடகு வைத்தவற்றை மீட்கவோ சந்தர்ப்பம் சாதக மாக அமையும். வாங்கிய கடன் மிகுதிகளைத் திருப்பிக் கொடுப்பீர்கள். பெண்கள், சகோ தரிகள், பொழுது போக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் உண்டு. சிலர் ஒரு வகையில் இழப்பையும், மற்றொரு வகையில் ஆதாயத்தையும் பெறும் சூழ்நிலை உருவாகலாம். பணவரவுக்கும், முக்கியமான வேலைகளை முடித்துக் கொள்ளவும்.

### தனுசு



ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். உறவினர்கள் உங்களின் வீட்டிற்கு வரலாம். உங்களிடம் வாக்குக் கொடுத்த ஒருவர் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். சிலருடன் கருத்து மோதல்கள் உருவாகலாம். எதிர்பாராத உதவி கிடைக்கும். எதிர்பாராத பணவரவுகளைப் பெற லாம். வழக்கமான காரியங்களை எல்லாம் ஊக்கம், உற்சாகத்தோடு செய்ய முடியாமல் சிரமங்கள், இடர்பாடுகளைச் சந்திக்கலாம். எவ்வளவுதான் சிரமப்பட்டு வேலை களைச் செய்தாலும், அதற்குப் பாராட்டுக் கிடைப்பதை விட, நீங்கள் செய்த குறைகளை சுட்டிக் காட்டுவோரே அதிகம். கணவன் மனைவி இடையே அடிக்கடி வாக்குவாதங்கள் ஏற்படலாம். சகோதரர்கள், பங்காளிகள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். தொழில் ரீதியாக புதிய ஒப்பந்தங்கள் போட மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. புதிய வேலைகளை எதிர்பார்ப்போர் நல்ல செய்திகளைக் கேட்கலாம். பெண்கள், சகோதரிகள், ஆடம்பரப் பொருள்கள் வாங்குவது போன்றவற்றால் செலவுகள் அதிகரிக்கும்.

### மகரம்



ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். அடமானமாக வைத்த பொன், பொருள்களை மீட்கலாம். உறவினர்கள், பால்ய நண்பர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி அடைவீர்கள். சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். ஆலய வழிபாடுகளில் நாட்டம் செல்லும். சிலர் உதவி செய்ய முன்வந்தும் அதை மறுத்து விடுவீர்கள். கணவன் மனைவி இடையே பிரச்சினைகள் வராமல் விட்டுக் கொடுத்து செல்ல வேண்டும். ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கும். பழைய வாகனங்களால் செலவுகள் அதிகரிக்கலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வழியிலும் சிரமங்களே அன்றி, ஆதாயம் இல்லை. உத்தியோக ரீதியான சலுகைகள் கிடைக்கும். சகோதரர்கள் உதவிகரமாக இருப்பர். கடன் விவகாரங்கள் கட்டுக்குள் வரும். பொலிஸ் தொடர்பான விடயங்களில் அனுகூலம் உண்டு. தந்தையுடன் மனஸ்தாபங்கள் ஏற்படலாம். தைரியும், தன்னம்பக்கை அதிகரிக்கும். நண்பர்கள் சிலர் உதவிகரமாக இருப்பர்.

### கும்பம்



திட்டமிட்ட காரியங்களில் மட்டுமின்றி, திட்டமிடாத காரியங்களிலும் வெற்றி கிடைக்கும். கணவன் மனைவி இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். பல நாள்களாக இழுத்தடித்த பணவரவுகள் வரலாம். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். கடன் மிகுதிகள் வசூலாகும். விருந்து, விசேஷங்களால் சந்தோஷம் அடைவீர்கள். தொழில், வியாபார ரீதியான விடயங்கள் நினைத்தது போல நடப்பது கடினம். தொழில் துறையினர் தேக்கமான நிலையை காணலாம். கொடுத்த கடன் மிகுதிகள் வராமல் இழுத்தடிக்கலாம். வேலையாள்களால் சிரமங்கள் உருவாகலாம். பணிபுரிவோர் எந்த வேலையையும் உயர் அதிகாரிகள் திருப்தி அடையும் வகையில் செய்ய முடியாது. எந்த விடயத்திலும் உறுதியான முடிவுகள் எடுக்க முடியாமல் தடுமாற்றங்களைச் சந்திக்கலாம். சேமித்த பணத்திற்கு செலவுகள் ஏற்படலாம். பெண்கள், சகோதரிகள், தாயார் வழியில் மனஸ்தாபம் வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். பணிபுரியும் இடத்தில் பெண்களிடம் வாக்குவாதங்களை தவிர்க்க வேண்டும். தர்ம, புண்ணிய காரியங்களைச் செய்வீர்கள்.

### மீனம்



கலகலகப்பான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். ஒரு வகையில் வந்த வரவு கள் மற்றொரு வகையில் செலவாகும். உங்களுக்கு வேண்டிய ஒரு வருக்காக மற்றவர்களிடம் உதவி கேட்கலாம். நோய் உபாதைகளைத் தவிர்க்க உணவு விடயங்களில் கவனம் அவசியம். அடுக்கடுக்காக பல வேலை களைத் திட்டமிட்டு செய்வீர்கள். தம்பதியர் இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். தொழில் ரீதியான பணவரவுகளைப் பெறலாம். ஆரோக்கிய குறைவு களால் அவ்வப்போது உற்சாகம் குறையலாம். பெரிய அளவில் லாபம் கிடைக்கும் என, மற்றவர்கள் சொல்லும் வார்த்தைகளை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்க வேண்டாம். தாயார் வழியில் செலவுகள், சிரமங்கள் ஏற்படலாம். வீடு மாற்றம் தொடர்பான விடயங்களில் அக்கறை காட்டுவர்கள். உடன் பிறப்புகள் விடயங்களில் பட்டும்படாமல் நடந்து கொள்ள வேண்டும். பெண்கள், சகோதரிகள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். பொழுதுபோக்கு விடயங்களால் சந்தோஷம் அடைவீர்கள். பிள்ளைகளின் செயற்பாடுகளால் பெருமை அடைவீர்கள். மனைவியின் தேவையை நிறைவேற்றி வைப்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளமான குரல் கொண்டவர் செ.குமாரசாமி

சில சங்கீத வித்துவான்கள் தமது இசை அரங்குகளைப் பார்வையாளர் அனைவரும் கேட்டு இன்புறும்படியாக அமைத்துக் கொள்வதில்லை. அங்கு தமது வித்துவங்களைக் கொட்டித் தீர்ப்பதிலேயே குறியாக இருப்பார்கள். ஆனால் கணீரென்ற குரல் வளத்தால் மரபுவழி தவறாமல் இசைபாடி கேட்பவர் எல்லோரை யும் மதிமயங்கச் செய்யவல்ல ஒப்பற்ற பாடகர் சங்கீத பூஷணம் செ.குமாரசாமி. செந்நெறி இசையிலும் திருமுறை இசையிலும் மெல்லிசையிலும் மிகுந்த ஈடுபாடுகொண்ட இவர் தனது ஆசிரியப் பணியில் முப்பத்தைந்து ஆண்டுகள் சேவையாற்றிய ஒருவராக வும் மக்கள் மனம் நிறைந்த கலைஞராகவும் தற்போது இசைப்பணி புரிந்து வருகின்றார். பன்முக ஆளுமைகள் கொண்ட இவர் கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் பிரதி அதிபராகவும் இருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

காலஞ்சென்ற செல்லத்துரை - கண்ணகை தம்பதியரின் மகனாக 10.01.1951 இல் கரவெட்டியில் இவர் பிறந்தார். குடும்பத்தினர் அனைவரும் கலைத் துறை ஈடுபாடு கொண்டவர்களாக இருந்தமையால் இவரும் அதன்பால் ஈர்க்கப்பட்டு, பாடசாலைக் கல்வியுடன் தனது இசையறிவையும் வளர்த்துக் கொண்டார். இந்தக் காலத்தில் சங்கீதபூஷணம் கல்வியங்காடு த.இராஜலிங்கத்திடம் குருகுல முறைப்படி குரலிசையைக் கற்றுக்கொண்டார். நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் உயர் கல்வியை முடித்த பின் தனது இசையறிவை மேலும் வளர்த்துக் கொள்வதற்காகத் தமிழகத்தின் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சென்றார்.

1973 இல் சென்னையில் இருந்த இசைமணி சீர்காழி எஸ்.கோவிந்தராஜனின் வீட்டில் சிலகாலம் தங்கியிருந்து இசை கற்றபின் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இசைத் துறையில் தன்னை இணைத்து சங்கீதபூஷணம் என்னும் கற்கை நெறியைத் தொடர்ந்தார். இந்தக் காலத்தில் திருப்பாம்புரம் ரி.என். சுவாமிநாதபிள்ளை, ரி.என்.சிவசுப்பிரமணியம்பிள்ளை சகோதரர்களிடமும் எம்.பி.வஜ்ரவேல் முதலியார், எஸ்.வேணுகோபாலையர் போன்ற இசைமேதைகளிடமும் வரன்முறை தவறாத இசையைக் கற்றார். அத்துடன் அங்கே ஆண்டுதோறும் நடைபெற்ற இசைப் போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்று வெற்றிவாகை சூடியதுடன் தனது ஆசிரியர்களின் வழிநடத்தலில் தமிழகத்தில் ஏராளமான இசைக் கச்சேரிகளையும் வழங்கி வந்தார்.

இவ்வாறு முழுமையானதோர் இசையாளனாய் நாடு திரும்பிய இவர் 1978 இல் கரவெட்டி யார்க்கரு விநாயகர் ஆலய முன்றலில் தனது இசை அரங்கேற்றத்தைச் சிறப்புற நிகழ்த்தினார். இதன் பின் தனியார் மன்றங்களில் இசை வகுப்புக்களை நடத்தி வந்த போது 1982 இல் இசை ஆசிரிய நியமனத்தைப் பெற்று வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம், கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் இசையாசிரியராகக் கடமையாற்றி 1998இல் இருந்து கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இசை விரிவுரையாளராகவும் 2010 இல் பிரதி அதிபராகவும் பணியாற்றி 2011 இல் ஓய்வு பெற்றுள்ளார். அத்துடன் யாழ்.பல்கலைக்கழக இசை, நடனத் துறைகளில் வருகை விரிவுரையாளராகவும் பரீட்சகராகவும் இன்றுவரை கடமையாற்றி வருகின்றார்.



மிகச் சிறந்த ஆற்றுகையாளரான இவர் இலங்கையின் அனைத்துப் பாகங்களுக்கும் அழைக்கப்பட்டு வரும் ஜனரஞ்சகம் நிறைந்த பாடகராகத் தனித்துவம் பெறுகின்றார். சுருதி, லய சுத்தமான இவரது பாடுந் திறனும் தமிழ் மொழியை இனிதுற உச்சரிக்கும் அழகும் ஓங்கி ஒலிக்கும் வளமான குரலும் இசைக் கச்சேரியின் அளிக்கை முறையும் அனைவரையும் கவர்ந்துவிடுகின்றன. ஏனையோர் கையாளத் தயங்குகின்ற அபூர்வமான இராகங்களான ஸ்ரோதஸ்வினி, சுமநீசரஞ்சனி, திரிவேணி, நிஷாதி, வாசந்தி போன்ற இராகங்களில் விருத்தங்களை, பாடல்களை பக்திரஸம் ததும்ப இனிமையோடு பாடும் திறன் கொண்டவர்.

**சாதனைக் கலைஞரைச் சந்திப்போம் சிந்திப்போம் 6**

ஈழத்தின் சைவ ஆலயங்களில் தென்னிந்தி யப் பாடகர்களின் கச்சேரிகளும் பக்திப்பாடல்களும் ஒலிக்கவிடப்பட்ட காலத்தில் எமது ஆலயங்கள் மீது எம்மவர்களால் இயற்றப்பட்ட பாடல்களை ஒலிப்பதிவு செய்து ஈழத்துக்கென்று தனித்துவமான பக்திப்பாடல் மரபை உருவாக்கிய முன்னோடியாகவும் இவர் விளங்குகின்றார். இவரால் பாடப்பட்ட நூற்றுக்கணக்கான பாடல்கள் இறுவட்டுக்களாக வெளியிடப்பட்டு ஆலயங்கள் தோறும் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. ஒலிப்பதிவுத் துறையில் திறன் கொண்ட இவர் குறுந்திரைப்படங்களுக்கான சிறந்த பாடகராகவும் பணியாற்றி வருகின்றார்.

இசைக் கச்சேரிகளில் சொந்தப் பாடல்களைப் பாடிவரும் சிலருள் இவரும் ஒருவர். பக்திப்பாடல்களையும் கீர்த்தனைகளையும் புதிதாக உருவாக்கித் தனது இசை அரங்குகளில் அறிமுகம் செய்துவரும் இவர் கணக்கு வழக்குகளையும் கையாளும் வல்லமை கொண்டவர். கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரிய மாணவராக இருந்தபோது இயலிசை வாரிதி நா.வீரமணிஐயரால் இயற்றப்பட்ட ஏராளமான நாட்டிய நாடகங்களுக்கு இசையமைத்துப் பாடியவர். இன்றும் நடன அரங்குகளில் குரலிசை வழங்கி வருவதோடு வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களிலும் சிறப்பு நிலைப் பாடகராக விளங்கி வருகின்றார். அத்துடன் காணுகின்ற காட்சிகளை அப்படியே உயிருள்ள ஓவியமாக வரைந்துவிடும் சிறந்த ஓவியராகவும் இவர் காணப்படுகிறார்.

பல நூற்றுக் கணக்கான மாண வர்கள் தற்காலத்தில் இசைகற்று வந்தாலும் ஆற்றுகைத் திறன் கொண்டவர்களாக அவர்கள் அனைவரும் உருவாகுவதில்லை. ஒரு சிலரே மேடைக்கு வருகின்றனர். எனவே நாம் மாணவர்களைச் சிறந்த இசை ஆசிரியர்களாக வேனும் உருவாக்க முயற்சிக்க வேண்டும். எமது தெளிவான கற்பித்தலின் ஊடாகவே அவர்கள் வளம் பெறுகின்றனர். பாடல்களைக் கற்பிக்கும் போது அவற்றுக்கான ஸ்வர, சாகித்திய, அங்க அடையாளங் களை ஆசிரியர் கண்டிப்பாக வழங்கவேண்டும். கேள்வி ஞானத்தில் பாடுவதைப் போன்று கர்நாடக இசையைக் கற்பிக்கக் கூடாது. குறியீடுகளுடன் கற்பிக்கப்படாத கீர்த்தனை நீண்டகாலத்துக்கு நினைவில் நிற்பதற்கு வாய்ப்பே இல்லை. சங்கதிகளுக்கான ஸ்வரங்களையும் அவை அமைந்து வருகின்ற லய நுட்பங்களையும் பொறுமையோடும் நிதானத்தோடும் கற்பித்தால், மாணவர்கள் பாடலையும் ஆசிரியரையும் உயிருள்ள வரை மறக்கமாட்டார்கள் என்று தனது அனுபவத்தி னூடான கருத்துக்களைக் கூறுகின்றார். ✱

**வசாவிளான் தவமைந்தன்**

# நாள்பட்ட இருமலுக்கு மொசுமொசுக்கை குடிநீர்

## மொசு மொசுக்கை

**வேறுபெயர்-** முசுமுசுக்கை, இரு குரங்கின்கை, ஜலேயம்.

**தாவரவியற்பெயர்-** Melothria Maderspatan (மெலோதிரியா மடேஸ்பேற்றன்)

**குடும்பம்-** Cucurbitaceae (குக்கர்பிற்யே)

**ஆங்கிலப்பெயர்-** Rough Bryony.

இது கொடி வகுப்புக்குரியது. மழைக்காலத்தில் தானாகவே முளைக்கும். தனி இலைகள் கரும்பச்சை நிறம். இலை, கொடி என்பவற்றில் சுணை முட்கள் போன்ற சிறு தூக்கங்கள் காணப்படும். பூக்கள் மஞ்சள் நிறம், பழம் சிவப்பு நிறம். தூதுவளங்காய் போல் இருக்கும்.



இதன் இலையைத் தனித்தாவது கருந்துளசி இலை, கருநொச்சியிலை என்பவற்றுடன் சேர்த் தாவது குடிநீர் செய்து காலை, மாலை கற்கண்டு சேர்த்துப் பருகிவர முட்டு, இழுப்பு, நாள்பட்ட இரு மல், கோழைச்சுரம் என்பன மாறும்.

ஊறவைத்த புழுங்கலரிசியுடன் மொசு மொசுக்கை இலையையும் சேர்த்தரைத்து வடைபோலத் தட்டி நெய்விட்டு தோசைக்கல்லில் சுட்டுச் சாப்பிட்டுவர இருமல், இரைப்பு, கோழைக் கட்டு என்பன மாறும்.

வேரை உலர்த்திப் பொடித்து தேன் சேர்த்துக் கொடுக்க வாந்தி நீங்கும்.

**நலம்தரும் தெய்வீக மூலிகைகள்**

## ஆமணக்கு

**வேறுபெயர்:** ஏரண்டம், சிற்றாமணக்கு, முத்தாமணக்கு.

**தாவரவியற் பெயர்:** Ricinus Communis (ரிசினஸ் கொம்மியூனிஸ்)

**குடும்பம்:** Euphorbiaceae (யூபோபியேசியே)

**சிங்களப் பெயர்:** எண்டரு

**சமஸ்கிருதப் பெயர்:** ஏரண்ட

**ஆங்கிலப் பெயர்:** Castor Oil Plant

ஆமணக்கில் சிற்றாமணக்கு, செவ்வாமணக்கு, கட்டாமணக்கு, கடலாமணக்கு, எலியாமணக்கு, மலையாமணக்கு என்ற பேதங்கள் உண்டு. "மூன்று பெண்டுகள் மொட்டாக்குக் காரிகள் வெயிலைக் கண்டால் வெவ்வேறே என்று ஆமணக்கம் வித்துக்கள் வெயிலில் முற்றி வெடிப்பதை விடுதலையாகக் கூறுவதுண்டு. சிற்றாமணக்கு செடி வகுப்புக்குரியது. பல்லாண்டு வாழும் தாவரம். தனி இலைகள். இலைகள் விரல் போன்று (5-7) பிளவுபட்டுக் காணப்படும். பூக்கள் வெள்ளை, பச்சை நிறமாக அல்லது மண்ணிறமாகக் காணப்படும். கொத்தாகக் காய்க்கும். விதைகள் சற்றுச் செந்நிறம்.

இலையை வாட்டி வீக்கங்களுக்குப் போட வீக்கம் வற்றும். மூட்டு வீக்கங்களுக்குக் கட்டி வர வீக்கம் வற்றும். வலியும் குறையும். ஆமணக்கு எண்ணெய் பேதி மருந்தாகப் பயன்படுகிறது.

வாத நோய்களுக்கு இந்த எண்ணெயை வெளிப் பிரயோகமாகப் பூசலாம்.

ஆமணக்கமிலை, கருநொச்சியிலை, வாதமடக்கி இலை, இலுப்பையிலை, ஊமத்தையிலை என்பவற்றைக் குறுணலாக அரிந்து துணியில் பொட்டணியாகக் கட்டி சூடாக்கி வாதவியாதிகளுக்கு ஒத்தடம் கொடுத்து வர சுகம் ஏற்படும்.

ஆமணக்கிலையுடன் நொச்சியிலை, பாவட்டையிலை, பருத்தியிலை, வேப்பம்பட்டை, மாவிலங்கம்பட்டை என்பவற்றைச் சேர்த்து அவித்த நீரினால் பிரசவித்த பெண்கள் மூலிகைக் குளியல் செய்துவர உடல் வேதனை, சோர்வு என்பன நீங்கும். தாய்ப்பாலும் அதிகம் சுரக்கும்.



Dr. சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 175

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ | 5 | 6 |
| 7 | | ■ | 8 | | | | |
| | ■ | 9 | | | ■ | | ■ |
| 10 | 11 | | | ■ | 12 | | 13 |
| 14 | | | ■ | 15 | | ■ | |
| | ■ | 16 | 17 | | ■ | 18 | |
| 19 | 20 | | | ■ | 21 | | |
| ■ | 22 | | ■ | 23 | | | |

அனுப்புபவர் பெயர்:..............................................

விலாசம்:..............................................

..............................................

கையொப்பம்:..............................................

### இடமிருந்து வலம்

1. பகிடிப்பாடல் பாடுபவர்
5. பிரி
7. உயிர்க்காணிக்கை
8. தேர் உலா
9. துக்கம்
10. உலோகத் தகடு
12. வாளி
14. தங்கத்தைச் சோதித்துப் பார்க்கும் முறைமை
15. இரும்பினால் ஆனது
16. இன்பம் துய்த்தல்
18. பெரும், பெரிய என்பதைக் குறிக்கும்
19. அலைதல்
21. அசைய
22. சத்தமிடும் வண்டுக்கு இந்தப் பெயர்
23. தமிழ்ப் புலவர்

### மேலிருந்து கீழ்

1. விநாச காலத்தில் வருவது
2. தற்போதைய யுகம்
3. இதைத் தலையில் வைத்து ஆடுவர்
4. ரகம்
5. நவமணிகளில் ஒன்று
6. தலை தாழ்த்து
9. கெட்டுப் போதல்
11. தாண்டு
12. குழு/ கன்னை
13. மகன்மார்
15. சம்மதச் சொல்
17. மண்ணுக்கு முன்னையது
18. விலக
20. முனிவர்
21. இஸ்லாமியர்களின் வழிகாட்டி

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 173 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) அமராவதி (5) ஆவி (7) தர (8) சினத்தல் (9) ரம்மியம் (11) வலை. (12) தம் (13) ஏன் (14) பூவை. (15) கரி (17) கணு (18) எரு (19) மறு. (20) முதலை (22) விவாகம் (24) குல்லாய் (25) தம்பு

### மேலிருந்து கீழ்

(1) அதரம் (2) மரம். (3) வசியம். (4) தினம் (5) ஆதவன் (6) வில்லை (10) மிதவை. (13) ஏரி (14) பூணுதல் (15) கருவி (16) எறும்பு (17) கழுகு (19) மகம். (21) லைலா (23) வாது.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 173 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** — **ஞா. செந்தமிழ்செல்வன்,** குப்பிளான் தெற்கு, ஏழாலை.

**2 ஆம் பரிசு** — **த.டினா,** மு/ஐயன்கன்குளம் அ.த.க.பா, புத்துவெட்டுவான்.

**3 ஆம் பரிசு** — **த.நிர்மலன்,** இல.02, நாலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு** — **த.சுதாகர்,** இல- 17/A, தவசிக்குளம், கண்டி வீதி, வவுனியா.

**5 ஆம் பரிசு** — **பிரம்மஸ்ரீ ச.க.சுதர்சனக் குரு,** சிவன்கோயிலடி, ஆவரங்கால், புத்தூர்.

### பாராட்டுப் பெறுவோர்

**திரு. கு.ஜெயகோபன்,**
இல.11/1 R.D.D விடுதி, வெளிவட்டவீதி,
வவுனியா

**வி.விஷ்ணுஜன்,**
சிவகுரு வீதி, கேணியடி, கொக்குவில் மேற்கு.

**திருமதி ச.லிங்கமூர்த்தி,**
அமெரிக்கன் மிஷன் பாடசாலை ஒழுங்கை
வல்வெட்டித்துறை.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவான தாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 175**
*நியூ உதயன் பப்ளிகேஷன்*
*(பிறைவேற்)லிமிட்டெட்,*
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 24.08.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப் படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.175 இற்கான விடைகள் 28-08-2011 ஞாயிறு உதயனில் ஞாயிறு உதயனில் பிரசுரமாகும்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

# மயானத்துப்...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அப்பாடா, அதோ ஒருவாறு தூரத்தில் கண்ணன் சைக்கிளில் விரைந்து வருவது தெரிந்தது. இருவரும் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். சைக்கிளை படலையில் சாத்திவிட்டுப் பதுங்கு குழிக்குத் திரும்பப் போனவன் ஓரடி எடுத்து வைக்கவில்லை.

அதற்குள் சீறிப் பாய்ந்து வந்த ''ஷெல்'' அவர்களது வீட்டு முற்றத்தில் விழுந்து வெடித்துச் சிதறியது. வீடு அதிர்ந்து சரிந்து விழுந்தது. ஒரே புகை மண்டலத்தினூடே ''அம்மா...ஆ...அம்மா'' என்று கண்ணன் எழுப்பிய அவலக்குரல் காற்றோடு சங்கமித்து எதிரொலித்தது. ''மகனே... கண்ணா.. என்ர ராசா'' என்று கத்தியவாறே ஓடிச் சென்றாள் தாய் சுந்தரி. பின்னால் ''தம்பி..'' என்று ஓலமிட்டவாறு ஓடிச்சென்றாள் அக்கா சுவலட்சுமி.

அங்கே தன் செல்வமகன் ஆசைக்கொன்றாய் ஆஸ்திக்கொன்றாய் இருந்த பிஞ்சுச் செல்வம் உயிரை இழந்து பிணமாய் வீழ்ந்து கிடந்தான். ''கட்டின புருஷனும் பாதி வழியிலேயே விட்டுட்டுப் போயிட்டாரு. வளர்த்த குழந்தையையும் அநியாயமா இழந்துட்டேன். இனி ஏன்தான் உசிரோட வாழனும்? பேசாம நஞ்சைக் குடிச்சிட்டு செத்திடலாம் ஆ.. ஆனாலும் பூக்கப் போற மொட்டா சுவலட்சுமி இருக்காளே. அவள தனியா விட்டுட்டுப் போறதா? இல்ல சுவலட் சுமியாவது சந்தோஷமா வாழனும்.

எப்பிடியாவது இங்க இருந்து போயிட்டாச் சரி'' என்று எண்ணிய சுந்தரி தன் சுமக்கத் தகுந்த உடமைகளோடு பிறந்த மண்ணையும் வளர்த்த மண்ணையும் விட்டு வேற்றிடம் சென்றாள். தன் மகளோடு. போகும் வழியெல்லாம் சிதைந்து போன வீடுகள் தான் இருந்தன.. ஏன் இந்தக் கோலம் உரிமைக் காய்ப் போரிட்ட மண்ணின் கோலம் அலங்கோலமாயிருந்தது. மனத்தினுள் நொந்து கொண்டாள்.

நெடுந்தூரம் நடந்தாயிற்று அதோ அவ்விடத்தில் காவற்சாவடி. காக்கி உடையணிந்த இராணுவத்தினர் கொடிய துப்பாக்கியை ஏந்திக் கொண்டிருந்தனர். அவர்களைக் கண்டவுடன் ''அடையாள அட்டை எங்கே'' என்று கேட்க ''வீடு ஷெல் அடிபட்டு சுக்கு நூறாகிப் போயிற்றதால் 'ஐடியன்டிகார்ட்' அதுக்குள்ள அடிபட்டு போயிட்டுது ஐயா'' என்று கெஞ்சினாள் சுந்தரி. ''அப்படி சொல்லிட்டா சரியாயிடுமோ? ஐடியண்டி இல்லாட்டி விசாரணை செய்யவேண்டி வரும்'' சுவலட்சுமியின் மேல் பரவியது அவனது பார்வை.

விசாரித்த பெரியவர் ''நீ கிழவி ஒன்னட்ட விசாரிச்சு பயனில்ல. இதோ அவளைக் கூப்பிடு விசாரிச்சுட்டு அனுப்புறோம். என்றான். எவ்வளவோ முயற்சிகள் செய்தும் பயனளிக்கவில்லை. இறுதியில் எத்தனையோ நாள் அவர்களிடம் வந்து விசாரித்தவளுக்கு''நாளை வருவாள்'' நாளை வருவாள்'' என்ற பதிலோடு காலம் கடந்தது. ஆனால் அவளும் ஒரு ''கிருசாந்தி'' ஆகிவிட்டாள் என்ற உண்மையைக் காலங் கடந்தே தெரிந்து கொண்டாள். அப்பாவி மொட்டுக்கள் அனலில் கருகின.

''ஆண்டவா நான் என்ன பாவம் செஞ்சேன்? ஏன் எனக்கு இந்தத் தொடர் சோதனை என்று தாயுள்ளம் வெடித்தது. கண்கள் கண்ணீர் சிந்தவில்லை. கண்ணீர் தான் துயரங்களுக்கு நீர்வார்த்து வற்றிவிட்டதே. வாய் வார்த்தைகள் மௌனமாகின. அவளுடன் கதைக்கத் தான் யாருமில்லையே.

நடந்தாள்.... நடந்தாள். கால் போன திசையில் நடந்தாள். அருகில் கல்லறைகள் நிறைந்த ஒரு மயானம் தெரிந்தது. அங்கே ஓர் கல்லறையின் அருகில் சென்று அமர்ந்து கொண்டு வான் முகட்டையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். இன்னும் அவள் வெறித்துப் பார்த்துக்கொண்டிருக்கிறாள்.

அரும்பிலே அனலிலிடப்பட்ட தளிர்களும் களங்கப்பட்ட மொட்டுக்களும் கல்லறைமேல் பூக்கும் பூக்கள் ... எத்தனை எத்தனை போர்ப் பூமியில் வாடி வதங்கிக் கருகிப் போகின்றனர். போரையே வேராகக் கொண்ட உன்பந்த விருட்சங்கள் மயானத்து மலர்களையே சொரிந்து கொண்டிருக்கின்றன. மயானத்து மலர்கள் [illegible] ✱

# அருமருந்து அறுகம்புல்

நம்மில் பலர் அறுகம்புல்லை பூஜை அறையில் வைத்துப் பயன்படுத்துவதுண்டு. ஆனால், அருகம் புல்லின் மருத்துவப் பெருமைகளை அறிந்தவர்கள் நம்மில் எத்தனை பேர் உள்ளனர்?

நமது உடலில் ஊட்டச்சத்து பெருக வேண்டும் என்பதற்காக ஹோர்லிக்ஸ், ஓவல்டின், போன்ற பானங்களைஸ் உண்ணுகிறோம். ஆனால் அருகம்புல்லே அற்புதமான ஊட்டச்சத்து மூலிகை என்பது நம்மில் பலருக்கு தெரிந்திருக்காது.

நல்ல தளிர் அறுகம்புல்லை சேகரித்து நீரில் கழுவி நன்றாக அரைத்து பசும் பாலுடன் சேர்த்து சுண்டக் காய்ச்சி நாள்தோறும் இரவில் படுக்கச் செல்லுமுன் சாப்பிட்டு வந்தால் பலவீனமடைந்த உடல் தேறி நல்ல பலம் பெற்றுவிடும்.

வளர்ந்து வரும் குழந்தைகள் எளிதாக ஊட்டச்சத்து பெற இதே முறையைக் கையாளலாம்.

அறுகம்புல்லை நிரிலிட்டு நன்கு காய்ச்சி அந்த நீரை பதமான சூட்டில் குடித்து வந்தால் இதய நோய்க்கு இதமளிக்கும்.

திடீரென ஏற்படும் வெட்டு, காயம் போன்ற காயங்களுக்கு அரிவாள் மூக்கு என்று சொல்லப்படும் பச்சிலையையும், அறுகம்புல்லையும் சம அளவாக எடுத்து அரைத்துக் கட்டினால் உதிரப் போக்கு உடனடியாக நின்றுவிடும். காயமும் வெகு விரைவில் ஆறிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 30

## நீரிழிவு உள்ளோர் காயங்கள் வராது பார்க்க வேண்டியது அவசியம்

வ. இராமு, உரும்பிராய். கேள்வி: எனக்கு 10 வருடங்களாக சலரோகம் உள்ளது. இப்பொழுது மூன்று மாதகாலமாக எனது இரண்டு பாதங்களிளும் விறைப்புத் தன்மையாக உள்ளன. ஏன் இப்படி உள்ளது? இதற்கு என்ன செய்யலாம்?

பதில்: இந்த நிலைமை சலரோகத்தால் ஏற்படும் நரம்புப் பாதிப்பின் அறிகுறியாகும். குருதியில் குளுக்கோசின் அளவு கட்டுப்பாடற்று அதிக அளவில் இருப்பதால் சில வகையான வெல்லங்கள் உருவாக்கப்பட்டு அவை நரம்பு நார்களை சுற்றி இருக்கும் கலங்களில் படிகின்றன. இதனால் அந்த நரம்புகளின் கடத்தல் செயற்பாடு பாதிக்கப்படுகின்றது. இதனை diabetic neuropathy என்று கூறுவர்.

இது கைகளைவிடக் கால்களையே அதிகம் பாதிக்கின்றது. இதன்போது அதிர்வு, நோ, வெப்ப உணர்ச்சி ஆகியன உணரப்படுவது பாதிக்கப்படுகின்றது.

முதலில் இந்தப் பாதிப்பு பாதத்தில் மட்டும் தொடங்கும். உங்கள் குருதியிலுள்ள குளுக்கோசின் அளவு தொடர்ந்து கட்டுப்பாடில்லாமல் இருக்குமானால், இந்த விறைப்புத் தன்மை மேல் நோக்கி அதிகரித்துச் சென்று உங்கள் கால்கள் இரண்டும் முழுமையாக விறைப்புத் தன்மை அடைந்து உணர்ச்சியற்றுப் போகும். பாதிப்பு அதிகரிக்கும் போது உங்களுக்கு காலின் கீழே ஏதோ ஒட்டி இருப்பது போன்ற உணர்ச்சி, கண்ணை மூடி அல்லது இருட்டிலே நடக்கும்போது நிதானம் தவறுதல் போன்றன ஏற்படலாம்.

இவ்வாறு உங்களுக்கு காலில் உணர்ச்சி குறைவாக இருப்பதனால் காயங்கள் மற்றும் தீப்புண்கள் ஏற்படுவதை நீங்கள் அறியாமல் அல்லது கவனிக்காமல் விட வாய்ப்புள்ளது. சலரோகம் உள்ளவர்களுக்கு காயங்கள் குணமாகும் தன்மையும் குறைவாக இருப்பதனால், உங்களுக்கு ஏற்படும் காயங்கள் மேலும் பெரிதாகி, சத்திர சிகிச்சை செய்து காலை அகற்ற வேண்டிய நிலை ஏற்படலாம்.

இந்த விறைப்புத் தன்மையை முற்றாகக் குணப்படுத்துவது என்பது சிரமமானது. நீங்கள் உங்கள் குருதி குளுக்கோசினை சரியான அளவுக்குள் கட்டுப்பாடாக வைத்தருப்பதன் மூலம் காலில் விறைப்புத் தன்மை ஏற்படுவதைத் தடுக்க முடிவதுடன் இந்தப் பாதிப்பு ஏற்பட்டவர்களுக்கு மேலும் விறைப்புத் தன்மை மோசமடையாமல் தடுக்கலாம்.

உங்களது கால்களை நீங்கள் காயங்கள் ஏற்படாது கவனமாகப் பாதுகாக்க வேண்டும்.

வீட்டை விட்டு வெளியே செல்லும்போது கட்டாயம் செருப்பு அணிய வேண்டும். பாதணிகள் உங்களது பாதங்களை விடப் பெரிதாகவோ, சிறிதாகவோ அல்லது இறுக்கமாகவோ இல்லாமல் சரியான அளவுடைய வையாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு நாளும் இரவிலே படுக்கைக்குச் செல்லுமுன் உங்கள் பாதங்களை நன்றாகக் கழுவி ஏதாவது காயங்கள் உள்ளதா என்று கவனிக்க வேண்டும். அவ்வாறு காயங்கள் இருந் தால் தாமதம் செய்யாது மருத்துவ உதவியை நாடவேண்டும். நகம் வெட்டும்போது காயம் ஏற் படாதவாறு உங்களது விரல் மட்டத்துடன் வெட்ட வேண்டும்.

இவ்வாறு உங்கள் கால்களைப் பேணிப் பாதுகாப்பதுடன் சலரோகத்தையும் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம் உங்கள் விரல்களையோ அல்லது கால்களையோ இழக்க வேண்டிய ஆபத்திலிருந்து நீங்கள் தப்பித்துக் கொள்ள முடியும்.

டாக்டர் எஸ்.உமைபாலன்
நீரிழிவு நிலையம்யாழ்.
போதனா வைத்தியசாலை.

*

உதயனின் இந்த வைத்திய மலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவினால் தொகுத்து வழங்கப்படுகிறது. மலர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி... நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்திய சாலை,யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

## சுகாதார விழிப்புணர்வுக் கண்காட்சி

நல்லூர்க் கந்தன் அடியார்களே, பக்தர்களே நல்லூர் வடக்கு வீதியில், யாழ். போதனா வைத்திய சாலை அபிவிருத்திச் சங்க அனுசரணையுடன் நீரிழிவுச் சிகிச்சை நிலையம் நடத்தும் சுகாதார விழிப்புணர்வுக் கண்காட்சிக்கு ஒருமுறை விஜயம் செய்து உங்கள் சுகாதாரம் சம்பந்தமான சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளுங்கள்.

இங்கு தினமும் பலர் வந்து தமது சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்வதுடன், பல புதிய நோயாளிகள் இனங்காணப்பட்டு போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக சிபாரிசு செய்யப்பட்டுள்ளார்கள்.

அத்துடன் சுகாதாரம் சம்பந்தமான நூல்கள் இறுவட்டுக்கள் என்பவற்றையும் பெற்றுச் செல்கிறார்கள்.

ஆகவே நீங்களும் ஒருமுறைவந்து உங்கள் சுகாராதம், பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுங்கள். இங்கு

1. இலவசமாக குருதியமுக்க பரிசோதனை செய்யப்படுகின்றது.
2. குறித்த கட்டணத்துக்கு (50/=) குருதி வெல்ல பரிசோதனை செய்யப்படுகின்றது.
3. சுகாதாரம் சம்பந்தமாக, இறுவட்டுக்கள், நூல்கள் கிடைக்கின்றன.
4. ஆரோக்கிய உணவு சம்பந்தமான நூல்கள் கிடைக்கின்றன
5. இதுவரை உதயன் பத்திரிகையில் " நித்திய சுகத்தை நோக்கி" என்ற பகுதியில் வெளிவந்த அனைத்து ஆக்கங்களும் தொகுத்து நூலாக வெளியிடப்பட்டு விற்பனைக்கு வைத்துள்ளோம்
6. புற்று நோய் சம்பந்தமான கண்காட்சியும், விளக்கங்களும் இடம்பெறுகின்றன.

எனவே கோயிலுக்கு வரும் அனைத்து அடியார்களும் எமது பகுதிக்கு ஒருமுறை வந்து உங்கள் சுகாதாரம் சம்பந்தமான கேள்விகளுக்குப் பதில்களைப் பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நீரிழிவு சிகிச்சை நிலையம்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

ஊடக அனுசரனை - உதயன்

## தகவல் தொழில் நுட்பத்துறையால் சில உடல், உள பிரச்சினைகள்

தகவல் தொழில்நுட்பத் துறையானது (Information Technology) இன்றய இளைய தலைமுறையினருக்கு பிடித்த கல்வியாகவும் எமது சமூகத்தில் ஒரு வளமான தொழிலாகவும் மாறியுள்ளது. பல வசதி வாய்ப்புக்கள், அவற்றின் காரணமாகக் கிடைக்கின்ற சமூக அந்தஸ்து, மாறிவிடும் வாழ்க்கைத்தரம் என்பவற்றை அவதானிக்க முடிகிறது. கணினித் துறையில் பல்வேறு பிரிவுகள் இருந்தாலும் அவை அனைத் தையும் பொதுவாக தகவல் தொழில்நுட்பம் என்றே குறிப்பிடுகிறார்கள். இத்துறையின் அசுரத்த னமான அதீத வளர்ச்சி காரணமாகவும், இத்துறையில் ஈடுபடுவோர் தங்கள் உடல் நிலை குறித்து அலட் சியமாக இருப்பதாலும், சில பாதிப்புகள் ஏற்படுவது கண்டறியப்பட்டுள்ளது.

1. கண், முதுகு போன்ற பகுதிகளில் ஏற்படும் உடல் ரீதியான பாதிப்புக்கள்,
2. உணவு, தூக்கம் போன்ற வாழ்க்கைச் சுழற்சியில் ஏற்படும் மாற்றங்களால் உருவாகும் மன ரீதியான பிரச்சினைகள்.
3. அதிகமான வேலைப்பழுவால் உருவாகும் மன அழுத்தம்,

இப்படியான பணிச்சூழலில் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைப்பதற்கு எந்தச் சூழ்நிலையில் எப்படிப்பட்ட நிலையில் அமர்ந்து வேலை செய்கிறார்கள் என்பதை முறையாக ஆய்வுசெய்து அதற்கேற்றபடி மாற்றங்களைச் செய்தாலே அவர்களுக்கு ஏற்படும் பெரும்பாலான பிரச்சினைகளைத் தவிர்க்கலாம்.

மேற்படி துறையில் ஈடுபடுவோர் ஒரு நாளில் பெரும்பான்மையான நேரத்தை கம்ப்யூட்டரோடு செலவிட வேண்டியுள்ளதால் அவர்களுக்கு இணக்கமான அவர்களின் வசதிக்கேற்ற சூழலில் கணினியோடு நிறுவப்பட வேண்டும், அதாவது கீ போட்டு அமைப்பு, மவுஸ், மொனிற்றர், உட்காரும் இருக்கை, தொலைத்தொடர்பு, மேசை போன்றன சரியான முறையில் நிறுவப்படுவதன் மூலம் பாதிப்புக்கள் குறைவடைவதுடன், அவர்களின் செயல் திறன்களும் மேம்பாடடையும்.

முறைாகப் பராமரிக்கப்படாத குளிர்சாதன அறைகளில் காணப்படும் பக்டீரியாக்கள், நுண்ணங்கிகள் மூலம் நோய்க்கிருமிகள் பல்கிப் பெருகுவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது.

இதனால் இருமல், தசைப்பிடிப்பு, நிமோனியா, ப்ளூ காய்ச்சல் போன்ற வியாதிகள் ஏற்படுகின்றன. எனவே கணினி இருக்கும் அறைகளை தினமும் சுத்தப்படுத்துவது சிறந்தது. இதற்கு வக்கு வம் கிளீனர் போன்ற சுத்தப்படுத்தும் பொருள்களை பாவிப்பது சிறந்தது.

கணினித் துறையில் பணிபுரிவோருக்கு ஏற் படும் கண் பாதிப்புகளை சி.வி.எஸ். (Computer Vision Syndrome) என அழைப்பார்கள். கண் அழுத்தம், கண் எரிச்சல், கண்ணில் நீர் வற்றிப் போதல், இரட்டைப் பார்வை, மங்கலாகத் தென் படுதல், வெளிச்சக் குறைபாடுகள், தலைவலி, கண் உறுத்தல் போன்றன இதன் குணங்குறிகளாகக் காணப்படும்.

எனவே மேற்படி துறையில் பணிபுரிவோர் அனைவரும் ஆறுமாதங்களுக்கு ஒரு தடவையேனும் கண்களைப் பரிசோதித்துக் கொள்வது சாலச் சிறந்தது.

குழந்தைகளும் அதீத ஈடுபாட்டுடன் கண் இமைக்க மறந்து கணினி விளையாட்டுக்களில் தொடர்ச்சியாக ஈடுபடுகின்றனர்.

ஒவ்வொரு முறை கண் இமை துடிக்கும் போதும் கண்ணீர்ப் பையில் இருந்து நீர் சுரப்பை வெளியேற்றி கண்களில் ஒக்ஸிஜன் இருப்பை சமப்படுத்துவதுடன், கண்கள் ஈரப்பதத்துடன் இருக்கவும் உதவுகிறது.

எனவே கண் இமைக்கும் அளவு குறைந்து கண்களின் இயக்கம் பெருமளவு குறைந்து நீண்ட நேரம் கண்கள் விரிவடைந்த நிலையில் இருக்கும் போது கண்களில் இருக்கும் நீர் உடன டியாக ஆவியாகி கண்களுக்கு ஒரு விதமான காய்ந்த தன்மையைக் கொடுத்து விடுகிறது. இதனால் கண் உறுத்தல் ஏற்படுகிறது.

எனவே சிறியோர் முதல் பெரியோர் வரை தொடர்ச்சியாகக் கணினியைப் பார்த்துக் கொண்டு இருப்பதைத் தவிர்த்தல் வேண்டும்.

அத்துடன் கலர் கலராக மின்விளக்குகளை அலங்காரத்துக்குப் பயன்படுத்துவதைத் தவிர்த்து, சீரான வெளிச்சம் படும்படியாக ஒரேமாதிரியான தரமான கண்களை கூசச் செய்யாத மின்விளக்குகளை பாவிப்பது நல்லது.

மேற்படி துறையில் இருப்பவர்கள் ஏதாவது கலை அல்லது விளையாட்டு, பொழுதுபோக்கு போன்றவற்றுக்கு அவர்களை ஈடுபடுத்துவதன் மூலம் ஒரேவிதமான வாழ்க்கைச் சுழற்சியில் இருந்து மீண்டு புத்துணர்ச்சியுடன் வாழலாம் ,

ச.சுதாகரன்,
தாதிய உத்தியோகத்தர்,
யாழ். போதனா வைத்தியசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயில் திருவிழாக்கள் எதற்காக?

மனித வாழ்க்கையிலே, மனிதன் ஒன்றுகூடுவது, நல்ல விடயங்களைச் சிந்திப்பது, மகிழ்ச்சியாகப் பொழுது போக்குவது என்பன போன்ற விடயங்கள் மிகவும் முக்கியமானவை.

இதை அடிப்படையாக வைத்துக் காலநிலை, தொழில்வசதி, பொருள்வசதி என்பனவற்றைச் சரியாக ஆராய்ந்து நமது முன்னோர்கள் தமது விவசாயச் செயற்பாடுகளின் ஓய்வுகாலமான இளவேனில் காலத்தில், கோயில் விழாக்களுக்குத் தேவையான பழம், பூ முதலியன அதிகமாகக் கிடைக்கும். அந்தக் காலத்தில் கோயில் விழாக்களை ஒழுங்குசெய்து நடத்தி பல வழிகளிலும் மக்களுக்கு நன்மை ஏற்பட வழிசெய்தார்கள்.

அதே காலத்தில் நாம் விழாக்களைத் தொடர்ந்து செய்து கொண்டுவரும்போது தற்போதைய எமது கல்விக்கு அது பெரும் இடைஞ்சலாக அமைகிறது. அவசியமில்லாமல் கோயில்களும் பெருகிவிட்ட காரணத்தால் கல்விக்குப் பிரச்சினை அதிகரிக்கிறது. கோயில் விழாக்கள் குறிப்பிட்ட ஒருகாலம் என்று இல்லாமல் நீண்டகாலத்துக்கு ஒரு கோயில் முடிய இன்னொரு கோயில் என்று நடைபெற்றுக் கொண்டு போகின்றன.

அடுத்த கோயிலில் நடைபெறுகிறது என்ற காரணத்தால் இந்தக் கோயிலுக்கும் அது பொருத்தமோ இல்லையோ என்று பாராமல் விழாக்கள் ஒழுங்கு செய்யப்படுகின்றன. பல இடங்களில் விழாவில் பெரும் பங்கு ஒலிபெருக்கிக்கும் கொடுக்கப்பட்டுப் பொதுமக்களுக்குப் பெரும் இடைஞ்சலாக அமைகிறது.

உயர்தரப் பரீட்சை, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, சாதாரண தவணைப் பரீட்சை போன்றவை இடம்பெறும் காலத்தில் திருவிழா நடைபெறும் கோயில்களைச் சுற்றி வாழ்பவர்கள் பெரும் இடையூறுக்கு ஆளாகின்றனர்.

சனநெருக்கம் அதிகரித்துக் கொண்டு போகும் போது கோயில்களும் வரைமுறை இல்லாமல் அதிகரித்துக் கொண்டு போய் அவற்றில் ஏற்படுத்தப்படும் நிகழ்ச்சிகள் ஒலிபெருக்கியைக் கொண்டு மக்களுக்கு ஏற்படும் இன்னல்களை அதிகரித்துக்கொண்டு போனால் நிலைமை எங்கு போய்முடியும்.

ஐம்பது வருடங்களுக்கு முன்னர் சில கோயில்களில் மட்டும் பெரும் திருவிழாக்கள் சிறப்பாக நீண்ட நேரங்களுக்கு நடைபெறும். அருகிலுள்ள பாடசாலைகளும் திருவிழாக்களுக்குப் பிள்ளைகள் போகக் கூடிய விதமாக நடைமுறைகளை மாற்றியமைக்கும்.

இப்போது நிலைமை முற்றிலும் மாறிவிட்டபடியால் சமூகம் இதைப்பற்றிச் சிந்திக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது.

நாங்கள் விஷயங்களை நடத்துவதற்குப் பதிலாக விடயங்கள் எங்களை நடத்தும் ஒரு பழக்கத்தை நாம் ஏற்படுத்திக் கொண்டு வருகிறோம். இது ஆரோக்கியமானதல்ல.

பன்முகப்பட்டிருந்த பாடசாலை நிர்வாகம் ஒருமுகப்படுத்தப்பட்டபோது விளைந்த தீமைகளில் நிலைமையைப் பார்த்து முடிவு எடுக்கவேண்டிய நிலையிலுள்ளவர்கள் வாளா இருக்க வேண்டியேற்படுவதும் ஒன்று.

சமூகப் பெரியவர்கள், கல்விமான்கள் கொஞ்சம் மௌனத்தைக் கலைத்து மக்களை வழி நடத்த முன்வர வேண்டியது மிகவும் அவசியமாகிறது. எதுவுமே செய்யமுடியாது என்று கருத்துத் தெரிவிப்பதை விட்டுவிட்டுச் சமூகம் நன்மை பெற உழைப்போமாக.

**வை.சந்திரபாலன்**
கொக்குவில்.

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஒக.14

அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பின் ஏற்பாட்டில் நல்லூர் திருவிழாவை முன்னிட்டு 63 நாயன்மார் மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் சொற்பொழிவுகளில் இன்று ஞாயிற்றுக்கிழமை 'எது வழிபாடு' என்னும் தலைப்பில் சைவப் புலவர் நவராஜன் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

(ம-311)

***

யாழ்ப்பாணம்,ஒக.14

நல்லூர் ஆலயத்தின் பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவலர்கள் திணைக்களத்தால் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் இடம்பெற்று வரும் நிகழ்வில் இன்று ஞாயிற்றுக்கிழமை பதினொராம் திருவிழாவில் 'வாராதிருக்க வழக்குண்டோ' என்னும் தலைப்பில் கு.பாலசண்முகன் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

தொடர்ந்து இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, ஊர்காவற்றுறை தம்பாட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் அறநெறிப் பாடசாலை ஆசிரியர் பங்குபற்றும் கலை நிகழ்வுகள் இடம்பெறும்.

(ம-313)

***

யாழ்ப்பாணம்,ஒக.14

நல்லூர் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லூர் சைவ மகாசபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குருமூர்த்த மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கு தெய்வீக தொடர் இசைப் பேருரை இடம்பெற்று வருகின்றது.

இன்று ஞாயிற்றுக்கிழமை பதினொராம் திருவிழாவில் 'தாடகை வதம்' என்னும் தலைப்பில் பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்சர்மா நிகழ்த்துவார்.

(ம-313)

***

யாழ்ப்பாணம், ஒக.14

நல்லூர் ஆலயத்தின் பெருந்திருவிழாவை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் அனுசரணையுடன் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு தினமும் மாலை 6.30 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது.

இன்று ஞாயிற்றுக்கிழமை பதினொராம் திருவிழாவில் ரி.பிரதீபன், எ.ஜெயராமன், கே.கஜன், எஸ்.செந்தூரன் ஆகியோர் பங்குபற்றும் இசையரங்கு நிகழ்வு இடம்பெறும்.

(ம-313)

# தெய்வத் திருமகள்




விமர்சனம்

ஊட்டி அருகே ஒரு கிராமத்தில் மன வளர்ச்சி குன்றிய நிலையில் விக்ரம் வாழ்ந்து வருகிறான்.விக்ரமுக்கு அழகான பெண்குழந்தை பிறக்கிறது. விக்ரமின் மனைவி பிரசவத்தில் இறக்கிறாள். விக்ரமின் மனைவியின் தகப்பனார் தங்கள் மகளின் நினைவாக விக்ரமை ஏமாற்றிப் பேர்த்தியை அவனிடம் இருந்து பிரித்துச் செல்கிறார். சென்னைத்தெருவில் அநாதரவாக விடப்படும் விக்ரமுக்கு உதவ முன்வருகிறார் வக்கீல் அனுஷ்கா. மனவளர்ச்சி குன்றியவரிடம் குழந்தையைக் கொடுக்க முடியாது என்றதும் இந்த விடயம் கோட்டுக்குப்போகிறது. பாசமுள்ள தந்தையும் மகளும் இணைந்தார்களா என்பதுதான் இந்தப்படத்தின் கதை.

இது வரை விக்ரமின்நடிப்பில் வெளிவந்த படங்களில் இந்தப்படம் ஒரு திருப்பு முனையாக அமைகிறது. ஐந்து வயதுக்குழந்தையின் மனநிலை கொண்டவ ராக நடிப்பில் விக்ரம் வாழ்ந்திருக்கிறார்.

ஒரு காட்சியில் குழாயில் இருந்து வீணாக ஒழுகிக் கொண்டிருக்கும் தண்ணீரைக் கண்டு கொள்ளாமல் அந்த வழியே செல்லும் மக்கள் போவதும், விக்ரம் அதை மூடுவதும் அந்தக்காட்சியில் பார்வையாளர்களிடம் சிந்தனையை உண்டுபண்ணுகிறது. இந்தப் படத்தின் உயிரோட்டம் என்றால் அது விக்ரமின் குழந்தை நிலாதான்.

படத்தின் ஆரம்பக்காட்சியில் இருந்து படம் முடியும் வரை நிலாவின் காட்சி மனதைக் கவர்கிறது. விக்ரமும் நிலாவும் ஒருவர் ஒருவரோடு பேசிக்கொள்ளும் காட்சியமைப்பில் அந்தப்படம் நல்ல சிந்தனைகளையும் தோற்றுவிக்கிறது.

நிலா கேட்கும் கேள்விகளுக்குத் தனக்குத் தெரிந்த விதத்தில் விக்ரம் பதிலளிக்கும் காட்சியமைப்பில் இயக்குநரின் கதையோட்டம் செல்கிறது. விக்ரமும், நிலாவுக்கும் இடையில் இருக்கும் பாச உணர்வையும், படப்பிடிப்பு நடத்தி இருக்கும் மலைப்பகுதியும், நீரவ்ஷாவின் ஒளிப்பதிவும் கை வண்ணத்தால் இன்னும் அழகுசேர்த்திருக்கிறது.

அதாவது இயற்கையோடு இயற்கையாக ஒட்டி இருக்கிறது கதை. குழந்தையை விக்ரமோடு சேர்க்க அனுஷ்கா எந்த வேலைத்திட்டம் என்றாலும் இறங்கும் காட்சியிலும், கோட்டில் வில்லன் எதிர்க்கட்சி வக்கீல் நாசரைப் பார்த்து வாய்க்குவந்ததைச் சொல்லிவிட்டு அனுஷ்கா அலைவதும் அடுத்து என்ன என்ற எதிர்பார்ப்பை பார்வையாளர்களிடம் உருவாக்குகிறது. நா.முத்துக்குமாரின் வரிகளுக்கு இனிமையான மெட்டுக்களை கொடுத்திருக்கும் ஜீ.வி பிரகாஸ்குமாரின் பின்னணி இசையிலும் இந்தப்படத்தின் மூலம் தனக்கு ஓரிடத்தைப் பிடித்துக் கொள்வார். படத்தின் ஒவ்வொரு காட்சிகளும் உணர்வுபூர்வமான பின்னணி இசையைக் கொடுத்திருப்பது விக்ரமின் நடிப்பினை தூக்கி விட்டிருக்கிறது.''பாப்பா, வெண்ணிலவே.'' பாடல்கள் கேட்க இனிமையாக இருக்கிறது. கதை சொல்லும் பாடல் எடுத்திருக்கும்விதம் குழந்தைகளையும் கவர்ந்துள்ளது. பாட்டி வடை சுட்ட கதையை ராஜா கதையுடன் கலந்து சொல்லியிருப்பது அழகு. கள்ளங்கபடமற்ற அன்பைப் படமாக எடுத்து குழந்தைகளுடன் குடும்பமொன்றாக இருந்து படம்பார்க்க வைத்திருக்கிறது.

படம் நெடுக நகைச்சுவை பரவிக்கிடக்கிறது. இரண்டே முக்கால் மணி நேரம் ஓடுகின்ற இந்த நீளமான படத்தை தனது உணர்ச்சிகரமான திரைக்கதையால் அதை மறக்கடிக்கச் செய்திருக்கிறார் இயக்குநர் விஜய். இரத்தமும் கலவரமும்,சதையும் கவர்ச்சியையும் நம்பி உலாவரும் பாடல்களிடையே எமக்குள் உறைந்து கிடக்கும் பாச உணர்வை ''தெய்வத்திருமகள்'' மூலமாய் உணர்ச்சிபூர்வமாக சொல்லியிருப்பது பாராட்டத்தக்கது. 'ஐயாம் சாம்'' என்ற ஆங்கிலப்படத்தின் தழுவல்தான் இந்தப்படத்தின் கதை. தமிழ் சினிமாவில் ஒரு முக்கியமான படம். வக்கிர அழுக்கும் மசாலாதூசும் நிறைந்த கோடம்பாக்கத்தில் சுத்தமாக துடைத்தெறிந்து வந்த ரவிவர்மா ஓவியம் மாதிரி அத்தனை நேர்த்தியாக உள்ளது.

இந்தக்கால யுகத்தில் குடும்பமாக ஒரு படத்தைத் தியேட்டரில் பார்க்கப் போனால் பிள்ளைகளின் கண்ணைக்கட்டிக்கொண்டு தான் அந்தப்படத்தினை பார்க்க முடியும் என்று ஆரம்பகாலங்களிலேயே சொன்ன ''சிரித்திரன் சுந்தரின்'' கேலிச்சித்திரம் நினைவுக்கு வருகிறது.

ஆனால் இந்தப்படத்தினை குடும்பமாக பிள்ளைகளுடன் சென்று பார்க்கமுடியும். குழந்தைகள் இந்தப் படத்ததைப் பார்க்கின்ற போது அவர்களுக்குள்ளே நல்ல சிந்தனை இளையோடும் என்பது தெளிவாகிறது. குழந்தைகள் அவர்களாலேயே இந்தப்படத்தின் கதாபாத்திரத்துடன் ஒட்டி விடுவார்கள் என்பது ஒவ்வொரு நிலாவின் கதாபாத்திரத்திலும், விக்ரமின் குழந்தைப் பாத்திரத்திலும் வெளிப்படுவது தெரிகிறது. இந்தப்படத்தின் ஒவ்வொரு காட்சியமைப்பில் நிலாவைப்போல் விக்ரமையும் குழந்தையாக நடிக்க விட்டிருப்பது மனிதஉணர்வுகளில் சிந்திக்கக்கூடிய பல கருத்துக்களை சமூகத்துக்கு எடுத்துக் கூறி இருப்பதால் கண்டிப்பாகவே சிறுவர்கள் உள்ள குடும்பங்கள் பார்க்கவேண்டிய படம்.

- குமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய உற்பத்திகளுக்கு மன்னாரில் பற்றாக்குறையா?

மன்னாரில் நெல்லை தவிர ஏனைய எல்லா விவசாய உற்பத்திகளுக்கும் அதிகளவு பற்றாக்குறை நிலவுகின்றது.

எனினும் அரிசியை கூட உயர்ந்த விலை கொடுத்தே வாங்க வேண்டிய நிலையைத் தற்போது உள்ள சந்தை பொறிமுறை உருவாக்கியுள்ளது.

இதனால் தற்போது காணப்படும் சந்தைப் பொறி முறை தமக்குப் பொருத்தமானது இல்லை என்று மன்னார் வாசிகள் தெரிவிக்கின்றனர். மன்னார் மரக்கறிகள் தம் புள்ள மற்றும் வவுனிய சந்தை களுக்கு ஏற்றுமதி செய்யப் பட்டு, மீண்டும் மன்னார் சந்தை களுக்கு தம்புள்ள மற்றும் வவு னியா தரகர்களால் உயர்ந்த விலையுடன் கொண்டு வரப்படுகின்றன.

இதே போல, மன்னாரில் சுமார் 40 சதவீதம் அளவு மிகையாக நெல் உற்பத்தி செய்யப்படுகின்ற போதும், அரிசியை உயர்ந்த விலையில் வவுனியாவில் இருந்து இறக்குமதி செய்வதாக மன்னார் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, மன்னார் மாவட்ட செயலகத்தால் நிவாரண அரிசி வழங்குவதற்கான கேள்விப் பத்திரம் கோரும் போது, இதற்கு பொருத்தமானவர்கள் வவுனியாவில் இருந்தே தெரிவு செய்ய வேண்டிய நிலை காணப்படுவதாக ஓய்வு பெற்ற திட்டமிடல் பணிப்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

இவ்வாறு விசித்திரமான சந்தைப் பொறிமுறை மன்னாரில் நிலவுவதற்கு, தங்கு தடையின்றி தம்புள்ள, வவுனியா மரக்கறிகள் வந்து குவிவதும், எல்லா வகையான மரக்கறி மற்றும் பழங்களும் உள்ளூர் விவசாயிகளிடம் இருந்து தொடர்ச்சியாக பெற முடியாமையால் உயர்ந்த விலைக்கேனும் தம்புள்ள போன்ற பிற மாவட்ட சந்தை தரகர்களிடம் இருந்து கொள்வனவு செய்வதாக மன்னார் சந்தை வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

தமது மரக்கறிகளை கொள்வனவு செய்ய மன்னார் வியாபாரிகள் தயங்குவதால், வீட்டு வசலுக்கே வந்து எடுத்துச் செல்லும் தம்புள்ள மற்றும் வவுனியா போன்ற சந்தை தரகர்களுக்கு குறைந்த விலைக்கேனும் விற்க வேண்டி உள்ளதுடன் இதனால் மரக்கறி செய்கையில் ஊக்கம் இழந்து வருவதாக மன்னார் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, மன்னாரில் தேவையான அளவு அரிசி ஆலைகள் இல்லாமையால், சுமார் 70 சதவீதமான நெல் வவுனியா அரிசி ஆலைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, உயர்ந்த விலையுடன் அரிசியாக மன்னாருக்கு இறக்குமதி செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



மக்கள் வங்கியின் பொன்விழாக் கொண்டாட்டம் புலோலிக் கிளையில் முகாமையாளர் சி.கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற்றன. புலோலி வர்த்தகர் சங்கத் தலைவர் வ.செல்வராசா நிகழ்வில் மங்கள விளக்கேற்றுகிறார். (ம-236)



செலிங்கோ லைஃப் நெல்லியடிக் கிளையின் வாடிக்கையாளரான அச்சுவேலியைச் சேர்ந்தவரும் தேநீர்ச்சாலை உரிமையாளருமான வி.ஞானராஜ் திடீர் மரணமானதையடுத்து அவருக்கான இழப்பீட்டுத் தொகையான பத்து லட்சத்து அறுபதினாயிரத்து அறுநூற்று நாற்பது ரூபா பெறுமதியான காசோலையை நெல்லியடிக் கிளையின் அபிவிருத்தி முகாமையாளர் ரி.நிரோஜன் இறந்தவரின் மனைவியான ஞானச்சந்திராதேவியிடம் கையளிக்கின்றார். அருகில் முகாமையாளர் வி.பாஸ்கரன் விற்பனை நிறைவேற்று அதிகாரிகளான எஸ்.கஜந்தன், ரி.இராஜகோபால், விற்பனை ஆலோசகர் ஆர். யோகராஜா ஆகியோர் உள்ளனர். (ம-236)

# பணவீக்கம் அதிகரிப்பு

இலங்கையின் பணவீக்கம் மீண்டும் அதிகரித் துள்ளது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டியின் ஆண்டுக்காண்டு மாற்ற விகிதத்தின் அடிப்படையில், கடந்த யூலை மாதத்துக்கான பணவீக்கம் ஏழு புள்ளி ஐந்து சதவீதம் என அதிகரித்துள்ளது. இதுவே முன்னைய மாதத்தில் எட்டு புள்ளி ஒரு சதவீதம் எனக் குறைவாகக் காணப்பட்டதாக மத்திய வங்கியின் புள்ளி விவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கு உணவு அல்லாத பொருள்களின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணம். எனினும் உணவு மற்றும் மென் பாணங்களின் விலைகள் கடந்த மாதத்தில் சற்று வீழ்ச்சி கண்டுள்ளது என்று மத்திய வங்கி சுட்டிக்காட்டி உள்ளது.

# முற்கொடுப்பனவு அட்டையுடன் போக்குவரத்து

இனிவரும் காலங்களில் முற்கொடுப்பனவு அட்டையைப் பயன்படுத்தி பொதுப் போக்குவரத்து சேவையை இலங்கையில் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

போக்குவரத்து அமைச்சு, இது தொடர்பான சாதக பாதக நிலைமைகளை தற்போது ஆராய்ந்து வருவதாக அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் மூலம் பயணிகள் எதிர் நோக்கும் சில்லறை காசு மற்றும் போக்குவரத்து தூரம் - கட்டணம் தொடர்பான வாக்குவாதங்கள் தீர்ந்து போவதுடன் சில்லறை மிகுதிகளையும் சரியான முறையில் பெற்றுக் கொள்வதற்கு வழி பிறக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பயணிகள் போக்குவரத்து யூனியன் மற்றும் போக்கு வரத்து அதிகார சபை ஆகியன இந்த புதிய திட்டத்தில் ஆர்வமாக உள்ளதாக போக்குவரத்து அமைச்சின் செயலாளர் விக்ரர் சமரவீர தெரிவித்துள்ளார்.

இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குள் இலங்கை முழுவதும் அமுலாக இருக்கும் இந்த புதிய திட்டம் தொடர்பாக விரிவான ஆராய்வு நடத்தப்படவுள்ளது.

# தொழில் முயற்சிக்கான கடன்கள் அதிகரிப்பு

இலங்கையில் தொழில் முயற்சிகளுக்காக வர்த்தக வங்கி களால் வழங்கப்படும் கடன்களில் ஓர் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதத்தில் மட்டும் 1,793.4 மில்லியன் ரூபா வர்த்தக வங்கிகளால் வழங்கப்பட்டுள்ளதாக (34.4% அதிகரிப்பு) லங்கா பிஸ்னஸ் இணையம் தெரிவித்துள்ளது.

கடந்த 12 மாதங்களில் தனியார் துறையினருக்கு சுமார் 434.5 பில்லியன் ரூபா கடனை வர்த்தக வங்கிகள் வழங்கியுள்ளன.

இதேபோல், உள்ளூர் வர்த்தக வங்கிகளிடம் இருந்து அரசு பெறும் கடன்களும் அதிகரித்து வருகின்றன. கடந்த யூன் மாதத்தில் மட்டும் சுமார் 30.6 பில்லியன் ரூபா கடனை அரசு பெற்றுள்ளதாக லங்கா பிஸ்னஸ் இணையம் சுட்டிக் காட்டி யுள்ளது.

அத்துடன் அரசு அபிவிருத்தி பணிகளுக்கு என்று வெளிநாடு களில் இருந்துபெற்று வரும் கடன்களும் அதிகரித்து வருகின்றன. ஒரு பில்லியன் ஐக்கிய அமெக்க டொலர் பெறுமதியான கடன் பிணைப் பத்திரங்களை கடந்த மாதம் சர்வதேச நிதிச் சந்தையில் அரசு விற்று பணம் திரட்டியுள்ளது.

இவ்வாறு கடன் வழங்களில் ஏற்படும் அதிகரிப்பானது நாட்டின் பொருளாதார முயற்சிகளை தூண்டும் அதேவேளை மொத்த கேள்வியை தூண்டி பணவீக்கத்தையும் அதிகரிக்கச் செய்கின்றது.

அத்துடன் எதிர் காலத்தில் கடன் மற்றும் வட்டிக் கொடுப்பன வுச் சுமைகளை அதிகரித்து, பொருளாதார வளர்ச்சியின் நிலையான தன்மை பாதிப்படைய வாய்ப்புள்ளது.

# ஆட்டம் காணும் அமெரிக்காவின் பொருளாதாரம்

அமெரிக்காவில் தொடரும் பொருளாதார நெருக்கடி காரணமாக அதன் கடன் மீளளிக்கும் ஆற்றல் 3 ஏ என்ற அதி உயர் தரத்தில் இருந்து 2 ஏ+ என தரம் குறைக்கப்பட்டுள்ளதாக ஸ்டாண்டர்ட் அண்ட் புவர்ஸ் (Standard and Poors) என்ற தரப்படுத்தல் நிறுவனம் அறிவித்துள்ளது.

அமெரிக்கா 2007 - 2008 காலத்தில் ஏற்பட்ட நிதி நெருக்கடி நிலமைகளில் இருந்து இன்னும் மீளாத நிலையில், தற்போது மீண்டும் ஒரு பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ளது.

இதனால் உள்நாட்டு உற்பத்திகள் பாதிப்படைந்து வேலையின்மை வீதமும் ஒன்பது புள்ளி ஒரு சதவீதம் என மிக உயர்வாக காணப்படுகின்றது.

அத்துடன் வரவு செலவு திட்ட பற்றாக் குறையும் மிகவும் பாதகமான நிலையில் உள்ளதுடன், சீனா போன்ற நாடுகளில் பெருமளவு கடன்களை பெற்று பொருளாதாரத்தை இயக்கி வருகின்றது. இதனாலேயே அமெரிக்காவின் கடன் மீளளிக்கும் ஆற்றல் குறைக்கப்படுவதாக ஸ்டாண்டர்ட் அண்ட் புவர்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இவ்வாறாக அமெரிக்காவின் பொருளாதாரம் பாதிப்படையும் போதெல்லாம் முதலில் அடிவாங்குவது அமெரிக்க டொலரே.

இந்த நிலையில், ஏனைய உலக நாடுகள் தமது ஒதுக்கம் அல்லது கையிருப்பில் [illegible] அமெரிக்க [illegible]

இதனால் அவை விரும்பயோ விரும்பாமலோ, தெரிந்தோ தெரியாமலோ அமெரிக்கப் பொருளாதாரம் தாக்கப்படும் போதெல்லாம் நெருக்கடி நிலைக்கு ஆளாகின்றன.

இவ்வாறு இருக்க, இலங்கையில் தற்போது முதலீடு தொடர்பான அச்சுறுத்தல் குறைவாக காணப்படுகின்றது. பொருளாதார வளர்ச்சி வீதம், பணவீக்க வீதம், வரவு செலவு திட்டப் பற்றாக் குறை மற்றும் பொதுப்படுகடன் தொடர்பாக திருப்தியளிக்க கூடிய நிலையைக் கண்டுள்ளதால் சர்வதேச தரப்படுத்தல் நிறுவனங்கள் இரண்டினால் (Moodys Investors Service Singapore (Pvt) Ltd and Fitch Ratings) அண்மையில் [illegible]யின் கடன் மீளளிக்கும் ஆற்றல் 3 ஏ என்பதில் இருந்து 2 ஏ+ ஆக தரம் குறைக்கப்பட்டது.

இதையடுத்து கடந்த மாதம் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான கடன் பிணைப் பத்திரங்களை இலங்கை அரசு சர்வதேச நிதிச் சந்தையில் விற்பனை செய்திருந்தது.

இதேவேளை இலங்கையும் தனது ஒதுக்கு அல்லது கையிருப்பில் பெருமளவாக அமெரிக்க டொலரி லேயே பேணி வரும் நிலையில், தற்போது அமெரிக்க பொருளாதாரம் அல்லது டொலர் மீது எழுந்துள்ள சந்தேகமானது, இலங்கை அண்மையில் பெற்ற தரச் சான்றைக் கேள்வி குறியாக்கி உள்ளதாக ஆய்வாளர் கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Auto A/C



சகல வகையான
வாகனங்களுக்கும் ஏற்ற
வகையில்
உத்தரவாதத்துடன் மிகக்
குறைந்த கட்டணத்தில்
A/C
பொருத்தித்தரப்படும்.

எமது சேவைகள்....
- ★Gas மீள நிரப்புதல்...
- ★A/C வகைகள் நவீன மயப்படுத்தல்
- ★பழுது பார்த்தல்



COOL AIRS KINGS

பருத்தித்துறை வீதி, நீர்வேலிச் சந்தி, நீர்வேலி. T.P: 0777738888

## காணி விற்பனைக்கு

கைதடி நுணாவிலில் 307-308 Km இடையில் A9 வீதியில் 12 பரப்புக் காணியும், A 9 வீதியில் இருந்து 100m தூரத்தில் 30 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்குண்டு. சேர்த்தோ பகுதியாகவோ கொடுக்கப்படும்.
தொடர்பு: 021 3008944, 0772395774.

## காணி விற்பனைக்கு


மானிப்பாய் வீதி, ஒட்டுமடத்தில் ''மனுக்களனியார் ஒல்லையும் மறு பிரிவுகளும்'' செபஸ்தியான் சேர்ச்சுக்கு அருகில் 1 பரப்பும் 8.85 குளியும் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டியது
திருமதி ஜெயவீரசிங்கம்
0774431644

## காணி விற்பனைக்கு உண்டு

கோண்டாவில்,இருபாலை வீதியில்
பழனியாண்டவர் கோயிலுக்கும் வன்னிய
சிங்கம் வீதிக்கும் இடையில் 4 பரப்புக் காணி
கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0778564917

## கட்டடம் கட்டுவதற்கு

கொழும்பில் இருந்து வரவழைக்கப்பட்ட வேலையாள்கள் மூலம்
மேசன், தச்சுவேலை, மாபிள் பதித்தல்,
மின்சார வேலை, Plumbing,
Colour Washing, Pantry cup board,
முதலியன மிக அழகான முறையில் நியாயமான கூலிக்கு
குறித்த திகதியில் செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு : 0777556244





1969 ஆண்டிலிருந்து சகலவிதமான மின்சார இலத்திரனியல்
உபகரணங்களை உத்தரவாதத்துடன் வழங்கிய எமது நிறுவனம்
**Jaffna Electrical**
தற்போது தரமான கணனிகளையும் கணனி உதிரிப்பாகங்களையும்
விற்பனை செய்கின்றது என்பதை மிக மகிழ்ச்சியுடன்
தெரிவித்துக்கொள்கின்றோம்.



## JAFFNA ELECTRICAL

LG No 1 Dealer in SriLanka
Authorized Dealer for Abans

**Show Rooms :**
141,Power House Road, Jaffna.
T.P: 021 222 8378, 5766.

No.135, A-9 Road, Kilinochchi.
T.P: 021 228 0008



# நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

**உதிப்பு:**
**13.02.1945**

**உதிர்வு:**
**28.07.2011**



## அமரர்
## நல்லையா சாரதாதேவி

கடந்த 28.07.2011 அன்று காலமான எமது குடும்பத்
தலைவியின் மறைவுச் செய்தி அறிந்து ஓடிவந்து
எமக்கு ஆறுதல் தெரிவித்ததுடன் உதவிகள்,
ஒத்தாசைகள் புரிந்தோர், கண்ணீர் அஞ்சலிகள்
வெளியிட்டோர், தொலைபேசி மூலம் அனுதாபம்
தெரிவித்தோர்,மலர் வளையங்கள் சாத்தி அஞ்சலி
செலுத்தியோர் மற்றும் இறுதிக் கிரியைகளின்போது
நேரில் வந்து கலந்துகொண்ட உற்றார், உறவினர்,
நண்பர்கள் ஆகிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும்
எமது மனமார்ந்த நன்றியைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை (15.08.2011) திங்கட்கிழமை
மு.ப. 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும்
அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும்
அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய
போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

43, நெல்லியடி முருகன் வீதி,
[illegible], மீசாலை.

ந.கேதீஸ்வரன் (மகன்)
மற்றும் குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரச் சான்றிதழ் மறுக்கப்பட்ட சிமெந்து தேக்க நிலையில்

கொழும்பு, ஓக. 14

இலங்கை தரநிர்ணய நிறுவனத்தால் தரச்சான்றிதழ் வழங்காது நிறுத்தி வைக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து தேசியக் கூட்டுறவுச் சபையால் இறக்குமதி செய்யப்பட்ட சிமெந்து துறைமுகத்தில் இறக்கப்படாது உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சிமெந்தின் நிலைப்பாடு சம்பந்தமாக சரியான தீர்மானம் ஒன்றை எட்ட இயலாது போயுள்ளதாக இலங்கை தரநிர்ணய நிறுவனம் அறிவித்துள்ளது.

குறித்த நிறுவனத்தின் சிமெந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் அந்த நிறுவனம் இலங்கைக்கு எந்தவிதத்திலும் பொருள்களை ஏற்றுமதி செய்யமுடியாத நிலை உள்ளது.

அந்த இடைநிறுத்தல் நீக்கிக்கொள்ளப்பட்டதன் பின்னர் மாத்திரமே அவ்வாறு செயற்பட முடியும்.

தற்போது பிரச்சினைக்குரியதாகியுள்ள இந்த சிமெந்தின் தரத்தைப் பரிசீலனைக்கு உள்ளாக்குவதன் மூலமே தீர்மானம் ஒன்றை எட்ட முடியும் எனவும் மேற்படி நிறுவனம் தெரிவித்துள்ளது. (ம-22)

## மாபெரும் ஆடித் தள்ளுபடி

(இலுப்பையடிச் சந்திக்கும் ஆனைப்பந்திச் சந்திக்குமிடையில்)

| | | |
|---|---|---|
| ✱ இரும்புக் கட்டில் | 6000/- | 4250/- |
| ✱ கணினி மேசை | 6000/- | 4250/- |
| ✱ கணினிக் கதிரை (alpha) | 6500/- | 5250/- |
| ✱ Steel அலுமாரி | 13500/- | 11250/- |
| ✱ சாப்பாட்டு மேசை | 16500/- | 13050/- |
| ✱ சாப்பாட்டுக் கதிரை | 4250/- | 3750/- |
| ✱ மெத்தைகள் (Arpico) | | |

தொடர்புகளுக்கு: 0773583879, 021 222 7892

## தவறிவிட்டது

சாவகச்சேரியில் இருந்து கோப்பாய் வழியாக பயணத்தின்போது பேரின்பநாதன் ராஜ்குமார் என்பவரது சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் A.T.M.காட் (Com.Bank) கவருக்குள் இருந்தபடி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0776557386 என்னும் தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 17.01.1935



மறைவு: 26.07.2010

அமரர் செல்லையா வேலும்மயிலும் (குட்டி)
(பாலாவனம், சின்னாலடி, அல்வாய்)

அல்வாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா வேலும்மயிலும் அவர்களின் ஓராண்டு நினைவஞ்சலி நிகழ்வு இன்று (14.08.2011) ஞாயிற்றுக்கிழமை அல்வாய் குமிழடிப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பூஜையிலும் அன்னதான நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், அயலவர்களை அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

அல்வாய். குடும்பத்தினர்.




NATIONAL DISTRIBUTOR A Two S Mobile International.(PVT) LTD.

யாழ்ப்பாணம் 0777588128 | தென்மராட்சி மற்றும் வன்னி மாவட்டம் அபி போன் சொப் 03 கண்டி ரோட், சாவகச்சேரி. 0212270204,0772388457 | வவுனியா Grand net solution (pvt) ltd No.44 mill Rd, Vavuniya. tp:0777914915

SERVICE PROVIDER BIRD LANKA (PVT) LTD.

# கலைப்பீடத்தின் விசேட மீள் பரீட்சை

யாழ்ப்பாணம், ஓக. 14

யாழ்.பல்கலைக்கழகத்தின் கலைப் பீடத்தில் பழைய பாடத்தின் விசேட மீள் பரீட்சை எதிர்வரும் 17ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

பழைய பாடத்திட்டத்தின் கீழ் பயின்று பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்யாதுள்ள மாணவர்களுக்கான முதலாம், இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் வருட இரு அரையாண்டுக்கான மீள் பரீட்சைகள் இடம்பெறவுள்ளன. (ம-313)

# மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், ஓக. 14

சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் இயங்கும் சாவகச்சேரி கிழக்கு முன்பள்ளி மழலைகளின் மெய்வன்மைப்போட்டி நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

முன்பள்ளி பெற்றோர் அபிவிருத்திச் சங்கத் தலைவர் திருமதி ஜெ.தயாளினி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சிக் கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராஜா, சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவு சங்கத் தலைவர் சி.பூபாலசிங்கம், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ப.சஞ்சீவன் ஆகியோர் கலந்து கொள்வர். (ம-207)

# மரண அறிவித்தல்கள்

## நாகமுத்து வல்லிபுரம் (யோகலிங்கம்)



முருகன் கோயில் வீதி, கிராம்புவில், சாவகச்சேரி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து வல்லிபுரம் (யோகலிங்கம்) நேற்று (13.08.2011) சனிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் பாறுப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவபாலன், சிவப்பிரகாசம், செல்வராணி, தருமலிங்கம், காலஞ்சென்ற புஸ்பராணி மற்றும் புஸ்பமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும் மங்களாதேவி, பரமநாதன், செல்வநாயகி, சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமனும் செல்லத்துரை, காலஞ்சென்ற வியாளாச்சி, காலஞ்சென்ற கனகலிங்கம் மற்றும் யோகம்மா சிவகுரு ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் சரவணமுத்து, காலஞ்சென்ற வல்லிபுரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிவகணேசன், சிவகஜன், யதுகுலன், விஸ்ணுகா, மாதுங்கன், நர்த்தனன், யதூசிகன், பவித்திரா, பவிஷிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (13.08.2011) சனிக்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முருகன் கோயில் வீதி, கிராம்புவில்,
சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி.

(6882)

தகவல்:
குடும்பத்தினர்.

## தர்மலிங்கம் வள்ளியம்மை



ஆஸ்பத்திரி வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் வள்ளியம்மை நேற்று (13.08.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும் சிவகுமார் (கனடா), சிவபாக்கியம், கனகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவசோதி, நிர்மலாதேவி, ஜெயக்குமார் (ராசன்), சாரதாதேவி, சிவலோகநாதன் ஆகியோரின் அன்புத் தாயும் புஸ்பலீலா, இராசதுரை, தற்பராதேவி (கலா), சிவபாலன், ஜெகநாயகி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.08.2011 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விளாவெளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.

(6868)

தகவல்:
ஜெயக்குமார் (ராசன்),
கலா (மருமகள்).

# A/LEVEL
# மாபெரும் இலவச கருத்தரங்கு
# வணிகக்கல்வி
# BUSSINESS STUDIES

## 16 AUGUST 2011

விரிவுரை நிகழ்த்துபவர்
கொழும்பின் முன்னணி ஆசிரியர்

**S.K.சோதிலிங்கம்** (BBA.Hons,Dip.in edu)
(Staff Royal College,Col -07)


இடம் : நாவலர் கலாசார மண்டபம்
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

நேரம் : காலை 8.30 தொடக்கம் மாலை 5.00 வரை

400 அனுமதிகள் மட்டுமே வழங்கப்படும்

மேலதிக விபரங்களுக்கு 0772487881

# கண்ணீர் அஞ்சலி



சமாஜ இயக்குநர் சபையின் உறுப்பினரும் ஆலோசகருமான திருமதி வக்சலா அமிர்தலிங்கம் (உதவிப் பணிப்பாளர், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், யாழ். மாவட்டம்) அவர்களின் பாசமிகு தந்தை

**சின்னத்தம்பி சிவகுரு J.P**
(ஓய்வுபெற்ற அதிபர்) அவர்கள்

2011.08.01 அன்று காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதோடு, அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பணிப்பாளர்களும், பணியாளர்களும்,
யாழ்.மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம்,
87, பலாலி வீதி, திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ விநாயகர் ஜோதிடம்

வெங்கடேஷ் சுவாமிகள்

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரசித்தி பெற்ற ஜோதிட வல்லுனர். கைரேகை, ஜாதகம், திருமணயோகம், வியாபாரம், வெளிநாட்டுப் பயணம், கல்வி, குழந்தை பாக்கியம் வேறு என்ன பிரச்சினையாக இருந்தாலும் இவரைச் சந்தித்து தீர்வு காணுங்கள். தொடர்பு - இல. 112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P 0773741117, 0771656527. நேரம் - காலை 7.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை. கட்டணம் 101/=

## வீடு காணியுடன் விற்பனைக்கு

யாழ்ப்பாண ஆஸ்பத்திரி வீதிக்கு 15 யார் தூரத்தில் 4½ பரப்பு (45.87 PERCHASE) நாற் சதுரக்காணி பழைய வீட்டுடன், சுற்றுமதில், நல்ல தண்ணீர் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தரகர் வேண்டாம். தொடர்பு:- 0777667011, 0112586435

## வீடு வாடகைக்கு

உப்பு மடப் பிள்ளையார் வீதி, K.K.S. வீதி, கோண்டாவில் மேற்கு கோண்டாவில் (யாழ்ப்பாணத்திலிருந்து 4 km) இரு மாடி கட்டடம் நவீன முறையில் அமைக்கப்பட்டது. 8 அறைகள் இணைந்த குளியலறை மற்றும் 8 வாகனம் நிறுத்தக் கூடிய தரிப்பிட வசதி கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: 0114854556, 0770443306, 0112472275

(6653)

## தேவை

அவிசாவளையில் கோழி பண்ணைக்கு லேபர்ஸ், சுப்பர்வைசர், டிரைவர் உடனடியாக தேவை. தொடர்பு - 2362899/ 0773263512

## நாய்க்குட்டி விற்பனைக்கு

தடுப்பூசி, பூச்சி மருந்து ஒழுங்காக கொடுக்கப்பட்ட இரண்டு மாதம் நிரம்பிய நல்ல இன அல்சேஷன் பெண் நாய்க்குட்டி ஒன்று விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0777506601, 0774349489

## தவறிவிட்டது

திருச்சபை வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய் எனும் முகவரியுடைய திருமதி ஜெபராஜா தேவ ரஞ்சினி என்பவரின் தே. அ.அட்டை (665033953 V) வீட்டுக்கும் மானிப்பாய் சந்தைக்குமிடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் மேற் குறிப்பிட்ட முகவரியுடனோ அல்லது 0212228042 என்ற தொ.பே. இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளவும்.

## வீடு வாடகை

தொண்டமானாறு, வல்வை வீதியில் இரு வீடுகள் வாடகைக்குண்டு.
தொடர்புகளுக்கு - 0776905096

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1971 ம் ஆம் ஆண்டு பிறந்த சதயம் 2ம் பாதம் கும்பராசி மணமகளுக்கு வெளிநாட்டு உள்நாட்டு மண மகனை எதிர்பார்க்கின்றோம். தொடர்பு கொள்வதற்கு:- 0771275312


# விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவுக்கு நிதி

வலி- வடக்கு, ஓக.14

பன்முகப்படுத்திய வரவு செலவுத் திட்டத்தின் கீழ் உடுவில் இந்து இளைஞர் சங்கத்துக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்குவதற்கென 52 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் இந்த நிதியை பன்முகப் படுத்திய வரவு செலவுத்திட்டத்தின் கீழ் வழங்கியுள்ளார்.

இந்த நிதியின் மூலம் உடுவில் இந்து இளைஞர் கழகத்துக்கான விளையாட்டு உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

(ம-86)


## ஊழியர் தேவை

எமது ஸ்தாபனத்தில் பொருள்கள் பொதி செய்வதற்கும், சிட்டைகளின் படி பொருள்களை எடுத்து பொதி செய்வதற்கும் முன்பு சில்லறைக் கடையில் வேலை செய்து அனுபவமுள்ள க.பொ.த (சா.த) படித்த ஆண்கள்.

மாதச் சம்பளம்:12000/=
மதிய போசனம்:100/=

மற்றும் முன் அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் திறமைசாலிகளுக்கு ஒரு நாளைக்கு ரூ.350 வழங்கப்படும்.

* கிராம அலுவரின் சிபார்சுக் கடிதம் மற்றும் சுய விவரத்துடன் நேரில் வரவும்.

சிவா நறுமணப் பூங்கா, இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
0212222567

(சி/2490)

## சிறுநீரகம் தேவை

61 வயதுடைய A+ ஆண் சிறுநீரக நோயாளிக்கு 35 வயதுக்கு உட்பட்ட A+ அல்லது O+ ஆணின் சிறுநீரகம் தேவை. கொடுத்து உதவக் கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 0770293249, 0722899669

## வீட்டுப் பணிப்பெண் தேவை

கொழும்பில் வசிக்கும் கௌரவமான குடும்பத்துக்குப் பணிப்பெண் தேவை. வெளிநாடுகளில் பணிப்பெண்ணாகப் பணிபுரிந்தவர்கள் விரும்பத்தக்கது.

சகல வசதிகளுடன் கூடிய தங்குமிடமும் உணவும் வழங்கப்படும். சம்பளம் பேசித் தீர்க்கலாம். மனம் நிறைவான வேதனம் வழங்கப்படும்.

தொடர்பு: 0776428502, 0212222490

## மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



பேராசிரியர் க.தேவராஜா
(14.08.2011)

உன்னதமாய் பணிகளாற்றி
உள்ளங்களை வெற்றி கொண்ட
தின்னிகரில் தகைமையாள – நீங்கள்
தழைத்து என்றும் செழித்து வாழி

வாழ்வகச் சமூகம்,
சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம்.

(C/2668)

The World Of **Hayleys** Since 1878

Expanding the frontiers of our people, our company and our country

Hayleys Group ranked among Sri Lanka's largest and most diversified public companies with strong presence in global markets and manufacturing, agriculture and agri business, transportation and infrastructure, consumer as well as in leisure and aviation.

# Join the World of Hayleys

## Hayleys Consumer Products Ltd (HCPL)

Hayleys Consumer Products has an extensive product portfolio that covers imaging & information, Lighting, Healthcare and FMCG's. Hayleys Consumer Products Ltd is the strategic partner for world leading brands such as Phillips, Fujifilm, Gillette, Pantene, Head & Shoulders, Whisper, Pampers, Vicks, Tide and Downy.

With the expansion of the business the company is looking for dynamic and result oriented individuals for the following positions:

### SALES ASSISTANTS/TRAINEE SALES ASSISTANTS (MALES / FEMALES)

Selected candidates should be willing to work in a supermarket based in Jaffna.

You will be responsible for performing all sales related duties as per the instructions from the Head of the supermarket. This may include guiding customers correctly, handling stocks and shelves, and taking care of promotions and schemes.

You should have passed the GCE A/L. You should be computer literate with a flair for marketing and sales. Prior experience in a supermarket is advantageous.

The upper age limit for this position is 30 years.

### SALES REPRESENTATIVES (MALES / FEMALES)

You will be responsible for marketing our range of P&G brands such as Tide, Gillette, Pantene, Head & Shoulders, Pringles, Whisper, Vicks, Downy, Olay, Pampers based in the North & East area.

You would possess two passes at the GCE A/Levels. Experience in selling FMCG products will be an advantage. The upper age limit for this position is 25 years.

The remuneration plan for the above positions is competitive and the rewards are performance-driven.

If you think you have what it takes to be successful in any of these challenging roles, please apply within 10 days of this publication by email to careers@consumer.hayleys.com or by post to Head-Human Resources, Hayleys Consumer Products Ltd, No 25, Foster Lane, Colombo 10 indicating the position applied for on the subject line of the email or on the envelope.

You can also apply online at www.hayleyscareers.com

Influencing will not have any bearing on the selection process, which is merit-based.

www.hayleys.com

Hayleys CONSUMER

METROOF

Metecno லங்கா, மெட் ரெக்னோ குரூப் குழுமத்தின் உப நிறுவனமாகும். மெட்டெக்னோ உலகிலேயே பெரிய அளவில் Panels தயாரிக்கும் நிறுவனம். கட்டுமானத்துறை தொழிலுக்கு மேல் பூச்சு கொண்ட உருக்கு கூரை, சுவர், மேல் மறைப்புகள், உதிரிப்பாகங்கள் மற்றும் சான்விச் Panels களையும் வழங்கி உதவுகின்றது.

### WALK IN INTERVIEW
### SALES COORDINATOR – JAFFNA BRANCH

விண்ணப்பதாரிகள் கீழ்க்காணும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

* ஜி.சி.ஈ.உயர்தரம்
* உயர்தர கணனி அறிவு
* ஆங்கிலத்தில் தொடர்பாடல் மிக முக்கியம்
* 26 வயதுக்குட்பட்ட ஆண் விரும்பத்தக்கது.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரி எமது நிறுவனத்தின் யாழ்ப்பாணக்கிளையின் சகல வியாபார செயல்பாடுகளையும் ஒருங்கிணைப்பதற்கு இவரே பொறுப்பாக இருப்பார்.

பொருத்தமான விண்ணப்பதாரிக்கு கவர்ச்சியான கொடுப்பனவுப்பொதியும் மேலதிக வருமானமும் வழங்கப்படும். தகுதியுடையவர்கள் நேர்முகப்பரீட்சைக்கு பின்வரும் முகவரிக்கு 17.08.2011 பிற்பகல் 2.00pm - 5.00pm மணிக்கு நேரில் வரவும்.

**Euroveille Guest House, 17, Agrarian Service Lane, (Off Point Pedro Road), Nallur, Jaffna.**

Human Resource Manager.

metecno

**METECNO LANKA [PVT] LTD**
185, Koratota, Kaduwela. Email: methrd@metroof.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு விற்பனைக்கு

தெகிவளையில் Galle Roadற்கு மிக அருகில் அமைதியானதும் பாதுகாப்பானதும் ஆன சூழலில் புதிதாக ஆரம்பிக்கப்பட் டுள்ள Apartmentல் 3B/R, 2B/R, 1B/R வீடுகள் 44 இலட்சத்தில் இருந்து விற்பனைக்குண்டு. முற்பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்க.

**0777763148**

## காணி தேவை

வேலணை நகரை அண்மித்ததாக மூன்று பரப்பு அல்லது அதற்கு மேற்பட்ட காணி தேவை.

தொடர்புகளுக்கு-
0773208634, 0772683602

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பருத்தித்துறை மேல் வீதியில் 30 பரப்புக் காணி வீட்டுடன் நன்னீர் கிணற்றுடன் விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு-
0212223088,
0775581639, 0777570215

## விற்பனைக்கு

சங்கானை, தேவாலய வீதியில் **(Church Road)** சகல வசதிகளுடன் 6 பரப்பு காணியில் 6 அறை கொண்ட வீடும், கட்டுடை, மானிப்பாயில் சகல வசதிகளுடன் 5 பரப்பு காணியில் 6 அறை கொண்ட வீடும் உடனடி விற்பனைக்குண்டு.

**Tel : 077 5988413, 077 6003591**

## The Home Builders

உங்கள் விருப்பத்திற் கேற்ப வாஸ்த்து முறைபடி
தரமான மனைகளை அமைப்பதற்கு
இப்போதே எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்



நீங்கள் தொடர்பு கொள்ளவிரும்பினால்:
பியங்கனி : 0779253305
மார்க் : 0789595380

**இலவச சலுகைகள்:**

- உங்கள் கனவு இல்லங்களின் மாதிரி வடிவங்களை இலவசமாக பெற்றுத்தருவோம்
- உங்கள் கனவு இல்லத்திற்கான அனைத்து துறைகளின் அனுமதிகளை பெற்றுத்தருவோம்

உங்கள் இடத்திற்கே வந்து அவசியமான விபரங்களைப் பெற்றுத்தருவோம்

## தவறிவிட்டது

ஆறுமுகம் வீதி, சுன்னாகம் மேற்கு என்னும் முகவரியைச் சேர்ந்த சரவணபவான் சோபிதன் என்பவரது தேசிய அ.அடையாள அட்டை [922322856V] 25.07.2011 அன்று யாழ். நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். தொ.பே-0770783959

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், அத்தியடி, அம்பல வாணர் வீதியில் அமைந்துள்ள 2,4 பரப்புக் காணிகள் வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0779239334

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
19 : 08 : 1986

கயவனின் பிடியில்
31 : 07 : 2007

திதி: பிரதமை

**அமரர் வடிவநாதன் கஜப்பிரவீன் (கஜன்)**

ஆயிரம் உறவுகள் இருந்தாலும் ஆலமரம் போல்
உன் நிழலில் ஆறுவோம் என்றிருந்தோம்
ஆண்டு நான்கு ஆனதையா ஆறிவில்லை உன் துயரம்


உனது பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
உனது அன்பு மகன் கஜசாந்.

வ.வடிவநாதன்
7/1, அன்னசத்திர லேன்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

## இன்று மணி விழாக் காணும் நாயகனை வாழ்த்துகின்றோம்

பேராசிரியர்

**க.தேவராஜா**



வளம் பெற்ற தாவடியூர் புகழ்பெற்று
வாழ பணி செய்த செம்மல் நீங்கள்
சீரோங்கிக் கல்விக் கலை யோங்கி
வாழும் சேவையின் ஊற்று நீங்கள்
பேராங்கி உந்தன் புகழோங்கி -வாழ
ஊரோங்கி வாழ்த்துகின்றோம்.

தலைவர்: ம.சிறிகாந்தன்
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், உடுவில் பிரிவு,
தாவடி தெற்கு மற்றும் நிர்வாகத்தினர்.

## உயிரூட்டுகின்றோம்



பழுதான தொழில்சார் மின்சார உபகரணங்களைத் திருத்திக்கொள் ளவும், புதிய உபகரணங்களையும் உதிரிப்பாகங்களையும் கொள்வனவு செய்யவும், எங்களது ஸ்தாபனத்தை நாடுங்கள்.

**உத்தரவாதங்கள் எங்களது நிலையத்திலேயே, உடனே செய்து கொடுக்கப்படும்.**
**(கொம்பனிக்கு அனுப்பி செய்வதில்லை)**

செயின்சோ, ஜெனறேட்டர், மரவேலை இயந்திரம், மின் உபகரணங்கள், வோசிங் மெசின்,மின்சார கேத்தல்கள், றயிஸ் குக்கர் போன்றவற்றின் உதிரிப்பாகங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**GREEN HOUSE TRADING COMPANY (PVT) LTD.**

இல. 05, கருவப்புலம் ஒழுங்கை, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு. (திருநெல்வேலி). 021 2226459.
(நல்லூர் பிரதேச செயலகத்திற்கு அருகில்)

## கறையான் தொல்லையை கட்டுப்படுத்துவோமா!

நவீன முறையில் பணம் செலவழித்து கட்டப்போகும் /கட்டிய கட்டிடங்கள், வீடுகள் ஆகியவற்றை கறையானிடம் இருந்து பாதுகாப்பதற்கு நவீன சிகிச்சை முறை இப்பொழுது நாடு முழுவதும் எமது சேவையில்......



**TERMINATORS**
Hotline **0777810282**

# மரண அறிவித்தல்

## திருமதி தங்கமணி தியாகராஜா



குருமண்வெளியைப் பிறப்பிடமாகவும், உயிலங்குளம் மற்றும் கந்தர்மடம் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும், தற்காலிகமாக நோர்வேயை (Sandnes) வசிப்பிடமாகக் கொண்டிருந்த திருமதி தங்கமணி தியாகராஜா கடந்த (02.08.2011) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வீரசிங்கஜயரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தியாகராஜாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ராசதுரை, சந்திரகுமாரி மற்றும் குலேஸ்வரி (இந்தியா), நகுலன் (டென்மார்க்), உதயன் (இலங்கை), நாகேஸ்வரி (நோர்வே), பாபு (ஜேர்மனி), ஈசன்(நோர்வே), கௌரி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் ராசநாயகம் (இந்தியா), சிவா (நோர்வே), கண்ணன் (கனடா), கஸ்தூரி (டென்மார்க்), கவிதா (இலங்கை), பௌசி (ஜேர்மனி), சுபாசி (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியும் பபி, நளாயினி, சுகாசினி, குயின், சந்திரா, ரேகன், ஜீவா, ராஜன் (ஜனா), தர்சி, தர்சன் (Jey), நிருக்ஷன், ஜனு, நிலுக்ஷன், மாதங்கி, மதுசனன், மயுதா, மதுஷன், விதுஷன், நிருஷா, சாதுர்யன், ஆதி, செங்கயா, செந்துஜன், ஷோபா, வனா, விஜி, நவநீதன், சாந்தன், பார்த் தீபன், கீதா, கண்ணா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அஞ்சலி, நித்திஸ், சஜன், சந்தியா, சந் தோஷ், சந்துஜா, விதுசன், யுவன்சன், அனுஷா, கிளிண்டன், சோனா, ஹரிணி, மிதுன், மிதுஸ் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(15.08.2011) திங்கட்கிழமை பிற்பகல் 553, NEW STREET உப்புக்குளம், மன்னாரில் பூதவுடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் 16.08.2011 செவ்வாய்க்கிழமை உயிலங்குளம் புங்கந்தாழ்வில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**553, புதிய வீதி,**
**உப்புக்குளம், மன்னார்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி
## ரம்யா ரவி

அன்னையின் மடியில்
14.11.1988

ஆண்டவன் அடியில்
14.08.2006

அம்மா எங்கள் அன்புச் செல்வமே!
ஆண்டுகள் ஐந்தானால் என்ன? ஆயிரம்
ஆண்டுகள் சென்றாலும் எங்கள் நெஞ்சிருக்கும் வரை
உன் நினைவு நிறைந்திருக்கும்
உன் உருவம் தான் அழிந்தாலும்
உன் செல்ல முகம் எம் வீட்டில்
அணையா தீபமாக வீட்டுக்கும்

*தற்காலிக முகவரி:*
விஸ்வமடு, நாதன் குடியிருப்பு.
*நி.முகவரி:*
கேவில், முள்ளியான்,
வடமராட்சி கிழக்கு.

உன் பிரிவால் துயருற்றிருக்கும்:
அப்பா, அம்மா, தம்பிமார்,
தங்கைமார் மற்றும் உறவினர்கள்.

# மரண அறிவித்தல்



## முத்தையா செல்வராசா

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் தும்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா செல்வராசா 12.08.2011 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா- அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் நடராசாவின் அன்புச் சகோதரனும் திருமதி திலகவதி (இளைப்பாறிய ஆசிரியை)யின் அன்புக் கணவரும் திருமதி இராசவதி சிவயோகசுந்தரம் (லண்டன்), திருமதி இராசேஸ்வரி ஈஸ்வரன் (கனடா), செ.செல்வக்குமாரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பூ.சிவயோகசுந்தரன், க.ஈஸ்வரன், திருமதி சந்திரமலர் ஆகியோரின் அன்பு மாமனும் சி.சுப்பிரமணியம் (இளைப்பாறிய முன்னாள் ஆசிரியர்- வேலாயுதம் மகாவித்தியாலயம்) திருமதி இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மூத்த மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் 16.08.2011 செவ்வாய்க்கிழமை நடைபெற்று பூதவுடல் தும்பளை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தும்பளை வீதி, பருத்தித்துறை. (சி/2692) மனைவி.

# மரண அறிவித்தல்



## ஆறுமுகம் தனபாலசிங்கம் (சோதிலிங்கம் சுவாமிகள்)

இணுவில் கிழக்கு இணுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தனபாலசிங்கம் 12.08.2011 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - தங்கராசம் தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் இராசமலரின் அன்புக் கணவரும் சரஸ்வதி,கருணானந்தமூர்த்தி (சுவிஸ்), கமலநாயகி (இந்தியா) ஆகியோரின் சகோதரரும் சற்குருதாஸ், சுகிர்தாஸ் (பிரான்ஸ்), குகதாசினி (NIIT), நித்தியதாஸ், இராமதாஸ், காலம் சென்ற யோகிதாஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.08.2011) ஞாயிற்றுக்கிழமை பி.ப 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் பொது மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புகையிரத வீதி,
இணுவில் கிழக்கு,இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர் (6886)

# பயிற்சி முகாம்

தென்மராட்சி, ஒக.14

தேசியமட்ட மெய்வன்மைப் போட்டிகளில் பங்குபற்றவுள்ள வடமாகாண பாடசாலைகளின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான பயிற்சி முகாம் எதிர்வரும் 17, 18, 19 ஆகிய திகதிகளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

தேசியமட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்ட தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த மாணவர்களையும் ஆசிரியர்களையும் பயிற்சி முகாமில் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.

(ம-202)

வாழ்வின் சகல சௌபாக்கியங்களும் தரும்
சோ.கூ.றே.மணிமேர்க்கஸ் பெட்டகம்
கடன்தொல்லை, கல்வியில் முன்னேற்றமின்மை, வேலையின்மையும் பணக்கஷ்டமும், திருமணத் தடை, கொடிய நோய் களின் அவஸ்தை போன்ற வாழ்வின் மிக முக்கிய 5 பிரச்சினைகளுக்கு ஒரே தீர்வு.
மனை, கடை, மற்றும் சகல வியாபார ஸ்தாபனங்களிலும் வைக்க உன்னத பலன் கிடைக்கும்.
விலை ரூபா 5100.00 மட்டும்.
எம்மிடம் ஓடர்செய்து பெற்றுக்கொண்டவர்களில் சிலர் பயன்படுத்த ஆரம்பித்து சில தினங்களுக்குள் சிற்சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ள தாகத் தொலைபேசி மூலம் சான்று கூறுகின்றனர்.
உங்கள் இருப்பிடங்களுக்குத் தருவிப்பதற்கு அழையுங்கள்.
077 1399950.

# ஆண் விடுதிக்கு பராமரிப்பாளர் தேவை

யாழ்ப்பாணம், மாணிப்பாயில் உள்ள எமது சிறுவர் இல்லத்துக்கு ஆண் பராமரிப்பாளர் மற்றும் தோட்ட உதவியாளர்கள் தேவை. உங்கள் சுயவிவரக் கோவையை பின்வரும் விலாசத்துக்கு உடன் அனுப்பி வைக்கவும். வயது எல்லை 35 இற்கு மேற்பட்டோர்.
கிறிஸ்தவர்கள் விரும்பத்தக்கது.

Hanna's Relief Swedish Mission,
19/1,Beach Road,Mount Lavinia.
e-mail-elimcvh@gmail.com
Tel:0112724110

# மரண அறிவித்தல்

## திருமதி பெருமாள் முத்தம்மா



கொழும்பைப் பிறப்பிடமாகவும் அம்மன் கோயிலடி, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பெருமாள் முத்தம்மா 13.08.2011 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா பெருமாளின் அன்பு மனைவியும் சுப்பிரமணியம் (பொறியியலாளர்), பத்மநாதன் (கணக்காளர்), புஷ்பவனம் (ஓய்வுபெற்ற லிகிதர்), மனோன்மணி (ஓய்வுபெற்ற ஆசிரியை), தனபாக்கியம், மகே ஸ்வரி, சுந்தரலிங்கம் (கனடா), யோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வநாதன், யோகநாதன், துரைசிங்கம், பாலசிங்கம், அயலின், செல்லம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியை), மாலா ஆகியோரின் மாமியும் அமிரா (உதவிமுகாமையாளர்), ஜனகன், கனினா (உதவிமுகாமையாளர்), அகிலன் (பொறியியலாளர்), யதுகுலன் (பொறியியலாளர் -சிங்கப்பூர்), கபிலன்(பொறியியலாளர்- லண்டன்), தனசீலன், கிரிசாந்தியா (MBBS அமெரிக்கா), தர்சினி(கொழும்பு), பார்த்தீபன், கோகுலன், கலைமகள் (கொமர்சல் வங்கி), தர்சன், கபிலன், பகீரதன், கவினா(கனடா), கிசானி (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் திபியா, சர்வின், அஜித்தா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (14.08.2011) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஊரிப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

தகவல்: திருமதி மனோன்மணி துரைசிங்கம் (மகள்)

# மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் லண்டன் PR வயது 34 திருவோணம் 8 செவ். பாவம் 69. சிவந்த அழகிய மணமகள் தேவை.
தொடர்பு: 077 5409345

# வீடு வாடகைக்குண்டு

இராமலிங்கம் வீதி, பூங்கனிச் சோலைக்கருகில் மீள் புனரமைக்கப்பட்ட 07 அறைகள் 02 குளியலறைகள், 01 சமையலறை விசாலமான வரவேற்புக்கூடம் என்பன அமைந்த 04 பக்கமும் சுற்றுமதில் கொண்ட நவீன வடிவிலமைந்த வீடு வாடகைக்குண்டு.

தொடர்புகளுக்கு:- 0777207260
0750406396

# விற்பனைக்கு

211, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் கடையும் நிலமும் குளி 15.99 விசாலமுள்ளது. விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 075 7463938
(5624)

# பிரத்தியேக வகுப்பு

தரம் 9 - G.C.E. (O/L) கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய வகுப்புகளுக்கும்
G.C.E. (A/L), B.A வகுப்புகள்
அரசியல், வணிகக்கல்வி.
அனுபவ பட்டதாரி ஆசிரியரால் குழுவாகவோ, தனிப்பட்ட ரீதியாகவோ கற்பிக்கப்படும்.
தொடர்பு. 0750497577

# வீடு/ காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியில் இருந்து நல்லூர் பக்கம் 100 யார் தூரம் பருத்தித்துறை வீதியில் 4 ¾ (நான்கே முக்கால்) பரப்புடன் 5 அறைகள் கொண்ட வீடும், 2000 சதுர அடி கொண்ட ஸ்ரோர்ஸ் (Stores) உடன் 15 வாகனங்கள் நிறுத்தக் கூடிய தரிப்பிட வசதிகளும் கொண்ட காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:
0112715130,
0779775017

STUDY IN UK, CANADA, USA, New Zealand CYPRUS, POLAND & GERMANY
UK → பல்கலைக்கழகத்தில் குறைந்த கட்டணம் + 20 Hrs. PT + Paid Internship
USA → கட்டணம் ஆகக்கூடியது 2 லட்சம் மட்டுமே. IELTS -5.0
CANADA → IELTS, Sponsor தேவையில்லை. No age limit
POLAND → பகுதி நேர தொழில் வாய்ப்பு, விசா கிடைத்த பின்பு Tuition fee செலுத்த வேண்டும்.
GERMANY → ஜேர்மன் மொழி தெரியவேண்டிய அவசியமில்லை + With / Without IELTS
CYPRUS → பகுதி நேர தொழில் வாய்ப்பு, விசா கிடைத்த பின்பு Tuition fee செலுத்த வேண்டும்.
Next Intake: Sept.2011
UKRAINE - Aerospace ,Aeronautical Eng, MBBS, Nursing , Tele communication ,Bio Medical Science at lower cost
பஸ்னா - 0778 438403, அல்சரா - 0778339943
READ International
E-mail: read.int@gmail.com
No:201-1/1A, Galle Road, Dehiwala ( Opposite to The Finance/HNB)

Ready For Shipment
Toyota Axio for permit holders
Immediate Sale
Toyota Axio 141, 2011 Brand-new, 0 Mileage,
White color with beige interior & more option
C.I.F Colombo-1,720,000 jpy only





Contact:
Mr.Senthil
0772365177 (Wellawatta)

MyWay இன் பயிற்சிநெறியில் புதிதாக இணைய விரும்பும் பல்கலைக்கழக, வெளிவாரி பட்டப்படிப்பு மாணவர்கள், வெளிநாடு செல்லும் மாணவர்களுக்கான முதலாவது வகுப்பு
14.08.2011 ஞாயிற்று கிழமை மதியம் 12.30 - 2.00
இவ்வகுப்பில் கலந்துகொள்வோர் அதன்பின் ஒரு மாத வாரநாள் (திங்கள்-வெள்ளி) மற்றும் 3 மாத வார இறுதி (சனி, ஞாயிறு) வகுப்புக்களில் இணைந்து பயிற்சிபெறலாம்
இவ்வகுப்புக்கான அனுமதி மற்றும் பாடநெறி புத்தகம் இலவசம்
ஆங்கிலம் கதைக்க மற்றும் பரீட்சைகளில் தேர்ச்சி பெற விரும்பும் ஒவ்வொருவரும் கண்டிப்பாக பயிற்சிபெற வேண்டிய பயிற்சிநெறி
MyWay 182 1/5, STANLEY ROAD, JAFFNA
077 33 63 456 021 222 9505

HERO CYCLES
KENTON
ஹீரோ, கென்டன் காட்சியறை









சிறியோர் முதல் பெரியோர் வரையானஅனைவரினதும்
சொகுசான சைக்கிள் சவாரிக்கு Hero, மவுண்டன், BMX சைக்கிள்
மற்றும் புதிய லேடீஸ் பைக் என்பனவற்றை எமது காட்சியறையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்
பலவர்ணங்களில் புதிய லேடீஸ் சைக்கிள்
ஒரிஜினல் ஹீரோ லேடீஸ் சைக்கிள்களும் ஆண்கள் சைக்கிள்களும் பெற்றுக்கொள்ளலாம்.
ஹீரோ, கென்டன் விநியோகத்தர்கள்
ஸ்ரார் ரேடர்ஸ்
இல.258, 260, மானிப்பாய் வீதி.
ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 4921672
(49)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# அனைத்தும் இழந்தது இந்தியா

மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணியை இன்னிங்ஸ் மற்றும் 242 ஓட்டங்களால் நேற்று வெற்றி கொண்டதன் மூலம் தொடரை இங்கிலாந்து அணி தனதாக்கியதுடன் 32 வருடங்களின் பின்னர் சர்வதேச டெஸ்ட் அரங்கில் முதலிடத்தை பிடித்தது.

அலிஸ்ரர் குக் அபாரமாக ஆடி 294 ஓட்டங்களைக் குவிக்க மறுமுனையில் இங்கிலாந்து பந்து வீச்சாளர்கள் இந்திய அணிக்கு நெருக்கடி கொடுக்க இந்த வரலாற்று வெற்றியை இங்கிலாந்து தனது சொந்த மண்ணில் முன்னர் சொன்னவாறு பதிவு செய்து கொண்டது.

வேகத்தில் உடைந்தது இந்தியாவின் தடுப்புச் சுவர்....



டிராவிட் ஆட்டமிழப்பு

இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணம் செய்து இந்திய அணி விளையாடி வருகின்றது. முன்னதாக நடைபெற்று முடிந்த இரண்டு டெஸ்ட் ஆட்டங்களிலும் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றிருந்தது. இந்த நிலையில் இங்கிலாந்து அணிக்கும் இந்திய அணிக்கும் இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் பிறிமின்ஹாமில் 10 ஆம் திகதி ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணித் தலைவர் ஸ்ரோரஸ் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார்.

அதன் படி துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, இங்கிலாந்து அணியின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் 224 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இந்திய அணி சார்பில் அதிக பட்சமாக டோனி 77 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் புரோட், பிறஸ்னன் தலா 4 விக்கெட்டுக்கள் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி தனது முதலாவது இன்னிங்ஸில் 710 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களை இழந்து தனது ஆட்டத்தை இடைநிறுத்தியது. இங்கிலாந்து அணி சார்பாக ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய குக் 294 ஓட்டங்களைப் பெற்றார். மோர்கன் 104 ஓட்டங்களையும், ஸ்ரோரஸ் 87, பீற்றர்ஸன் 63, பிறஸ்னன் ஆட்டமிழக்காமல் 53 ஓட்டங்களையும் பெற்றனர். உதிரிகளாக 63 ஓட்டங்கள் இந்திய அணியால் வழங்கப்பட்டது. பந்து வீச்சில் அமித் மிஷ்ரா 3 விக்கெட்டுக்களையும், பிரவீன் 2 விக்கெட்டுக்களையும், இசாந் சர்மா மற்றும் ரெய்னா தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

486 ஓட்டங்கள் பின்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய இந்திய அணிக்கு அதிர்ச்சி கொடுத்தது இங்கிலாந்து. முதலிரண்டு டெஸ்டிலும் விளையாடாமல் இந்த ஆட்டத்துக்கு அழைக்கப்பட்ட சேவாக் முதல் இன்னிங்ஸில் எவ்வாறு ஓட்டமெதனையும் பெறாமல் முதல் பந்தில் வெளியேறினாரோ அதே போன்று இரண்டாவது இன்னிங்ஸிலும் முதலாவது பந்திலேயே வெளியேறினார். சேவாக்கின் விக்கெட்டை அன்டர்ஸன் கைப்பற்றினார்.

நேற்று முன்தினம் ஆட்ட நேர முடிவின்போது டிராவிட் 18 ஓட்டங்களுடனும், கம்பீர் 14 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். நேற்றைய ஆட்டம் ஆரம்பமானவுடனேயே கம்பீர் மேலதிகமாக எதுவித ஓட்டங்களையும் பெறாமல் அன்டர்ஸன் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறி இந்தியாவின் சரிவை தொடக்கி வைத்தார். தொடர்ந்து டிராவிட் 18 ஓட்டங்களுடன் அன்டர்ஸன் பந்தில் ஆட்டமிழந்து வெளியேற இந்திய அணி 40 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை இழந்தது. லக்ஸ்மன் 2, ரெய்னா 10 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து வெளியேறினர்.

சச்சின் [illegible] 40 [illegible]ளைப் பெற்ற நிலையில் துரதிர்ஷ்டமான முறையில் ரன் அவுட்டில் ஆட்டமிழந்தார். அமித் மிஷ்ரா 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இந்திய அணி 130 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது.

முதல் இன்னிங்ஸில் டோனி - பிரவீன் இணைந்து சிறப்பாக ஆடியது போன்று இரண்டாவது இன்னிங்ஸிலும் இருவரும் இணைந்து சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினர். பிரவீன் குமார் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். சிறிது நேரம் இங்கிலாந்து அணியின் பந்து வீச்சுக்களை தொடர்ச்சியாக எல்லைக் கோட்டுக்கு விரட்டியடித்தார். 18 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகளுடன் 40 ஓட்டங்களைப் பெற்று புரோட்டின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். எட்டாவது விக்கெட்டுக்காக டோனி - பிரவீன் 75 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்து கொண்டனர். மறு முனையில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய டோனி தனது அரைச் சதத்தை இரண்டாவது இன்னிங்ஸிலும் கடந்தார். பிரவீனின் ஆட்டமிழப்பை தொடர்ந்து களமிறங்கிய இசாந் சர்மா, சிறீசாந் இருவரும் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேற இந்திய அணி இன்னிங்ஸ் தோல்வியடைந்தது. டோனி ஆட்டமிழக்காமல் 74 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். இரண்டு இன்னிங்ஸிலும் அணித் தலைவர் என்ற ரீதியில் டோனி போராடினாலும் இறுதியில் தொடரையும் இழந்து டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தையும் இழந்தது.

ஏமாறும் ரசிகர்கள்....




சச்சின் டெண்டுல்கர்

இரண்டாவது இன்னிங்ஸில் இங்கிலாந்து சார்பாக பந்து வீச்சில் அன்டர்ஸன் 4 விக்கெட்டுக்களையும், புரோட், சுவான் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இங்கிலாந்தின் வெற்றிக்கு வித்திட்ட குக் ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இந்தியாவுடனான தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் தரவரிசையில் முதலிடத்தை பிடிப்போம் என்று கூறினார்கள் இங்கிலாந்து வீரர்கள். அதேபோன்று இந்திய அணியை தோற்கடித்து இந்திய அணியிடம் இரண்டு வருடங்களாக இருந்த முதலிடத்தை 32 ஆண்டுகளின் பின்னர் கிரிக்கெட்டை கண்டுபிடித்த இங்கிலாந்து வீரர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

ஏன் இந்த நடிப்பு...?



பிரவீன் குமார்

இதுவோர் புதுவிளையாட்டு..



ரெய்னா

நினைத்ததை நடத்தியே...!



ஸ்ரோரஸ்

இதேவேளை இந்திய அணி மீது அந்த அணியின் முன்னாள் வீரர்களினால் முன்வைக்கப்பட்டு வந்த குற்றச்சாட்டுக்களும் உண்மையானது போல் இந்திய அணியின் இந்த தோல்வி அமைந்துள்ளது. இந்திய வீரர்கள் நாட்டுக்காக விளையாடாமல் ஐ.பி.எல் போன்ற பணம் கொழிக்கும் விளையாட்டுக்களிலேயே அதிகம் விளையாடுவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனால்தான் பல மூத்த வீரர்கள் மேற்கிந்தியத்தீவுகளுடனான டெஸ்ட் தொடரையும் புறக்கணித்தனர். இந்தத் தொடரை புறக்கணித்ததால்தான் இவ்வாறான நிலைமை ஏற்பட்டதாக இந்திய அணியின் முன்னாள் தலைவர் கவாஸ்கர் தெரிவித்திருந்தார்.

முயன்று பார்த்தேன் முடியல...!



டோனி

